


தமிழ்நாடு அரசின்
நான்காண்டுப்
பணிகள்
தொகுப்பு மலர்

# தமிழரசு

16-6-1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2015

ரக்தாக்ஷி — ஆனி 3

# பொறுப்புமிக்க பணி தொடர்கிறது...

1905ல் தொடங்கிய தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி
விவசாய மற்றும் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கும் அடித்தள மக்களின்
முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

இந்த வங்கியின் முதல் கடனே காஞ்சீபுரம் நகர நெசவாளர்
சங்கத்திற்குத்தான் வழங்கப்பட்டது.

அடித்தள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும்
நாட்டு முன்னேற்றத்திற்கும் இந்த வங்கி முழு ஈடுபாட்டுடன்
பணியாற்றுகிறது.

TNSC BANK

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்**
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை-600 001.



# தமிழக அரசின் நான்காண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

## இந்த அரசு மக்கள் அரசு!



எங்களால் ஏழைகள் ஏற்றம் பெற்றிருக்கின்றனர் - எளியவர்கள் முகத்தில் மலர்ச்சி நிழல் படர்ந்திருக்கின்றது. அன்றாடங் காய்ச்சிகளும்- அயராது பாடுபடுபவர்களும் நல்வாழ்வு பெறுவோம் என்று நம்பியிருக்கின்றனர்.

இந்த அரசு வெறும் அதிகார அரசல்ல! ஆணவ அரசல்ல! உழவர்கள் அரசு! உழைத்துப் பிழைக்கும் உழைப்பாளர் கூட்டங்களின் அரசு! மக்கள் அரசு! இந்த அரசுக்கு மக்கள் ஒத்துழைப்பு தேவை.

-பேரறிஞர் அண்ணா

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015

ரக்தாக்ஷி — ஆனி 3

மலர் : 14 இதழ் : 24

16-6-1984



மக்கள் கொடுக்கும் வரிப் பணம் மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன் படவேண்டும். மக்களுடன் கூடியிரு; மக்களுடன் பழகு; அவர்களுடன் வாழு; அவர்களுக்காகத் திட்டம் தீட்டிச் செயல்படு. மக்களிடம் நீ போ – செய் என்றெல்லாம் அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் நான் செய்கிறேன்; இந்த அரசு செய்கிறது.

அப்படி பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை எந்த வகையில் நிறைவேற்ற வேண்டுமோ அந்த வகையில் நிறைவேற்றி வருகிறோம்; வரிப்பணம் எவ்வளவு கிடைக்கிறதோ, அதை மக்களுக்கே செலவு செய்வதுதான் எங்கள் பணி!

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.







# இடையறாது தொடர்ந்திடும்

தமிழ்நாட்டு வரலாற்றில் ஏழுஆண்டுகள் என்பது மிகவும் குறுகியதொரு காலகட்டமே என்றாலும், 1977 முதல் 1984 வரையிலான இந்த ஏழு ஆண்டுகளைப் பின்னோக்கிப் பார்க்கிறபோது நமது முன்னேற்றப் பயணம் அரியதொரு சாதனையாக அமைந்துள்ளதைக் காண்கிறேன். வெற்றிப் பெருமிதம் உள்ளத்தில் எழுகிறது! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மந்தம் ஏற்பட்டு விட்டதாக அண்மைக் கால ஆண்டுகளில் சொல்லப்பட்டு வருகிறது. ஆதாரமற்ற இந்தக் குற்றச் சாட்டுக்கு 1977 முதல் 1984 வரையுள்ள நமது சாதனைகளின் புள்ளி விவர ஆதாரங் களையே விளக்கமாகத் தந்து விடையிறுக்க முடியும்.





இந்திய நாட்டின் மொத்தத் தொழில் வளர்ச்சி 1979-ல் 1.2 % இருந்தபோது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 5.2 சதவிகிதமாக இருந்தது. அகில இந்திய தொழில் வளர்ச்சி 1982-ல் 4.2 சதவிகிதமாக இருந்தபோது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 12.1 சதவிகிதமாக இருந்தது. தமிழ்நாட்டில் 1977 முதல் 1983 வரை ரூ. 850 கோடி முதலீட்டில் 449 பெரிய, நடுத்தரத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன; அதனால் வேலை வாய்ப்புக்களும் பெருகின. தொழில் வளர்ச்சிக்காக 1976-77ல் பயன்படுத்தப்பட்ட மின் சக்தி அளவு 30.51 மில்லியன் யூனிட் என்ற நிலை மாறி 1981-ல் 40.99 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுதொழில்களின் வளர்ச்சியும் அவ்வாறே சிறந்தோங்கியுள்ளது. 1978 மார்ச் வரை 18,789 சிறுதொழில்களே பதிவுச் சான்றுகள் பெற்றிருந்தன. 1983 டிசம்பரில் அவை 48,667 ஆகப் பெருகின, பின்தங்கிய பகுதிகளில் சிறு தொழில்களை வளர்க்கக் கூட்டுறவுத் துறை முழுமூச்சுடன் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளது. 1978-ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 297 ஆக இருந்தது. அது 1983 இறுதியில் 913 ஆக வளர்ந்தது.

சிறுதொழில்களையும், குடிசைத்தொழில்களையும் வளர்த்து, அவைகளால் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புக்களையும் பெருக்கி உதவவேண்டும் என்பதே அரசின் கொள்கையும், திட்டமுமாகும். இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு டிட்கோ, சிப்காட், டி. ஐ. ஐ. சி. போன்ற தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் பெரிதும் உதவுகின்றன. இத்தொழில் வளர்ச்சி நிறுவனங்கள், எல்லா வகையான தொழில்களுக்கும் அரசு அளித்துள்ள பல்வேறு உதவிகளையும், பாதுகாப்பையும் வழங்கி வருகின்றன.

பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து நிதிக் கடன் பெற்றுப் பயன்பெறுவதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் மத்திய அரசின் குறிப்பிடத்தக்க தொழில் திட்டம் எதுவும் தமிழகத்தில் உருவாக்கப்படவில்லை என்றாலும், தமிழ்நாட்டில் தொழில் துறை முதலீடு உயர்ந்தே இருந்துள்ளது. இந்தியாவின் மொத்த சிமெண்ட் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 20 சதவிகிதமாகும்; நூல் உற்பத்தியில் 25 சதவிகிதமும் மோட்டார் வாகனங்களுக்குரிய பாகங்களின் உற்பத்தியில் 25சதவிகிதமும் தமிழகத்திற்குரியன. தொழிலில் பின்தங்கியுள்ள நிலையை நீக்கவும் வேலை

# இலட்சியப் பயணம்

## மாண்புமிகு முதல்வர்

# டாக்டர் எம்.ஜி.ஆர்





யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அனைத்துப் பகுதிகளிலும் வேலை வாய்ப்புப் பெருகிடவும் சிறு தொழில் வளர்ச்சியில் அரசு பெரிதும் அக்கறை காட்டிவருகிறது.

கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு, தமிழகத்திலேயே மிகப் பெரிய காகித ஆலை ஒன்றை ரூ. 200 கோடி செலவில், திருச்சி மாவட்டத்திலுள்ள புகளூரில் உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

கூட்டுத் துறையும், கூட்டுறவுத் துறையும், தனியார் துறையும் நடத்தி வரும் பல்வேறு சர்க்கரை ஆலைகள் நம் மாநிலத்தில் உள்ளன. மேலும் மூன்று ஆலைகள்தொடங்க மத்திய அரசு அனுமதி தந்துள்ளது. கூட்டுறவுத் துறை இந்த ஆண்டு ஒரு புதிய சர்க்கரை ஆலையை நிறுவும்.

**மின்சக்தி :**

தமிழகத்தில் 1977-78-ல் 2424 மெகாவாட் மின்சக்தி தான் உற்பத்தி செய்யப்பட்டது. 1983-84ல் அது 3344 மெகாவாட் ஆகப் பெருகியுள்ளது. அதாவது கடந்த ஆறு ஆண்டுகளில் 920 மெகாவாட் மின்சக்தி அதிகரித்துள்ளது.

இந்த விவரங்கள் எல்லாம் கடந்த ஏழாண்டுகளில் தமிழ்நாடு பெற்றுள்ள அபார முன்னேற்றத்தைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுவனவாகும். இதற்கும் மேல் நாம் ஏன் வளர்ச்சியடைந்திருக்கக் கூடாது என்று கேட்டால் அதற்குக் காரணம் நாம் முயற்சி எடுக்கவில்லை என்பதல்ல; நாட்டின் கூட்டாட்சி அமைப்பில் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள உரிமையின் வரம்பே காரணமாகும். பெருந்தொழில்கள் எல்லாம் மத்திய அரசின் அனுமதியையும், நிதியையுமே சார்ந்துள்ளன.

தொழில் வளர்ச்சியைப் பற்றிப்பேசும் போது, தமிழ்நாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையேஅடிப்படையாகக்கொண்டது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, இந்த விவசாய அடித்தளத்தை வலுப்படுத்த நம் அரசு அனைத்தையும் செய்து வருகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கிறோமோ, அவ்வாறே விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் அனைத்தையும் செய்து வருகிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே குறைந்தபட்சக் கூலி நிர்ணய சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விவசாய விளைபொருளுக்கு ஆதரவு விலை தருகிறோம். குறைந்த விலையில் உரம் கிடைக்கச் செய்கிறோம். வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட சிறிய விவசாயிகளுக்கு உதவுவதற்காக அவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய 210 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். வறுமையில் வாடும் வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவிட முதியோர் உதவித் திட்டத்தில் அவர்களையும் சேர்த்துள்ளோம். இவையெல்லாம் சிறிய விவசாயிகளையும், ஏழை விவசாயத் தொழிலாளர்களையும் காக்கவேண்டும் என்ற உணர்வோடு செய்யப்படுபவை. மேலும் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிவகை காண்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்றும் செயற்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் மாபெரும் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள மகத்தானதொரு திட்டமான தன்னிறைவுத் திட்டத்தை நம் அரசு செயற்படுத்தி வருவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின் கீழ்,கிராமப்புறங்களில் வாழும்

மக்களுக்கெல்லாம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான இணைப்புச் சாலைகள், பேருந்துப் போக்குவரத்து, பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், சுகாதார வசதிகள், மின்வசதி ஆகிய அனைத்தையும் அளித்துள்ளோம். ஒவ்வொரு கிராமமும் இந்த அடிப்படை வசதிகளைப் பெற்றாக வேண்டும் என்பதே நமது குறிக்கோளாகும். வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட இத்திட்டத்தை கிராமப் புறங்களிலிருந்து நகரியங்களுக்கும், நகரங்களுக்கும்கூட விரிவுபடுத்தியுள்ளோம். கிராமப்புற மின்வளர்ச்சித் திட்டத்தின்படி தெரு விளக்குகளுக்கு மட்டுமல்ல, குடிசைகளுக்கும்கூட மின்வசதி அளித்துள்ளோம். இதனால் இதுவரை, கிராமங்களில் 5.62 இலட்சம் குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

களை—அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஆகியவற்றை நல்லோர் புகழ் நிலைக்கவும் நல்ல தமிழ் தழைக்கவும் உருவாக்கியதாகும்.

நல்லிளம் குழந்தைகளே நாட்டின் செல்வங்கள்! குழந்தைகள் நலம் பெற்று வளரவும் குணம் பெற்று சிறக்கவும் அவர்களுக்கு சுத்தமான சுற்றுப்புறமும், ஊட்டச்சத்தும் மருத்துவ வசதியும், கல்வியும் தேவை. தமிழ்நாட்டில் 75 இலட்சம் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் 85 சதவிகிதத்தினர் கிராமங்களில் வாழும் ஏழைக் குழந்தைகளாவர். அவர்களுக்குள்ளும் 63 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே வாடிக் கொண்டிருக்



கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு மொத்த இந்தியாவிலும் பெருமிதப்படத் தக்க இடத்தைப் பெற்று விளங்குகிறது. வரவுசெலவுத் திட்டத்தில் கல்விக்கு மிக அதிகத் தொகையினை தொடர்ந்து வழங்கிவருவதுடன் ஆண்டுதோறும் அத்தொகையைக் கூடுதலாக்கியும் வருகிறோம். இந்த நிதிஆண்டில் கல்விக்கு ரூ. 400 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. +2 கல்வி முறையை உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு வந்ததால் கிராமப்புறங்களிலும் மேல்நிலைக் கல்வி பரவவும், கிராமங்களும் உயர்கல்வியை எளிதில் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளியிலிருந்து வெளியேறியவுடன் எந்த மாணவனும் எளிதில் வேலை தேடிக்கொண்டு சமுதாயத்தில் தக்கதோர் நிலையினைப் பெற உதவுவதற்கேற்ற வகையில் தொடக்க நிலையிலிருந்தே தொழிற்கல்வி கற்பிக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

நம் அரசு ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கது ஐந்து பெரும் பல்கலைக் கழகங்

**கருத்தடை, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் நல்ல பலன்களைக் கொடுத்துள்ளன.**

**கருத்தடையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது. அடுத்த படியாக கேரளா, பாண்டிச்சேரி மாநிலங்கள், உள்ளன.**

**குடும்பக் கட்டுப்பாட்டில் தமிழகம் முன்னணியில் இருப்பதைப் பாராட்டுகிறேன்.**

**மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

**திரு சங்கரானந்த் (27.5.84)**

# கண்கவர் வெண்கலச் சிலையே...



# கவின்மிகு பூம்புகார் கலையே!

நுட்பமான வேலைப்பாடு. புராண காலத்தை நினைவுகூறும் கலை நயம். என்றும் எங்கும் எவரும் போற்றும் எழில் மயம்.

பித்தளை, வெண்கலம், செம்பு, கல், தந்தம் மற்றும் சந்தன மரத்தில் வடித்த, தென்னிந்திய புராண – பழங்காலப் படிமங்கள்.

பூம்புகார் — கலையும் எழிலும் இணைந்து கவிபாடும்.....!

## பூம்புகார்

விற்பனை நிலையம்

818, அண்ணா சாலை, சென்னை-600 002.

தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சி இணையகம்
26, டாக்டர் முனியப்பா சாலை, சென்னை—600 010.

DIPR/214/84




கிறார்கள். சக்தியும், உடல் நலமும் பெற்று வாழ உதவ வேண்டியது அரசின் முதன்மையான கடமை என்று அரசியல் சட்டமே வலியுறுத்துகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், இந்தியாவிலேயே புதுமையான, புரட்சிகரமான 'முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டத்தை' 2 முதல் 14 வயதுள்ள ஏழைக் குழந்தைகளுக்காக தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வருகிறது.

நாள்தோறும், கிராமங்களிலும், நகரங்களிலும் 2 முதல் 14 வயது வரையிலான 65 இலட்சம் குழந்தைகள் சத்துணவு உண்கிறார்கள். இந்த சத்துணவுத் திட்டத்தில் உதவித் தொகை பெறும் முதியோரும் முன்னாள் இராணுவ வீரர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்முதியோர் தொகை 1,99,639 ஆகும். அவர்களில் ஆதரவற்ற பெண்களும், விதவைகளும் அடங்குவர். இச்சத்துணவுத் திட்டம் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது என்பது முக்கியமான அம்சமாகும். இதனால் பெண்களும், ஆதிதிராவிடர்களும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சத்துணவுத் திட்டத்தால் பள்ளியில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடியுள்ளது என்பது மட்டுமல்ல, இடையிலேயே படிப்பை நிறுத்திக் கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நலப் பாதுகாப்புச் சங்கம் (UNICEF) உதவியுடன் நடத்திய ஆய்வு, இத்திட்டத்தால் குழந்தைகளின் நலமும் வளமும் சிறந்துள்ளது என்பதுடன் குழந்தைகளின் நோய்களும் குறைந்துள்ளன என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. சத்துணவின்மை; சுத்தமின்மை, ஏழ்மை, எழுத்தறிவின்மை ஆகிய பல்வேறு இழிநிலைகளையும் இல்லாதொழிக்க எழுந்ததோர் புரட்சிமிகு திட்டந்தான் இச்சத்துணவுத் திட்டமாகும்.

சென்னைக்கு கிருஷ்ணா நீர் கொண்டு வருவது என்ற கனவு 102 ஆண்டுகளுக்கு முன்பே கருத்தில் உதித்தது. அந்த நீண்ட காலக் கனவு ஆந்திர முதல்வர் என். டி. இராமாராவ் அவர்களின் கூட்டுறவோடு

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு ஒருமுறை கடும் வறட்சியும் 2 முறை வெள்ளப் பாதிப்பும் ஏற்பட்டது. இந்த நிலையிலும் இந்த ஆண்டு தமிழகத்தில் 65 லட்சம் டன் உணவு தானியங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

1981–82ல் 58 லட்சம் டன் தானிய உற்பத்தி செய்து தமிழகத்தில் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாதனையை விஞ்சும் வகையில் இந்த ஆண்டு அதிக உணவு உற்பத்தி செய்யக் காரணமான தமிழக அரசு பாராட்டுக்குரியது.

மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு ராவ்பீரேந்திர சிங்.



# இதைவிடச் சிறந்த கடிகாரம் இந்தியாவில் உண்டோ?

## எல்காட் அளிக்கும் புதிய மாடல் LTW 11/12.

**இதுபோன்ற செயல்திறன் மிக்க குவார்ட்ஸ் கடிகாரங்களை இந்த விலையில் வாங்க முடியாது.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|



| நாள், மணி, நிமிடம், தேதி. | நாள், மணி, நிமிடம், வினாடி | முழு காலண்டர் | ஸ்டாப் வாட்ச் | அலாரம் & ஸ்நூஸ் |
|---|---|---|---|---|

- எல்காட்டின் புதிய மாடல், அலாரம், ஸ்டாப் வாட்ச், எல்லா ஆண்டுகளுக்கான காலண்டர்... போன்ற 12 செயல்திறன்கள் கொண்டது. மற்ற குவார்ட்ஸ் அனலாக் கடிகாரங்களிலோ 5 செயல்திறன்களுக்கு மேல் கிடையாது.
- நேரம் காட்டுவதில் 20% அதிக நுட்பம் ஒரு மாதத்திற்கு வேறுபாடு 12 வினாடிகள்தான்!
- வினாடிக்கு 32,768 முறை துடிக்கும் குவார்ட்ஸ் கிறிஸ்டல். இது இதர இயந்திர கடிகாரங்களால் எட்டிப் பிடிக்க முடியாத எண்ணிக்கை
- நவீன டிசைன், கீறல் விழாத கண்ணாடி முகப்பு. அதிர்ச்சியைத் தாங்க வல்லது. தண்ணீர் உள்ளே போகாது.
- நெடுநாள் உழைக்கும் பாட்டரி.
- எல்காட் திறனும் உலகப் புகழ் பெற்ற இட்டாச்சி (HITACHI) தொழில் நுணுக்கமும் இணைந்து உருவானது.
- ஒரு வருட உத்திரவாதம்.
- **இத்தனைக்கும் விலை ரூ. 447/- மட்டுமே (உள்ளூர் வரிகள் தனி)**
- இது போன்ற சிறந்த குவார்ட்ஸ் கடிகாரத்தை இந்த விலையில் எங்கும் வாங்க முடியாது.

## எல்காட்

**குவார்ட்ஸ் டிஜிட்டல்**

**தமிழ்நாடு மின் அணு நிறுவனம்**
735, அண்ணா சாலை,
சென்னை 600 002

**எல்லா வகையிலும் சிறந்த எல்காட் இருக்க, ஏதோ ஒரு கடிகாரம் எதற்கு?**

DIPR/446/33/ADWAVE/ELCOT/2406

நனவாகியிருக்கிறது; நடைமுறைக்கு வந்துள்ளது. குடிதண்ணீர் இல்லாமல் குமுறிக் கிடந்த சென்னையின் தேவையை முழுமையாக நிறைவு செய்ய இத்திட்டம் உதவும். கடந்த 1983ஆம்ஆண்டு மே திங்களில் பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளும் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது.



நகரங்களிலும் பேரூர்ப் பகுதிகளிலும் கூட குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது. பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையிலும், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள குடிநீர்த் தேவைகளை நிறைவேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒல்லும் வகையில் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டு செயற்பட்டு வருகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் பொருளாதார அடிப்படையில் வலிமை பெற்று முன்னேறுவதற்குக் கடன் வழங்கி உதவிடப் பல்வேறு துறைகளின் செயல்முறைகளையும் ஒருமுகப்படுத்தி விரைவுபடுத்துவதற்காக நிதி நிறுவனத்துறை ஒன்றை அண்மையில் அரசு உருவாக்கியுள்ளது. பின்தங்கிய பிரிவினருக்கு உதவிடத் தேவைப்படும் கடன் தொகைகளை நிதிநிறுவனங்களிடமிருந்து அரசுத்துறைகள் பெறுவதற்கு இந்த நிதி நிறுவனத்துறை உதவுகிறது. இதன் பணிகளால் ஆதிதிராவிடர்கள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர், தொழிற்கலைஞர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் ஆகியோர் பயனடைந்துள்ளனர்.

வேலைகிடைக்காத படித்த ஏழை இளைஞர்களின் இன்னல்களை நீக்கவும் அவர்களில் குறிப்பிட்ட வேலைக்குத் தகுதி உள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தேவைப்படும் உதவிகளை அளிக்கவும் வேலைவாய்ப்புச் சேவைப் பிரிவு அமைக்கப்பட்டது. இதனால் 1980 முதல் 1983 வரை ஏறத்தாழ இருபதாயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு வேலைகளில் அமர்த்தப்பட்டனர்.

ஆதிதிராவிடர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனுக்கு முதலிடம் தந்து அவர்களை முன்னேற்ற, அரசு முயன்று வருகிறது. கடந்த 1980 முதல் 1984 வரையுள்ள நான்காண்டுகளில் 7.20 இலட்சம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களில் பெரும்பாலோருக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி ஆகிய அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு தனது அறிக்கையை விரைவில் அளிக்கும். பின்தங்கியோர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் பின்தங்கியோரின் பொருளாதார மேம்பாட்டுக்குப் பல்வேறு துறைகளில் பெரிதும் துணைபுரிந்து வருகிறது.



பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குப் புதிய வாயில்களைத் திறந்துள்ளது. இப்புதிய இருபது அம்சத் திட்டத்தில் பல்வேறு அம்சங்களைச் செயற்படுத்துவதில் இந்தியாவில் உள்ள மாநிலங்கள் பலவற்றில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1982-83ல் சாதனை அடிப்படையில் தமிழ்நாடே முதலிடம் பெற்று,பாராட்டப்பட்டுள்ளது. அந்தச் சாதனை வேகம் மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையில் — சட்டம் ஒழுங்குக்கு எவ்வித பாதகமும் நேராத வகையில் மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிர்வாக யந்திரம் இயங்க வேண்டும் இதுவே எங்களுடைய அரசியல் சமுதாய தத்துவமாகும். நாங்கள் இதுவரை சாதித்த சாதனைகளைக் காட்டி மெத்தனமாகஇருந்து விடப் போவதில்லை புதியதோர் சமுதாய அமைப்பு என்னும் இலட்சியபுரியை நோக்கி நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருவோம். மக்களுக்கு மகத்தான முறையில் தொண்டாற்ற வேண்டுவதற்காக ஈடு இணையற்ற விசுவாசத்துடன், கடமைப் பற்றுடன், தமிழக மாந்தரின் மாபெரும் ஆதரவுடன் எங்களது இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து தொய்வின்றி நடந்து கொண்டே இருக்கும்.

*அண்ணா நாமம் வாழ்க!*

# புதியதோர் உலகம் செய்வோம்!

- தமிழகத்தில் வாழும் அனைத்து மொழி மாணவர்களும் தத்தம் தாய்மொழியில் கல்வி பயில 6 மொழிகளில் பாடநூல்கள்

- கல்லூரி மாணவர்கள் தாய்மொழியில் கல்வி பயிலத் தமிழில் ஏறத்தாழ ஆயிரம் பாட நூல்கள் / பார்வை நூல்கள்

- மாணவர்களுக்குத் தத்தம் பள்ளி வாயிலாகச் சலுகை. விலையில் தரமான குறிப்பேடுகள் - பயிற்சி ஏடுகள்

- தமிழ் மண்ணில் ஓர் அறிவியல் புரட்சிக்கு வித்திடும் இலட்சியத்தை ஏற்று இயங்குகிறோம்.

## தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை-600 006.

**டி. கே. சீனிவாசன்,**

**மேலாண்மை இயக்குநர்.**

**தே**சிய மாதிரி ஆய்வு மதிப்பீட்டின்படி, நமது மாநிலத்தில் தேசிய மக்கள் தொகை சராசரி 48.13 சதவீதம் என்றிருக்க, 57.2 சதவீதம் மக்கள் தொகையினர் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளனர்.

அனைத்திந்திய அடிப்படையில் உள்ள இந்தக்கணக்கைக்கருத்தில் கொண்டு பார்த்தால், நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளோரைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டில் இவர்களின் எண்ணிக்கை இரண்டாவது நிலையில் உள்ளது. அதாவது, நமது மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் 237.06 இலட்சம் பேர் வாழ்கின்றனர்.

நமது ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக அமைப்பு ரீதியில், ஒருங்கிணைந்த வகையில் நிறுவன நிதியைத் திரட்டும் அவசரப் பணியைக் கவனிக்கும் பொருட்டும், சமுதாயத்தில் மேற்கூறிய நலிந்த பிரிவினரின் வாழ்வுத் தரத்தை உயர்த்த வங்கிக் கடனுதவிக்கு வழி வகை செய்வதற்கும் மாநில அளவில் ஒரு அமைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அரசு தலைமைச் செயலகத்தில் 'நிதி நிறுவனங்கள் துறை' என்னும் புதிய துறையை 14-7-1983 முதல் ஏற்படுத்தியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியின் கீழ் புதிய துறை அமைக்கப்பட்டவுடன், அது தன் பணியை ஆர்வத்துடன் தொடங்கியது. 1983-ஆம் ஆண்டு செப்டம்பர்—அக்டோபர் திங்களில் வங்கிகளின் மூலம், மாநிலம் முழுவதும் 1,70,564 பேருக்குக் கடன்கள் வழங்குவதற்காக முனைப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியது. அவர்களில் 56,966 பேர் ஆதிதிராவிடர் - பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்கள். திட்டமிட்ட முறையில் இவர்களை சமூக - பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையச் செய்வது இந்த அரசின் உறுதியான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் இவ்வினத்தின் முன்னேற்றத்திற்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முனைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 37.76 கோடி வழங்கப்பட்டது. இதில் ரூபாய் 30.10 கோடி வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றதாகும். எஞ்சிய தொகை, தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு



# நலிந்தோர்க்கு உதவும் நிதி நிறுவனத் துறை

**மாண்புமிகு நிதி அமைச்சர்**
**டாக்டர் நாவலர்**
## இரா. நெடுஞ்செழியன்

திட்டங்களின் கீழ் அரசு உதவித் தொகையாக வழங்கியதாகும்.

1984 மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில், தமிழ்நாட்டில் நலிந்த பிரிவினர் 1,76,000 நபர்களுக்கு வங்கிகள் மூலம் சுமார் ரூபாய் 41 கோடி அளவிற்குக்கடன் உதவி அளிக்கப்பட்டு அவர்கள் சுயமாகத் தொழில்களைத் துவங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

வங்கிகளிடமிருந்து கடன் பெற்று ஆதாயமுள்ள புதிய தொழில்களைத் தொடங்க உதவும் நிறுவன நிதி வளர் சீரமைப்பின் பயன் பற்றி நலிவடைந்த பிரிவினர் நன்கு தெரிந்து கொள்ளும் பொருட்டும் சென்னை மாநகரில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்குக் கடன்கள் வழங்கவும், 26-10-83ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார். இவ்விழாவில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த 15.000 பேருக்குக் கடன் வழங்கப்பட்டது. கடன் வழங்கும் திட்டத்தில் 48 வங்கிகள் பங்கு பெற்றன.

**நிறுவன நிதிவளச் சீர்மைப் பிரிவுப் பணிகள்**

கடன் தொகை, மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும்போது நலிந்தபிரிவினரின் பொருளாதார நிலைஉயரும். இவ்வழியில், நலிந்த பிரிவினரிடையே ஒரு சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்கள் துறை நலிந்த பிரிவினர் கடன் தொகையைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து நீக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மூன்று இணை இயக்குநர்களைக் கொண்ட நிறுவன நிதிவளச் சீரமைப் பிரிவு. (Institutional Finance Special cell ) என்றழைக்கப்படும் பிரிவு ஒன்று 1983 அக்டோபர் திங்களில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு இணை இயக்குநருக்கும் அவரது செயல் வரம்புப் பகுதியாக 5 அல்லது 6 மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கள அளவில் குறைபாடுகள் ஏதேனும் எடுத்துக் கூறப்பட்டிருப்பின், அவற்றை நீக்குவதன் மூலம் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்துவதில் மேற்சொன்ன இணை இயக்குநர்கள் மாவட்ட ஆட்சியருக்கும் முதன்மை வங்கி அமைப்பாளர்களுக்கும் ( Lead Bank convenors ) உதவி புரிகின்றனர். மேலும் அவர்கள் மாவட்ட ஆலோசனைக் குழுக்களின் பணிகளிலும் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கு கொண்டு, குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான உதவியை நல்குகின்றனர். அவர்கள் குறித்த காலத்திற்கொருமுறை பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆண்டு செயல் திட்டங்களில் எய்திய சாதனைகள் குறித்து ஆய்வு செய்து, சாதனைகள் குறைந்துள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு முதன்மை வங்கிகளையும் ( Lead Banks ) மாவட்ட ஆட்சியரையும் கலந்தாலோசித்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இணை இயக்குநர்களிடம் ஒப்படைத்துள்ள மற்றுமொரு முக்கியமான பணி, நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களை அவர்கள் பயன்படுத்துவது குறித்து மதிப்பீடு செய்வதாகும். இதற்காக வினாப் படிவம் ஒன்று வரையறுக்கப்பட்டுள்ளது. இத்துடன் கடன் பெறுவோர் வசிக்கின்ற இடங்கள் அல்லது அவர்கள் வணிகம் நடத்தும் இடங்களை இணை இயக்குநர்கள் சென்று பார்வையிட்டு, நிறுவன நிதியுதவி மூலம் ஏற்படுத்திய சொத்து இருப்புகளைச் சரிபார்த்து, அவர்களுடைய பொருளாதார நிலை எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மதிப்பிடுகின்றனர்.

இந்த நிதியுதவி மூலம் பயனடைவோரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒவ்வொரு வினாப் படிவத்திலும் ஒட்டப்படுகிறது. இவ்வாறு செய்வதனால், (1) கடன் உரிய நபருக்குத்தான் வழங்கப்பட்டுள்ளதா என்றும், (2) கடன் எக்காரியத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளதோ அக்காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும் சரிபார்க்கத் துறைக்கு ஏதுவாகிறது.

நிறுவன நிதிவளச் சீர்மைப் பிரிவு, வங்கி வசதிகள் இல்லாத பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்துவதையும் கவனித்துக் கொள்கிறது. இணை இயக்குநர்கள் மாவட்டங்களைப் பார்வையிடச் செல்லும்போது முதன்மை வங்கி அமைப்பாளர்களையும் மாவட்ட ஆட்சியரையும் கலந்தாலோசித்து பின்தங்கிய பகுதிகளில் புதிய கிளைகளை அமைப்பதன் அவசியத்தைக் கண்டறிந்து பொருத்தமான தொடர் நடவடிக்கையை எடுக்கின்றனர்.

**இப் புதிய துறையானது, ஏனைய வளர்ச்சித் துறைகளுடன் நெருங்கி ஒத்துழைத்துச் செயல்பட்டு வருகிறது. படித்து, வேலை வாய்ப்**



குமரி மாவட்டம் காரவளை, நீண்டகரை ஏ. கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராஜம்மாள் (விதவை) வங்கிக் கடன் பெற்று கோரைப் பாய் நெய்கிறார்.



**நலிந்தோருக்குக் கடன் உதவி வழங்கும் விழாவில் (26.10.83) மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி உடல் ஊனமுற்ற ஒருவர்க்குக் காசோலை வழங்குகிறார்.**

**பற்ற இளைஞர்களுக்கான தலைமை அமைச்சரின் சுய வேலை வாய்ப்புத் தனித் திட்டத்தின்கீழ்** (Prime Minister's Special Employment Programme for the Educated Unemployed) 1983-84ல் 24,000 **பேர் பயனடைவதற்கான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது.**

**இத்திட்டத்தின்கீழ் பயனடைவோர் ஒருவருக்கு அதிகபட்சமாக** 25,000 **ரூபாய் வரையில் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.** 31-3-1984 **தேதி வரை இத்திட்டத்தின்கீழ் ரூபாய்** 33.15 **கோடி ரூபாய் வரையில் வங்கிகள் கடன் கொடுத்துள்ளன. இதில்** 21,247 **பேர்கள் பயன் அடைந்துள்ளனர். இதேபோல், தமிழ்நாடு கிராமப்புற இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்** (Trysem) **பயிற்சி பெற்றோருக்குத் திட்டம் ஒன்றை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ்** 31-3-1984 **வரை வங்கிகள் சுமார்** 161.49 **இலட்ச ரூபாய்கள்** 3,303 **பேர்களுக்குக் கடனாக அளித்துள்ளது.**

### வேளாண்-கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் பங்கு

நமது மாநிலத்திலுள்ள வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கி (நேபார்ட்), வேளாண் வளர்ச்சிக்கும் கிராம வளர்ச்சிக்கும் மறு நிதியுதவி அளிப்பதில் சிறந்த முன்னேற்றத்தை எய்தியுள்ளது.

வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கி தற்போது காப்பி, தேயிலை, கோக்கோ, இலவங்கம், தென்னை முதலியவற்றின் வளர்ச்சி தொடர்பான சிறுபாசனமில்லாத திட்டங்களுக்கும், பால் பண்ணை வளர்ச்சி, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய பலதிறப்பட்ட நோக்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கி அளிக்கும் நிதி உதவி உழவர்கள் வேளாண்மை செய்யாத காலங்களிலும்கூட பயனுள்ள வேலை வாய்ப்பினைப் பெற உதவுகின்றது.

இந்த நிதியுதவி மாநில் நிலவள வங்கி மூலமாகவே அளிக்கப்படுகிறது. இதுபோன்ற கடன்களுக்கு அடைமானப் பிணையம் கேட்காமல் அரசு உத்தரவாத அடிப்படையில் கடன் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டில் சிறுபாசனமல்லாத திட்டங்களின் கீழ், ரூ. 750 இலட்சம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டது. இதில், 1983 டிசம்பர் திங்கள் இறுதி வரை ரூ. 627.74 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இதில், ஒருங்கிணைந்த கிராமப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களும் அடங்கும்.

சிறுபாசனமல்லாத புதிய திட்டங்களை வகுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 1,061.94 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கீடு தேவைப்படும் சிறுபாசனமல்லாத 44 புதிய திட்டங்கள் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டு தற்பொழுது, திட்டம் வகுத்தல், இறுதி செய்தல் ஆகிய நிலைகளில் உள்ளன. வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் இசைவு பெற்ற பின்னர் இத்திட்டங்கள் 1984-85ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

உரியவர்க்குக் கடன் வழங்குவதோடன்றி, கடன் தொகையைத் தக்க வகையில்பயன்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளும் ஆங்காங்கே அமைத்தால்தான் நிதி நிறுவனங்கள் துறை சீர்படச் செயலாற்ற முடியும். இந்தத் தொடர்புகள் இல்லாமல் நிதி நிறுவனங்கள் துறை தனியாக இயங்க முடியாது. நிலையாகவும் விரைவாகவும் உருவாக்கவிருக்கின்ற சமூகப் பொருளாதார வளர்ச்சியைச் சார்ந்தே இத்துறையின் முனைப்பும், பரப்பும் அமைய முடியும்.

நமது அனைத்துத் திட்டங்களும் இந்த உன்னத இலட்சியத்தை நோக்கிப் பீடு நடையிட்டு வருகின்றன. 'மக்களிடத்திலே சென்று, அவர்களோடு உடனுறைந்து, அவர்களின் நிலைமைகளை அவர்கள் வாயிலாகவே கற்றறிந்து அவர்கள் நிலைக்கேற்பத் திட்டமிட்டு, அவர்களின் இருப்புக்கும் பொறுப்புக்கும் ஏற்ற வகையிலேயே திட்டங்களை மக்கள் மயமாக நிறைவேற்றுவதோடு, நமது செயற்பாட்டின் மூலம் தெளிவு பெற்று இந்த முயற்சியில் ஒரு முன்மாதிரியாக நாம் முன்னேற வேண்டும்' என்பதுதான் நமது அரசின் குறிக்கோளாக அமைந்துள்ளது.



# உணவுத் துறையில் முன்னேற்றம்

கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் 1977 முதல் நடத்தப் பட்டு வருகின்றன.

நுகர்வோர்களுக்கு எல்லாப் பொருட்களும் சீரிய முறையில் கிடைக்க ஆவன செய்யும் பொருட்டு 1977ல் 8566 ஆக இருந்த கடைகளின் எண்ணிக்கை தற்போது 18,009 ஆக அதிகரிக் கப்பட்டிருக்கிறது.

இந்நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணி பக் கழகத்தாலும், கூட்டுறவுகளா லும் நடத்தப்படுகின்றன. சில கடைகள் தொழிலாளர்கள் நலனுக்காக வேண்டி, அவர்களின் உபயோகத்திற்கு மாத்திரமே நடத்தப்பட்டு வருகின்றன. மொத்த நுகர்வோர் அட்டை யின் அடிப்படையில் மாணவர் விடுதிகளுக்குத் தேவையான பொருட்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன.

அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண் ணெய் தவிர புளி, மிளகு, தேயிலை, உப்புபோன்ற பொருட் களையும் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்க ஆணையிடப்பட் டுள்ளது. இதுவரை இல்லாதபடி இந்நியாய விலைக்கடைகளில் தவறுகள் நிகழா வண்ணம் கண்காணிக்க விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கடந்த சில ஆண்டு களாகவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக் கிறது. இந்நிலையைச் சமாளித்து எல்லோருக்கும் தேவையான அரிசி போன்ற இன்றியமையாப் பொருட்களை வழங்குவதற்கு இவ்வரசு அவசர நடவடிக்கை களை மேற்கொண்டது. ஏறத் தாழ 4 கோடி ரூபாய் வரை மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் கடந்த பிப்ரவரி/ மார்ச் '84ல் வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப் பட்டு உள்ளன.

மைய அரசு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யும் அரிசி போது மானதாயில்லை. எனவே தஞ்சா வூர் போன்ற மாவட்டங்களில் விவசாயிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்கு மேல் குவிண்டாலுக்கு 22. 1. '83 முதல் 7. 9. '83 வரை ரூ. 15/-ம் 8. 9. '83 முதல் 30. 9. '83 வரை ரூ. 45/-ம் 1. 10. '83 முதல் 31. 3. '84 வரை ரூ. 35/-ம் அதிகம் கொடுத்துக் கொள்முதல் செய்ததால் விவசாயிகளுக்கும் தக்க விலை கொடுக்கப்பட்ட தோடு அரசும் நெல் மூடை யிருப்பை தேவையான அளவு வைத்திருக்க இச்செய்கை உதவி யது. இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் கிட்டத் தட்ட 18 கோடி ரூபாய் ஆகும். கடந்த 1983-ஆம் ஆண்டு முதலமைச்சரின் சத்துணவுத் திட் டத்திற்கு 1,91,005 டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டிருக் கிறது. பஞ்சாபைத் தவிர மற்று முள்ள எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில்தான் நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்யும் அரிசியின் விலை குறைவு. இன்றும் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1-75 என்று விற்பது ஒரு சாதனையென்றே சொல்லலாம்.

கோதுமை உபயோகத்தை மக் களிடையே பிரச்சாரம் செய்ய அரசு முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. இருப்பைப் பொறுத்து எல்லோருக்கும் மாதத் திற்கு 20 கிலோ கோதுமையும், மலைப் பிரதேசங்களில் 30 கிலோ கோதுமையும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

மைய அரசு ஒதுக்கீடு செய்யும் எல்லாக் கார்டுதாரர்களுக்கும் நபர் ஒருவருக்கு 450 கிராம் சர்க் கரை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர விழாக்காலங்களில் அதிக அளவு லெவி சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

மாதம் தோறும் 7,000 டன் வரை இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின், சோயாபீன் எண் ணெய் ஆகியவற்றை விநியோ கம் செய்ததால் பொதுமக்களுக்கு நியாய விலையில் ஓரளவாவது சமையில் எண்ணெய் கிடைத்தது.

கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறத்திலுள்ள மக்கள் வரை எல்லோருக்கும் மண் ணெண்ணெய்யும் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனியே கட் டுப்பாடு ஆணைகள் இருந்துவந்தன. அரசு அதை மாற்றி அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட் கள் போன்ற ஒன்பது வகைப் பொருட்களுக்கு ஒரே கட்டுப் பாடு ஆணை அமல்படுத்தி யுள்ளது. இது வியாபாரிகளுக்கு ஒரு நன்மையாகும்.

குறிப்பிட்ட விலைகளைவிட அதிக விலைகளுக்குப் பொருட் களை விற்காமல் இருக்கவும் அதிக அளவு லாபத்தைக் கள்ள வழியில் சம்பாதிக்காமல் இருக்க வும், நுகர்வோர்களுக்குத் தக்க முறையில் நல்ல தரமான பொருட்கள் நியாயமான விலை யில் கிடைக்க வழிவகுக்கவும் நுகர்வோர் பாதுகாப்பு இயக் கத்தினைத் தீவிரப்படுத்துவதற் காக நடவடிக்கை களை அரசு எடுத்துள்ளது.



# மெச்சத் தகுந்த மின் துறைப் பணிகள்

**மாண்புமிகு மின்துறை அமைச்சர்**
**திரு எஸ். இராமச்சந்திரன்**

ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் அங்கு கிடைக்கக்கூடிய மின்சக்தியோடு பிணைந்துள்ளது. மின்துறை முன்னேற்றத்திற்குத் தேவைப்படுபவை அதிக அளவு முதலீடும் நீண்ட காலப் பொறுமையுமாகும். எனவே, இதற்குச் சிறந்த எதிர்காலக் கண்ணோட்டமும், நீண்ட காலத்திற்கெனத் திட்டமிடும் திறமையும் தேவைப்படுகின்றன. எழுபதாம் ஆண்டுகளில், மின்துறை, முன்னேற்றத்திற்கான கொள்கைகளை வகுக்கும் விவாதங்களிலேயே கணிசமான காலம் கழிந்தது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலேயே மின்சாரத்தை, செலவு அதிகமின்றி உற்பத்தி செய்யக்கூடிய பெரும்பாலான நீர்விசை மூலங்கள் பயன்படுத்தப்பட்டுவிட்டன. எனவே பருவ காலங்களில் மட்டுமே பயனளிக்கக்கூடிய, லாபம் ஈட்ட முடியாத, மீதமுள்ள சிறிய நீர் விசை மூலங்களைப் பயன்படுத்தலாமா அல்லது கேரளத்தோடும், கர்நாடகத்தோடும் இணைந்து மின் திட்டங்களை நிறைவேற்றி அங்குக் கிடைக்கக் கூடிய உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தலாமா, அல்லது நெடுந்தொலைவில் உள்ள மாநிலங்களிலிருந்து நிலக்கரியைப் பெற்று அனல் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கலாமா அல்லது பழுப்பு நிலக்கரியைக் கொண்டு நெய்வேலியில் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கலாமா என்று விவாதிக்கப்பட்டது.

மின் உற்பத்தியில் இந்த மாநிலம் தன்னிறைவை அடைய வேண்டும் என்பது எழுபதாம் ஆண்டுகளின் இறுதியிலேயே உணரப்பட்டது. அதிக அளவு பெரிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டுவதன் வாயிலாகவே இத்தகைய தன்னிறைவைப் பெற முடியும் என்பதும் உணரப்பட்டது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கீழ்க் குறிப்பிட்டுள்ள மின்உற்பத்தித்திட்டங்களுக்கு அனுமதி பெறப்பட்டது. இவ்ற்றின் மொத்த உற்பத்தித் திறன் 1028 மெகாவாட் ஆகும்.

அதில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி 2-வது கட்டத்திட்டம் 1977 செப்டம்பரிலும், 20 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட குந்தா 5-வது மின் நிலையத்தின் கூடுதல் பிரிவுத் திட்டம் 1980 மே மாதத்திலும், 120 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் மற்றும் 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மேட்டூர் அனல்மின் திட்டம் 1980 செப்டம்பரிலும் இயங்க அனுமதி அளிக்கப்பட்டது. இது தவிர சின்னஞ்சிறு மூன்று புனல் மின் திட்டங்கள் (பைகாரா, கீழ் பவானி, வைகை அணைகளில்) 16 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டு இயங்க 1981 ஆகஸ்ட் மாதத்திலும், பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின்திட்டம் 30 மெகா

வாட் உற்பத்தித் திறன் கொண்டதாய் இயங்க 1982 ஜூன் மாதத்திலும் அனுமதி அளிக்கப் பட்டது. 1983 மே மாதம் முதல் மேட்டூர் அனல் மின் திட்டம் விரிவாக்கம் 420 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்டதாய் செயல் பட அனுமதி அளிக்கப்பட்டது. பூனாச்சி, விளாம்பட்டி, மரவகண்டி ஆகிய சின்னஞ்சிறிய 3 புனல் மின் திட்டங்கள் 2.25 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டதாய்ச் செயல்பட முறையே 1982 ஆகஸ்ட், 1983 ஜூன், 1984 ஜனவரி மாதங்களில் அனுமதி வழங்கப் பட்டது.

மேலும் 1050 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டு இயங்க வடசென்னை அனல் மின்திட்டம், 710 மெகாவாட் திறனுடன் இயங்க தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம், 300 மெகாவாட் திறனுடன் இயங்க காஸ் சுழலி திட்டம், 100 மெகாவாட் திறனுடன் இயங்க பைகாரா இறுதி நிலைத்திட்டம், 3 மெகாவாட் திறனுடன் இயங்க சிறுவாணி சின்னஞ்சிறிய புனல் மின் திட்டம் ஆகிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கான கருத்துரு முறையே 1981 டிசம்பர், 1982 ஆகஸ்ட், அக்டோபர் மாதங்களிலும் மத்திய அரசினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றின் மொத்தத் திறன் 2161 மெகாவாட் ஆகும்.

இவற்றுள், மூன்று அணி—210 மெ.வா. திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம், இரு அணி—210 மெ.வா. திறன் கொண்ட தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம் ஆகிய இரண்டையும் மத்திய மின்சார அதிகார மன்றம் திருத்தி, அதற்கேற்ப அனுமதி வழங்கியுள்ளது. இந்திய அரசு ''காஸ்'' சுழலி திட்டத்திற்கு இணங்கவில்லையெனினும் மாநில அரசு இதற்கு அனுமதி அளிக்க வற்புறுத்தி வருகிறது. மாநில அரசின் மேற்கூறிய திட்டங்களைத் தவிர, மாநில அரசு எடுத்த முயற்சிகளின் பயனாக இரண்டாவது சுரங்கத்தை வெட்டவும், இரண்டாவது அனல் மின் நிலையத்தை நெய்வேலியில் ரூ. 358 கோடி செலவில் நிறுவவும் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மின்துறை முன்னேற்றத்தில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க மற்றொன்று புதிய திட்டங்களுக்குத் தேவைப்படும் போதிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளதாகும். 4-ஆவது, 5-ஆவது (1974-79) ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப்பட்ட முதலீட்டுச் செலவு முறையே ரூ. 213.88, ரூ. 375.13 கோடிகளேயாகும். 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1022.80 கோடியாகும். ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்துறை வளர்ச்சிக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இது குறிக்கிறது.

1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இயக்கி வைக்கப்பட்ட 35 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட சுருளியாறு புனல் மின் திட்டம், அதே ஆண்டு அக்டோபரில் 50 மெகாவாட் நிறுவு திறன் கொண்டு இயக்கி வைக்கப்பட்ட குந்தா நான்காம் நிலை விரிவாக்கத் திட்டம், 1979 ஜூலையில் 210 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின்நிலைய முதல் பிரிவுத்திட்டம், 210 மெகாவாட் நிறுவு திறனுடன் 1980 டிசம்பரில் இயக்கி வைக்கப் பட்ட தூத்துக்குடி அனல் மின்நிலைய இரண்டாவது பிரிவுத் திட்டம், 1982 ஏப்ரல் மாதத்தில் 210 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின் நிலைய மூன்றாவது பிரிவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மின்சார உற்பத்தித் திறனை அதிகரித்த சாதனைக்கு விளக்கமாகும். இதே வகையில், மத்திய அரசுத் துறையுடன் தொடர்புடைய கல்பாக்கம் மின்திட்டத்தை 1983 ஜூலையில் 235 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைத்தது, இவ்வரசு மின் உற்பத்தித் திறனில் எடுத்துக் கொண்ட முயற்சியினையும், சாதனையையும் தெளிவுறச் செய்கிறது.

1978-ஆம் ஆண்டு மார்ச்சில் 2424 மெ. வா. ஆக இருந்த மொத்த நிறுவனத் திறன் தற்போது 3344 மெ. வா. ஆக உயர்ந்துள்ளது.

பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் (நீலகிரி)





கீழ் மேட்டூர் புனல்மின் திட்டம்

இருப்பினும், நாட்டு மக்களின் நலன் கருதியும், மின்சாரத்தின் பயன் உணர்ந்தும் இவ்வரசு மின் திறனை அதிகரிக்க வேண்டி பல திட்டங்களை உருவாக்கி வருகின்றது. அவைகளாவன: திருநெல்வேலி மாவட்டத்தில் சேர்வலாறுபுனல் மின்திட்டம் ரூ. 34.67 கோடி செலவில் 20 மெகாவாட் திறனுள்ளதாகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 145.86 கோடி செலவில் 400 மெகாவாட் திறன் கொண்ட காடம்பாறை நீர் ஏற்றும் மின் திட்டமும், சேலம், பெரியார் மாவட்டங்களுக்கு இணைந்து 129.61 கோடி செலவில் 120 மெகாவாட் திறன் கொண்ட கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், நீலகிரி மாவட்டத்தில் 20 மெகாவாட் திறனுள்ளதாக ரூ. 6.34 கோடி செலவில் குந்தா 5-வது மின் நிலைய கூடுதல் பிரிவுத் திட்டமும், அரசு பரிசீலித்து, பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளனைத்தும், 1985-ஆம் ஆண்டிலிருந்து 1987-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவை தவிர, சின்னஞ்சிறிய புனல் மின் திட்டங்களையும் அரசு பரிசீலித்து, பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் நீலகிரி மாவட்டத்தில் 1.49 கோடி ரூபாய் செலவில் 2 மெகாவாட் (1X2) திறன் உள்ள பைகாரா புனல்மின் திட்டம், ரூ.6.26 கோடி செலவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 8 (4X2) மெகாவாட் திறனுள்ள கீழ்பவானித் திட்டம், 3.97 கோடி செலவில் மதுரைமாவட்டத்தில் 6 மெகாவாட் (2X3) திறனுள்ள வைகை அணைத் திட்டம், 0.85 கோடி செலவில் கோவை மாவட்டத்தில் 1 மெகாவாட் (1X1 திறனுள்ள பூனாச்சி திட்டம் மற்றும் 0.48 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் 0.5 மெகாவாட் திறனுள்ள விளாம்பட்டி புனல் மின்திட்டம் என்பவையாகும். இத்திட்டங்களும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, 1986ஆம் ஆண்டிலிருந்து 1987-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட சின்னஞ்சிறிய புனல் மின் திட்டங்களுள் பின்வரும் மூன்று மின் திட்டங்களும் சேர்க்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அவைகளாவன: 13.73 கோடி ரூபாய் செலவில் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் நிலையம், (நீலகிரி), 316.85கோடி செலவில் 420 மெகாவாட் (2X210) திறன் கொண்ட மேட்டூர் அனல் மின்திட்டம்- முதற் கட்டம் (சேலம்) மற்றும் 238.28 கோடி செலவில் 420 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் - இரண்டாவது கட்டம் (சேலம்). இத்திட்டங்களும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு 1986-ஆம் ஆண்டிலிருந்து 1988-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறை நிலையில், இங்குள்ள அனல் மின் நிலையங்கள் நம்பிக்கை அளிக்கக்கூடிய திறனளவுக்கு இயங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. இந்தச் சந்தர்ப்பத்தில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இயங்கு திறன் குறிப்பிடப்பட வேண்டியதாகும். தொடக்க நிலையில் இந்த நிலையம் சந்தித்த கோளாறுகள் எல்லாம் சரி செய்யப்பட்ட பிறகு, இது மிகவும் நன்கு இயங்குகிறது. 640 மெ. வா. மின் உற்பத்தியை இது தொட்டு விட்டது. 1983 டிசம்பர் முதல், இதன் மின் சுமை காரணி (Plant Load Factor) யின் மாத சராசரி நிலை 70% ஆகஉள்ளது

மேலே குறிப்பிட்டவை தவிர 1980-84ஆம் ஆண்டுகளில் சுமார் 10,600 கி.மீ. தொலைவுள்ள மிகை உயர் அழுத்த/உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும், சுமார் 23170 கி.மீ. தொலைவுள்ள (1983 வரை மட்டும்) குறைவழுத்தக்கம்பித் தொடர்களும் நிறுவபபட்டன. 74 துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டன.

சென்னை நகரின் மின் வழங்கு நிலைகளை மேம்படுத்த, முதல் முறையாக வடக்கே

வியாசர்பாடியிலிருந்து தெற்கே வேளச்சேரி வரை 110 கே. வி. புதை வடங்கள் போடப் படுகின்றன. இவற்றுடன்கூட பல்வேறு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும் மின் சாரத்தைக் கொண்டு செல்ல எண்ணற்ற மின் செலுத்துகை - மின் பகிர்வுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஊரக மின்மயமாக்கத்தில் இந்த மாநிலம் ஒரு முன்னோடியாகும். இதில் இது இன்று அடைந்துள்ள நிலை, 1980ஆம் ஆண்டு இருந்த நிலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஊரக மின்மயமாக்குப்பணியில் அடைந்துள்ள முன்னேற்றம்:

| | 31-3-80 | 31-3-84 |
|---|---|---|
| நகரங்கள் ... | 439 | 439 |
| கிராமங்கள் | 15,550 | 15,673 |
| சிற்றூர்கள் | 47,439 | 47,502 |
| மொத்தம் | 63,428 | 63,614 |
| ஆதி திராவிடர் குடியிருப்புகள் | 25653 | 26,112 |
| இணைப்பு வழங்கப்பட்ட மின் விசையேற்றங்கள் | 8,87,227 | 9,82,806 |
| குடிசைகள் | 1.67 கோடி | 5.62 கோடி |

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கூடவே சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கும் மாதம் ஒன்றுக்கு ஒட்டு மொத்தக்கட்டணமாக ரூ. 2.50 வீதத்தில் குடிசைகளுக்கும் மின்சாரம் வழங்கும் திட்டம் ஒன்று 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5.62இலட்சம் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப் பட்டுள்ளது.

கிராம மின்மயமாக்கப் பணியில் தமிழ் நாடு 99.8% அளவுக்கு மேல் முடித்துள்ளது. மீதமுள்ள கிராமங்கள் மலைப்பகுதிகளில் உள்ளதால் மின் கம்பித் தொடர்களை அமைப்பது கடினமாக உள்ளது. எனவே டீசல் பொறியின் உதவி கொண்டு இத்தகைய சில கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் இதுவரை 20 கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன. இவற்றுடன்கூட தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 3 கிராமங்களிலும், சேலம் மாவட்டத்தில் 3 கிராமங்களிலும் போட்டோ வோல்டிக் மின் கல முறையில் (Photo Voltic cells) தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

1980-81ஆம் ஆண்டில் அரசினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டத்தில் மின் வாரியத்தின் பங்கு தரையடி நீர்த்தேக்கங்களுக்கும் (G.L.R.) மேல்நிலைத் தொட்டிகளுக்கும் (O.H.T.) மின் இணைப்பு வழங்குவதாகும். முதல் கட்டப்பணியில் அடைந்த முன்னேற்றத்தின் உற்சாகம் காரணமாக, இத்திட்டம் இரண்டாவது கட்டத்தில் 150 வட்டாரங்களுக்கு (Blocks) விரிவாக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் குடிநீருக்கான 2955 தரையடி நீர்த் தேக்கங்கள்/மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.



தெருவிளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வாரியம் தானே இப்பொழுது ஏற்றுள்ளதால் பராமரிப்பு முறை பரவலாக முன்னேறியுள்ளது. இது தவிர, வெண் சுடர் விளக்குகளையும், இரண்டு அடி இரட்டைக் குழல் விளக்குகளையும் 1 × 40 வாட் குழல் விளக்குகளாக மாற்றி அமைத்து வருகிறது.

மின்சாரத்தைப் பகிர்ந்து அளிப்பதில் மின் அமைப்புகளின் மேற்பார்வைப் பொறியாளர்களது பொறுப்பு அச்சாணி போன்றதாகும். இந்த மின் அமைப்புகளை, செயல் திறன்மிக்கதாக பெரிய மின் அமைப்புகள் பிரிக்கப்பட்டு புதிதாக ஏழு மின் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மின் அமைப்புகளைத் திறமையோடு மேற்பார்வையிட மாநிலம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு மண்டலத் தலைமைப் பொறியாளரது பொறுப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

**நாங்கள் திட்டங்களை-பணிகளைச் செய்யும்போது இவர் எந்தக் கட்சி, யார் என்று பிரித்துப் பார்த்துச் செய்வதில்லை; அனைவரையும் ஒன்றாகவே கருதிச் செயல்படுகிறோம்.**

**மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர்.**

மின் திருட்டை ஒழிக்க, மின் திருட்டு குறித்து அல்லது மற்ற முறைகேடுகள் குறித்து வாரியத்திற்குத் தகவல் தரும் பொதுமக்களுக்கு ரூ. 10,000 வரை ரொக்கப் பரிசு வழங்கும் திட்டமொன்றை 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வாரியம் தொடங்கியுள்ளது. இது தவிர மின் திருட்டு ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்திச் செயலாக்கும் பொறுப்பு இரு மேற்பார்வைப் பொறியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தைச் சேமிப்பதன் முக்கியத்துவம் குறித்து நுகர்வோரை விழிப்படையச் செய்ய வாரியம் தீவிரமாக உள்ளது. வேளாண்மைவிசையேற்றங்களிலும், தொழில் துறைகளிலும் மின்சாரத்தைச் சேமிப்பதைக் குறித்து விரிவான கூர்ந்தாய்வு செய்து பரிந்துரைக்க இரு தனிக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழிலகங்களின் நலனைக் கருதி மொத்தம் 500 கே. வி. ஏ. திறனும், அதற்கு மேற்பட்ட திறனும் கொண்ட சொந்த மின்னாக்கிப் பொறியை வைத்துள்ள உயர் அழுத்தத் தொழிலகங்கள், மின்சாரத்தை வாரியத்திடம் விட்டு சேர்த்து வைத்துக் கொள்ள வகை செய்யும் திட்டம் ஒன்றை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.



# பெருகிவரும் பால் பண்ணைத் தொழில்

மாண்புமிகு
பால்வளத்துறை அமைச்சர்
திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

"நல்ல பால் கிடைக்கவில்லையே!" என்ற ஏக்கம் நகர்ப்புறத்திலும், "பாலுக்கு நல்ல விலை கிடைக்கவில்லையே!" என்ற எரிச்சல் நாட்டுப் புறத்திலும் ஒரு சமயம் இருந்ததுண்டு.

கலப்படக்காரர்கள், கள்ள விலைக் காரர்கள் மத்தியில் நுகர்வோரும், இடைத் தரகர்கள், இந்தப் பாலுக்கே சம்பந்த மில்லாதவர்கள் மத்தியில் பால் உற்பத்தி யாளர்களும் சிக்கிய காலமும் இருந்ததுண்டு.

இன்று நிலை என்ன? தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் பணிகளை 1.2.'81 முதல் மேற்கொண்டு செயல்படுகின்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணை யம், தமிழ்நாட்டில் பால்பண்ணைத் தொழி லில் புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்கி விட்டது.

ஆண்டு முழுவதும் நல்ல தரமான பால் நியாயமான விலையில் நகரில் வாழும் நுகர் வோருக்கும், என்றைக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலை பால் உற்பத்தியாளர்களுக்கும் கிடைக் கச் செய்துவிட்டது.

பால் கொள்முதல் விலையை 1983ஆம் ஆண்டு எருமைப் பால் ஒருகிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 35இல் இருந்து ரூ. 38 ஆக உயர்த்தினோம். இதற்கு ஒத்தாற்போல பசு வின் பால் விலையையும் உயர்த்தினோம். நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது விவசாயிகள் நலன் கருதி, பாலின் விலை ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 40-ஆகக் கொடுத்தோம். வறட்சி நிவாரணப் பணியாகச் சிறப்புக் கால்நடைத் தீவனம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ தந்தோம். எனி னும், பால் விற்பனை விலையை உயர்த்த வில்லை.

குறிப்பாக, கடந்த நான்காண்டுகளில் (1980-1983) எய்திய சாதனைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றேன், விளக்கமாகச் சொன்னால் இடம் இராது என்பதால்!

**மெத்த வளரும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்:**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங் கங்களின் எண்ணிக்கை 1980ல் 2079லிருந்து 1981-ல் 2499ஆக உயர்ந்து, 1982ல் 2689 ஆகி, 83ஆம் ஆண்டில் 311 ஆகியது.

**மென்மேலும் உறுப்பினர்கள்:**

வெறும் சங்கங்கள் தோன்றினால் மட்டும் போதுமா? ஆள்பலம் தானே யானை பலம்! கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை யும் மென்மேலும் பெருகியது.

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1980 | 2.77 இலட்சம் |
| 1981 | 3.12 " |

| | |
|---|---|
| *1982* | *3.65இலட்சம்* |
| *1983* | *4.69 ,,* |

**கொள்முதல் கூடிவிட்டது**

கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றி வெறும் கூட்டம் சேர்த்தால் மட்டும் போதுமா? குடம் குடமாய் பால் சேகரிப்பு நடந்தால் தானே பால்வளம் பெருகும்-வெண்மைப் புரட்சி வெளியில் தெரியும்? இந்த நான்கு ஆண்டு களில் பால் கொள்முதல் பளிச்சென்று உயர்ந்தது.

பால் கொள்முதல் உயர்ந்த பட்டியலைப் பாருங்கள்:

| ஆண்டு | (இலட்சம் லிட்டர்) |
|---|---|
| *1980* | *1093.51* |
| *1981* | *1077.18* |
| *1982* | *1358.11* |
| *1983* | *1703.00* |

**விற்பனையளவும் விரிவாகின்றது**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலம் விற்பனையாகும் பாலுக்கு நகர்ப்புற மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு. எனவே தான் பாலின் விற்பனை நாளுக்கு நாள் விரிந்து கொண்டே போகிறது. கீழ்க்கண்ட விவரங்கள் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள உதவும்.

| ஆண்டு | விற்பனையின் அளவு (இலட்சம் லிட்டர்களில்) |
|---|---|
| *1980* | *1232.57* |
| *1981* | *1462.71* |
| *1982* | *1709.96* |
| *1983* | *1900.47* |

**நுகர்வோர் நலம் நோக்கி....**

நுகர்வோரின் முழு ஈடுபாட்டினையும் ஒத்துழைப்பையும் பெற்றிட, முதற்கட்டமாக சென்னை நகரில் பால் விற்பனையை நுகர்வோரே ஏற்று நடத்திடும் வகையில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இன்றைய தேதியில் 31 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 124 பால் விற்பனை நிலையங்கள் இவற்றின்கீழ் உள்ளன. நாளொன்றுக்குச் சுமார் 88 ஆயிரம் லிட்டர் பாலை இச்சங்கங்கள் விநியோகம் செய்கின்றன. வரும் ஆண்டில் 19 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் செயல்படத் துவங்கும்.

**இன்றுபோல் என்றும் இருந்திட...**

தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தமிழகத்தில் வெண்மைப் புரட்சி வெகுவேகமாக நடந்து வருகின்றது. பால் வளம் மன நிறைவு அளிப்பதாக இருக்கின்றது. இந்தச் செழிப்பும், சீரான வளர்ச்சியும் என்றும் நின்று நிலைத்திட, கைவசமுள்ள திட்டங்களையும், கருத்திலுள்ள ஏற்பாடுகளையும் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன்.



**சாதனைகளின் சில விவரங்கள்:**

இரண்டு புதிய குளிரூட்டும் நிலையங்கள்திறக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை, சேத்தியாத் தோப்பு)

நான்கு புதிய குளிரூட்டும் நிலையங்களுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன (திருவள்ளூர், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, அனக்காவூர்)

இரண்டு புதிய பால் பண்ணைகள் செயல்படத் தொடங்கியுள்ளன. (சேலம், கிருட்டிணகிரி)

மூன்று புதிய பால் பண்ணைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன (உதகமண்டலம், திருநெல்வேலி, காரைக்குடி)

ஒரு உறைவிந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளது (ஈரோடு)

**பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள்:**

(அ) பால் கொள்முதல்விலை ஏறக்குறைய ஒரு லிட்டருக்கு 35 காசு வீதம்



1983, மே மாதம் முதல் உயர்த்தப் பட்டது.

வறட்சி நிவாரணமாக இணையம் 500 டன் கால்நடைத் தீவனத்தை கிலோ ஒரு ரூபாய்க்கு, பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கியது.

தஞ்சையில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட கால்நடைகளுக்கு 330 டன் தீவனம் சலுகை விலையில் வழங்கப் பட்டது.

ஏறக்குறைய 2 இலட்சம் செயற்கை முறை கருத்தரிப்புகள் செய்யப்பட்டன.

**பால் நுகர்வோருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்:**

பால் உற்பத்திக்கான மொத்த செலவுகள் பெருமளவில் அதிகரித்த போதிலும் விற்பனை விலை ஏற்றப்படவில்லை.

அதிகக் கொழுப்புடன் உள்ள (6%) தரமான பாலும் விநியோகிக்கப்படுகிறது.

பால் பிளாஸ்டிக் பைகள் பல மாவட்டங்களில் மேலும் அதிகமான இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதிகமான இடங்களில், முக்கியமாக சென்னை சுற்றுப்புறங்களில் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

நுகர்வோர் சங்கங்கள் மேலும் நிறுவப்பட்டுள்ளன (மொத்தம் 31)

**ஊழியர்களுக்கான சலுகைகள்:**

சைக்கிள் வாங்குவதற்காக முன் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஈட்டிய விடுப்பிற்கு, விடுப்பில் செல்லாமல், அதற்கான ஊதியம் (சரண்டர்) அளிக்கப்படுகிறது.

டெரிகாட்டன் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பிரிவில் பணி புரிபவர்களுக்கு மழைக் கோட்டு வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் தங்கும் அறை ரேடியோ வசதியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ளது. சோப்பு, எண்ணெய் மற்றும் ஷிப்டில் வேலை செய்யும் போது பால், ரொட்டி வழங்கப்படுகின்றன.

ஊழியர்களின் சிறுவர்சிறுமியர்க்கு படிப்பு உதவித் தொகை அளிப்பதற்காக ஒரு டிரஸ்ட் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலிருந்து இத்தொகை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எப்போதும் போல 8.33% க்குப் பதிலாக போனஸ் 10% வீதம் வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நிர்வாக உறவு சுமுகமாக இருந்து தங்கு தடையில்லாமல் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.


தரமான பொருள் ! மலிவான விலை !!

# தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கடலூர்.

பொதுமக்களுக்கோர் நற்செய்தி

அனைத்து வாணிபக்கழக அங்காடிகளிலும் அத்தியாவசியப் பொருட்களுடன் புரதச்சத்து நிறைந்ததும், துவரம் பருப்பிற்கு நிகரானதும், கிலோ ரூ. 5.50 விலையுள்ளதுமான அமுதம் மசூர் பருப்பு ½ கிலோ, 1 கிலோ பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

நெய்வேலி, சிதம்பரம் I மற்றும் விழுப்புரம் II சில்லரை அங்காடிகளில் மளிகை, வனஸ்பதி, சோப்பு மற்றும் அனைத்து ஷாப் சாமான்களும் மலிவான விலையில் கிடைக்கும்.

பொதுமக்கள் அவற்றை வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

''மக்கள் சேவையே வாணிபக் கழகத்தின் குறிக்கோள்''



# வளர்ச்சிக்கு உதவும் வணிக வரித் துறை

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்**

**திரு. எஸ். டி. சோமசுந்தரம்**

தமிழ்நாட்டின் வரிவருவாயில் வணிக வரியின் பங்கு 65 விழுக்காட்டிற்கு மேலாகும். இத்துறையில் செயலாட்சியின்கீழ் அடங்கும் பெரும்பான்மையான சட்டங்களாவன:

தமிழ்நாடு பொதுவிற்பனை வரி

மத்திய விற்பனை வரி

கேளிக்கை வரி

பந்தய வரி

தமிழகத்தில் வருவாய் விளைவிக்கும் மூலாதாரங்களில் விற்பனை வரி ஒன்றுதான் பெருமளவில் வருவாயை ஈட்டித்தரும் தனி ஆதாரமாக விளங்கி முக்கிய அங்கம் வகிக்கிறது.

| | | |
|---|---|---|
| *1979—80* | 353 | கோடி ரூபாய்கள் |
| *1980—81* | 490 | ,, |
| *1981—82* | 581 | ,, |
| *1982—83* | 696 | ,, |
| *1983—84* | 751 | ,, |

வணிகவரியாகக் கிடைத்துள்ளது.

வணிகவரி வருமானத்தில் இத்துறையின் நிர்வாகச் செலவு 1.4% தான்.

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைக் கேற்ப வருமானம் அதிகமாக வரக்கூடிய வழி முறைகளை நன்கு ஆராய்ந்து, ஏழை எளியோரைத் தவிர்த்து செல்வந்தர்களிடம் வரி பெறும் வகையில், வரிவிதிக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. சில ஆண்டுகளாக வணிக வரி வருவாயைப் பெருக்க பலவித திட்டங்கள் தீட்டப்பட்டு, அவ்வருவாயை ஏழை எளியோர்களின் மேம்பாட்டிற்கு உதவ அரசு பெரும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களான நெல், அரிசி மற்றும் தானிய வகைகளுக்கு வரிவிதிக்காத மாநிலம் தமிழகம் ஒன்றுதான். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியே தீரவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

ஏழைகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப்பொருள்கள், மூக்குக்கண்ணாடி, மண்ணெண்ணெய் விளக்கு, அப்பளம், சேமியா, மண்ணெண்ணெய் அடுப்பு ஆகிய பொருட்களுக்கு வரிவிலக்குஅளிக்கப்படுகிறது. மேலும் கணக்குப் புத்தகங்கள், மாணவர்களின் நோட்டுப் புத்தகம், பென்சில் ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்படுகின்றன.

தமிழக அரசுமண்ணெண்ணெய்க்கு விதித்திருந்த வரிவிகிதத்தை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்ததுடன், அதற்கு விற்பனை மேல்வரியையும் நீக்கியுள்ளது. துவிச்சக்கரவண்டி, ரிக்ஷா மற்றும் மூன்று சக்கர வண்டிகளுக்கும் அவைகளுக்கான டயர் டியூபுக்கான வரியையும் 6 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைத்தது. சிறுகலைவுத் தொழிலாளிகளின் மூலப்பொருட்களான பாலித்தின் பைகள், இருக்கைக்கான பிரம்புகள், பாலித்தின் படிகங்கள் போன்றவைகளின்வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நாட்டுச் செக்கில் பிழிவதற்கு வாங்கும் நிலக்கடலைக்கு வரிவிலக்கு அளித்ததுபோல, அதில் பிழியப்படும் இதர எண்ணெய் வித்துக்களுக்கும் விலக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 லட்சத்திற்குக் குறைவாக விற்றுமுதலுள்ள ரொட்டி, பன், கைவினை சோப்பு மற்றும் டிடர்ஜென்ட் சோப் ஆகிய பொருட்களின் உற்பத்தியாளர்

கள் மற்றும் வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறிய சாகுபடியாளர்கட்கு உதவ கோவை, கூனூர் ஆகிய இடங்களில் ஏலத்தில் விற்கப்படும் தேயிலைக்கான வரி 6 சதவிகிதத்திலிருந்து 2½ சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதுபோல பஸ், டிரக் ஆகியவைகளுக்கான அமைப்புச் சட்டத்தின் ( chassis ) வரிவிகிதத்தை 15லிருந்து 9 ஆகவும் பிறகு 6-ஆகவும் டயர் டியூப்க்கான வரியை 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகவும் அரசு குறைத்தது,

கடந்த 10 ஆண்டுக்காலமாக அமலில் இருந்துவந்த பலமுனை விற்பனை வரிக்குட்பட்ட பொருள்களுக்கு வரிவிலக்களிக்க நிர்ணயிக்கப்பட்ட உச்ச விற்பனைத் தொகை வரம்பானது 50,000 ரூபாயிலிருந்து 1,00,000 ரூபாயாக இவ்வாண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மொத்தத்தில் 20,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் அதாவது தமிழ்நாட்டில் உள்ள வரிவிதிப்பிற்குட்பட்ட மொத்த வியாபாரிகளில் ஐந்தில் ஒரு பங்கினர் பலனடைவார்கள். இதுபோலவே பலமுனை வரி விதிப்பிற்குட்பட்ட பொருள்களுக்குப் பதிவு செய்வதற்குரிய விற்றுமுதல் வரம்பும் 30,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சலுகை சுமார் 7000க்கும் மேற்பட்ட வியாபாரிகளுக்கு பயனளிக்கும் வகையில் உள்ளது. மேலும் பிரிவு-7-ன் கீழ் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் சகாய விற்பனை வரி அல்லது இணக்க வரி செலுத்தும் சலுகை பெற விற்பனை பனைத் தொகை வரம்பு 60,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை என கடந்த 10 ஆண்டுக்காலமாக இருந்து வந்துள்ளது. இந்த வரம்பை ஒரு லட்சத்திலிருந்து, ரூபாய் இரண்டு லட்சமாக மாற்றி இந்த எல்லைகளுக்குள் வரும் வெவ்வேறு நிலைகளுக்கேற்ப வரித்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறைப்படி வியாபாரிகள் வழக்கமாகக்கட்ட வேண்டிய வரித்தொகையில் சுமார் பாதியளவு தான் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு வரிச்சலுகை பெற விற்பனைத் தொகை வரம்பு ஒருலட்சத்திலிருந்து இரண்டு லட்சமாக உயர்த்தப்பட்டதால் 13000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பலனடைவார்கள்.

'வர்த்தக நல உரிமை ஆலோசனைக் குழு' எனப்புதியதொரு குழு ஒன்றும் 1980-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழு அமைக்கப்பட்டதால் அரசுக்கும், வணிகர்களுக்குமிடையே இரு தரப்பினரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து செயல்படும் சுமுகமான உறவு மலர சாத்தியமாயிற்று.

பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரி நிலைக்கு மாற்றப் பெற்ற சீப்பு, எழுதுபொருட்கள், பிளாஸ்டிக், மெழுகுவர்த்தி போன்ற பொருட்களுக்கு துறை சட்டதிட்டங்களுக்கேற்ப கணக்குகளைப் பேணுவதில் உள்ள சிரமங்களைச் சம்பந்தப்பட்ட வணிகர்கள் எடுத்துரைத்ததன் பேரில் இந்தப் பொருட்கள் திரும்பவும் பலமுனை வரி விதிப்பிற்கே கொண்டுவரப்பட்டன. இதனால் இவ்வாண்டில் ஒரு இலட்சம் ரூபாய் வரை விற்று முதல் உள்ள வணிகர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து முழுமையான விலக்கும், 2 லட்சம் ரூபாய் வரை விற்றுமுதல் உள்ளவர்கள் செலுத்தும் வரி வீதத்தில் சலுகையும் அளிக்கப்பட்டுள்ளன. இதுபோன்றே ஒருமுனை வரியின் கீழ் இருந்த ஆயத்த ஆடைவரியை 3 சதவிகிதமாகக் குறைத்து பலமுனை வரியின் கீழ்கொண்டு வரப்பட்டது.

எடையிடும் இயந்திரங்கள், பரிசுச்சீட்டு, மாட்டுத்தீவனம் மற்றும் கோழித் தீவனம் ஆகியவை அண்மையில் ஒரு முனை வரியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1984 ஜனவரி மாதத்தில் தமிழக அரசு, பரிசுச் சீட்டுகளுக்கு அளிக்கப்பட்டு வந்த வரி விலக்கை அகற்றி 20% ஒருமுனை விற்பனை வரிவிதிக்கத்தீர்மானித்தது. இது தமிழக அரசின் வருவாயைக் கூடுதலாக்கும் என்பது மட்டுமின்றி, வர்த்தகர்களின் பொதுவான கருத்தின்படி தமிழக மக்கள் ஏனைய மாநிலங்களின் பரிசுச் சீட்டுககளை வாங்குவதற்குச் செலவாகும் பெருந்தொகையின் ஒரு பகுதியைப் பெற்று, அத்தொகை தமிழக அரசின் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

### கேளிக்கை வரி

திரைப்படங்கள் பெரும்பான்மையினரால் விரும்பப்படுவதுடன், குறைந்த செலவில் அனுபவிக்கும் பொழுதுபோக்காகும். திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு ஒரு தனிப் பெரும் இடத்தை வகிக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட திரையரங்கங்கள் உள்ளன. இவற்றில் 985 நிலையானவை; 151 பகுதி நிலையானவை; 867 இடம் பெயர்பவை; 8 திறந்த வெளித் திரையரங்கங்களாகும். அனைத்து 'இடம் பெயரும் திரையரங்கங்களும்' பெரும்பாலான 'நிலையான திரையரங்கங்களும்' கிராமப் புறங்களில் உள்ளன.

வணிகவரித் துறையின் புதிய அலுவலகக் கட்டடம்



கிராமப்புறங்களில் உள்ள திரையரங்கங்களில் பெருமளவில் வரி ஏய்ப்பு செய்யும் நிலை இருந்தது. திரையிடுபவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செம்மையான அணுகுமுறை கொண்ட ஒரு திட்டத்தை அரசுடிசம்பர்1977ல் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இத் திட்டத்தின்படி, ஆரம்பத்தில் கிராமம், பேரூராட்சி, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள திரையரங்கங்களின் மொத்த இருக்கைகளுக்கான வசூல் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அரசுக்குச் செலுத்தினால் போதுமானது. அரசிற்கு வருவாய் அதிகரித்ததுடனல்லாமல், வரி ஏய்ப்பு செய்யும் திரையரங்கங்களில் அடிக்கடி ஆய்வு செய்யும் முறை தவிர்க்கப்பட்டு, வரி ஏய்ப்பைக் குறைக்க வழிகோலியதால் இத்திட்டத்தின் விளைவுகள் ஊக்கமளிப்பதாய் அமைந்தன.

**வீடியோ மூலம் திரையிடப்படும் படங்களுக்கு வரி விதிப்பு**

'வீடியோ' மூலம் படங்கள் திரையிடப்படும் கூடங்கள் அண்மைக்காலத்தில் காளான்களைப்போல் பல இடங்களில் சட்டெனத் தோன்றியதால், முறையான திரையரங்கங்களிலிருந்து பெறப்படும் வருவாய் குறையுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியதுடன், பொதுவாகத் திரைப்படத்தொழிலையும் குறிப்பாகப் படம் திரையிடுபவர்களின் நலனையும் பாதித்தது. மக்களின் நன்னெறிக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலையைத் தோற்றுவித்தது.

இவற்றை நீக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, இவ்வாறு வீடியோ மூலம் படங்கள் திரையிடுவதைக் கட்டுப்படுத்தி ஒரு அவசரச் சட்டத்தை வெளியிட்டது. 14.1.84 அன்று வெளியிடப்பட்ட இந்த அவசரச்சட்டம் அண்மையில் மாற்றப்பட்டு, ''வீடியோ மூலம் திரையிடப்படும் படங்கள் சட்டம், 1984'' நிறைவேற்றப்பட்டது.



இன்னலும், இடையூறும்
இருக்கத்தான் செய்யும்;
ஆனால், நமது உழைப்பு
ஒரு நாளும் வீணாகாது!

**செயலாக்கப் பிரிவு**

பெரிய அளவில் வரி ஏய்ப்பு நடைபெறுவதைப் புலனாய்வு, திடீர்ச்சோதனை மற்றும் ஆய்வுகள் வாயிலாகக் கண்டறிந்து சீர்படுத்துவதே செயலாக்கப் பிரிவின் முக்கியப் பணியாகும்.

மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், புதுக்கோட்டை, மதுரை தவிர ஏனைய எல்லா வணிகவரி மாவட்டங்களிலும் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. மதுரையில் அலுவலகக் கட்டடப் பணி முடியும் தறுவாயிலுள்ளது.

**சென்னை கிரீம்ஸ் சாலையில் கட்டப்பட்ட வணிகவரித்துறையின் புதிய கட்டட வளாகம்**

சென்னை நகரிலுள்ள அனைத்து வணிக வரி சரக அலுவலகங்களும் ஒரு பொதுவான அலுவலக வளாகத்தில் அமையவேண்டும் என்ற எண்ணத்துடன் அரசு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் 38 கிரவுண்டு பரப்பளவில் நான்கு அடுக்குக் கட்டடம் கட்டி 7-6-1984ல் திறக்கப்பட்டது. சென்னை வடக்கு மற்றும் தெற்குக் கோட்டத் துணை ஆணையர்களின் அலுவலகங்கள், துணை ஆணையரின்(செயலாக்கம் )அலுவலகம் மற்றும் வணிகவரித் துறைப் பயிற்சி நிலையம் ஆகியவை இப்புதிய கட்டடத்தில் இயங்கும்.

## நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

நமது தாய்த்திருநாடு ஒரு விவசாய நாடு. தமிழகத்தின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உள்ளது. நமது மக்களில் பெரும் பகுதியினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே நிலம் வைத்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களது நிலத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும், அதன் பேரில் உள்ள நன்மைகளை முறைப்படி பெறுவதிலும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய இன்னல்களை நீக்கி விவசாயிகள் நன்மை பெற வேண்டும் என்ற நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் புதியதொரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அத்திட்டத்தின் பெயர்: நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்.

**திட்டப்பணி செயல்படும் பகுதிகள் :**

தமிழகத்தின் மொத்தப் பரப்பளவு 1,30,069 சதுர கிலோ மீட்டராகும். இவற்றில், ஒதுக்கப்பட்ட காடுகளும் அண்மையில் மறு நில அளவை செய்த கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களும், தீவிர உட்பிரிவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட வட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை. இந்தப் பகுதியில் முதல் கட்டமாக எடுத்துக் கொண்ட பகுதிகளில் இத்திட்டப்பணி முடிந்த பிறகு இத்திட்டம் அமல் செய்யப்படும். ஆக, எஞ்சியுள்ள 80,000 ச.கி.மீ. கொண்டுள்ள பரப்பு 13 மாவட்டங்களில் உள்ள 98 வட்டங்களில் உள்ளன. அப்பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை அரசு கடும் விரைவுத் திட்டமென அறிவித்து இப்பணியின் முன்னேற்றத்தை அவ்வப்பொழுது கூர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இன்று வரை 5 வட்டங்களில் இப்பணி முழுமையாக முடிவு பெற்றுள்ளது.

**இத்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள் :**

1. புதுப்பட்டா ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பட்டாவுடனும் அப்பட்டாவில்

கண்டுள்ள நிலங்களின் புலப்படங்கள் நான்கு பக்க அளவுகளுடன் கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு புலன்களுக்கும் வடக்குப் பக்கமுள்ள பட்டாதாரரின் பெயரும் எழுதிக் காண்பிக்கப்படுகிறது.

2. கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதற்கெனப் பிரத்தியேகமாக நில உரிமையாளரிடமிருந்து விண்ணப்பம் இல்லாமல் செய்து தரப்படுகிறது.

3. கிராமங்களிலும் வட்ட அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் மூல ஆவணங்களான செட்டில்மெண்ட் பதிவேடு, நிலச்சுவடி (Field Measurement Book) சிட்டா, கிராமப்படம் புதியதாகத் தயாரிக்கப்பட்டு, எதிர் வரும் 30 ஆண்டுகளுக்குப் பயன்படும்அளவிற்குச் செய்து கொடுக்கப்படுகிறது.

4. இத்திட்டம் அண்மையில் தமிழக அரசால் கொண்டு வந்துள்ள நில உரிமைப் பதிவேடு சட்டத்தினை ( Patta Pass Book Act. செயல்படுத்தப் பெரிதும் உதவுகிறது.



5. நிலங்களிலுள்ள காணாமற்போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

6. அரசுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு வட்டாட்சியர்களுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

7. கிராமங்களில் நஞ்சையாகப் பதிந்துள்ள நிலங்கள் தற்போது புஞ்சையாகவும், புஞ்சையாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் நஞ்சையாகவும் இருக்குமானால் அத்தகைய மாற்றங்களும் அதுபோல் பூமியில் தற்பொழுது உபயோகத்தில் உள்ள நடைபாதை, வண்டிப்பாதை போன்ற பொதுமக்கள் உபயோகித்து வரும் இடங்களைப் புறம்போக்காக மாற்ற ஏதுவாக அத்தகைய புலங்களும் கணக்கெடுக்கப்பட்டு, வருவாய்த்துறைக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

8. இத்திட்டம் கிராம மற்றும் நகரங்களில் படித்து வேலை இல்லாமல் இருக்கும் சுமார் 12,000 இளைஞர்களுக்கு மாதச் சம்பளத்திலும், சுமார் 20,000 தொழிலாளர்களுக்குத் தினப்படி வேலையும் கிடைக்க வழி செய்கிறது.

9. இத்திட்டம் அமலாக்கப்பட்டதன் காரணமாக தமிழக நில அளவைத்துறையில் சுமார் 1725 நபர்களுக்கு உயர் பதவிகள் கிடைத்திருக்கின்றன.

10. இத்திட்டம் இந்தியப் பிரதமர் அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தின் 4-வது அம்சமான நிலங்களின் பதிவுகளையும் அரசு ஆவணங்களில் உள்ள நிலையினையும் இன்றைய தேதி வரை முறைப்படுத்தி, சரி செய்து வைப்பதை நிறைவு செய்கிறது.

இத்திட்டத்தினால் இதுவரை பயனடைந்த விவசாயப் பெருங்குடி மக்களின் எண்ணிக்கை 31,85,532 ஆகும். இதுகாறும் 21,18,600 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தனிப் பட்டாக்கள் 15,71,732 ஆகும். கூட்டுப் பட்டாக்கள் 5,46,868 ஆகும்.

**பட்டா பாஸ் புத்தகம் :**

பட்டா பாஸ் புத்தகம் நில உடைமைதாரருக்குப் பெரிய வரப் பிரசாதம் ஆகும். இப்புத்தகத்தில் அவரது நிலம் சம்பந்தமான எல்லா விவரங்களும் குறிக்கப்படுகிறது.

நிலத்தின் அடிப்படையில் பெறும் கடன் விவரங்களும் குறிக்கப்படுகின்றன. அந்த நிலத்தின் மீதுள்ள வில்லங்கங்களும் குறிக்கப்படுகின்றன.

தமிழக விவசாயப் புள்ளி விவரக் கணக்குகள்படி, இங்குள்ள கைப்பற்று நிலங்கள் 71,50,890 என கணக்கிடப்பட்டுள்ளது. தற்பொழுது ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு பட்டா வீதம் கொடுக்கப்பட வேண்டுமெனவும், அப்பட்டாவில் அவர் அனுபவித்து வரும் தனிப்பட்டாவோ அல்லது கூட்டுப் பட்டாவோ அல்லது நிலங்களை அப்புத்தகத்தில் காண்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு தனியாகப்பட்டாவழங்கக் கூடிய நிலையில் நிலம் இல்லாது கூட்டுப்பட்டாக்களாக இருந்தாலும் அவருக்கு ஒரு பட்டா வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்விதம் வழங்குவதற்கென நாம் தயாரிக்க வேண்டிய பட்டாக்கள் ஒரு கோடி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது 93 வட்டங்களில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி நடந்து வருகிறது. மேம்பாட்டுத திட்டக் காலத்தை மேலும் ஆறு மாதத்திற்கு நீடிப்பதெனவும் பரிசீலனையில் உள்ளது. இவ்விதம் செய்யப்படுமேயானால், மேற்படி 93 வட்டங்களில் இப்பணி 31-3-86-ல் முடிவடைய வழியுள்ளது.

தற்பொழுது வருவாய் பின் தொடர் பணி திருவண்ணாமலை, தாராபுரம், கூனூர் மற்றும் காங்கேயம் வட்டங்களில் நடந்து வருகிறது. இப்பணி செய்யும்பொழுதே பட்டா பாஸ் புத்தகத்தையும் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளோம்.

இதுகாறும் விவசாய நிலங்களுக்குமட்டும் நாம் பட்டா கொடுத்து வந்துள்ளோம். தற்போது நத்தத்தில் உள்ள வீட்டு மனைகளுக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென முடிவு

எடுத்துள்ளோம். இத்திட்டத்தை அமல் செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராம நத்தங்களை விரிவான முறையில் நில அளவை செய்ய வேண்டியுள்ளது. இப்பணி 1-5-84 முதல் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத்திட்டம் முழுமையாக முடிந்த 3 வட்டங்களில் எடுத்துக் கொள்ள தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இவ்விதம் செய்யப்படுமேயானால், கிராம நத்தத்திற்குப் பட்டா வழங்கும் பணியையும் புதிய நிலங்களுக்குப் பட்டா வழங்கும் பணியையும் இரண்டு ஆண்டுக் காலவரையறைக்குள் செய்து முடித்து விடலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**திட்டத்தின் பணி முன்னேற்றம் :**

இத்திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த பரப்பு ஏறக்குறைய 80,000 ச.கி.மீ. ஆகும். அவற்றில் சென்ற மார்ச்சு 84 முடிய 32,022 ச.கி.மீ. கொண்டுள்ள பரப்பளவில் அளவுப்பணி முடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3581 கிராமங்களில் புதிய பட்டாக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 3101 கிராமங்களுக்குப் புதியதாக அளிக்கப்பட்ட ஆவணங்கள் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் தழுவிய மட்டில் ஆய்வும் கருத்தரங்கும் நடத்தி பொதுவாக அப்பகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையும் நிலக்கிழார்கள், பொதுமக்கள் அவர்களது கருத்தையும் விவசாயப் பெருங்குடி மக்களின் கருத்தையும் கேட்டு அவர்களது விருப்பத்திற்கேற்ப எங்கெங்கு மாறுதல்கள் செய்ய முடியுமோ அத்தகைய மாறுதல்களை உடனுக்குடன் செய்து மக்களுக்கு நன்மை செய்வதே இவ்வரசின் நாட்டமாக இருந்து வருகிறது.

இத்திட்டப்பணிக்கென கிராமங்களுக்கு வரும் இத்துறை ஊழியர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் அனுபவித்து வரும் நிலங்களின் அத்துக்களையும், அவர்கள் கைவசம் உள்ள ஆவணங்களையும் காட்டி அவர்களது புலப்பணியைச் செம்மையாகவும் சீராகவும், நன்மையாகவும், உடனடியாகவும் செய்து முடிக்க ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

**ஒருவர் எந்த அளவுக்கு உயர் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமோ, அந்த உயர்ந்த கல்வியைக் கற்றுக் கொள்ளும்போதே அவர்கள் உழைக்கும் கல்வியையும் கற்றுக் கொள்ள வேண்டும். தொழிற் கல்வி கற்றுக் கொள்ள வேண்டும்.**




# தோவாளை ஊராட்சி ஒன்றியம் பூதப்பாண்டி

**கன்னியாகுமரி மாவட்டம்**

**தச்சுக்கூடம்** **இறச்சகுளம்**

அன்புடையீர்,

உறுதிக்கும் தரத்திற்கும் உத்தரவாதமானதும் நவ நாகரீக தோற்றமளிப்பது மான எல்லாவித மரச்சாமான்களும் விலை உயர்ந்த தேக்கு, ஈட்டி, வேங்கை மற்றுள்ள இரகங்களில் சன்மைக்கா பொருத்தியும், குறைந்த விலையில் குறித்த நாளில் செய்து தரப்படும் ஒரே நிறுவனம் ''தச்சு தொழிற்கூடம் இறச்சகுளம்''. வீடுகளுக்கும், பள்ளிகளுக்கும், அலுவலகங்களுக்கும் தேவையான மேஜை, நாற்காலிகள், கட்டில், சோபா செட், அலமேரா மற்றும் கதவு, நிலை, ஜன்னல் முதலியவைகளும் பல வருட அனுபவமுள்ள கைத்தொழில் வினைஞர்களைக் கொண்டு உறுதியான தரமான நேர்த்தியானதுமான குறித்த காலத்தில் வழங்கி வருகிறோம். இங்கு வாங்கும் பொருட்களுக்கு கொட்டேசன் தேவையில்லை.

## சேவையே எமது குறிக்கோள்!

**தங்கள் ஆதரவை என்றும் நாடும்**

**தி. விவேகானந்தம்,**
**ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்,**
**தோவாளை.**

**வே. வெங்கடகிரி, பி.எஸ்ஸி.,**
**கோட்ட வளர்ச்சி அலுவலர்,**
**தனி அலுவலர்,**
**நாகர்கோவில்.**



# சிறப்புக்குரிய செய்தித் துறை

**மாண்புமிகு செய்தி-**
**அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு. இராம. வீரப்பன்**

மக்களுக்கு அரசின் பணிகளை எடுத்துரைக்கும் பணியினைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது செய்தி மக்கள் தொடர்புத்துறை. அரசின் திட்டங்களும், பல்வேறு செயற்பாடுகளும் மக்களைச் சரிவரச் சென்றடைவதால்தான் அவை முழு வெற்றியடைகின்றன. மக்களும் அவைகளின் பலன்களைச் சரிவரப் பெற்று, சமுதாயத்தை உயர்த்த முடியும்.

கோடிக்கணக்காகவுள்ள மக்கள் சமுதாயத்தைச் சென்றடைய செய்தித்தாள்கள், திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள திரைப்படப் பிரிவு மாதமிரு முறை செய்தி மலர்களைத் தொகுத்து எல்லாத் திரைப்பட அரங்குகள் மூலமாக வெளியிட்டு வருகிறது. பல்வேறு துறைகளின் சாதனைகளை எடுத்து விளக்குவதாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளின் தொகுப்புகளாகவும் இவை திகழ்கின்றன. இவற்றுடன் வளர்ச்சிப் பணிகள் பற்றிய தனி விளக்கப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன. திரையரங்குகள் எட்டாத குக்கிராமங்களுக்குச் சிறு (16 மி.மீ.) திரைப்படக் கருவிகள் மூலமாக இவை காட்டப்படுகின்றன. மாதமொன்றுக்கு இக்கருவிகள் மூலம் 1200 காட்சிகளுக்குக் குறையாமல் படக் காட்சிகள் நடத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் அரசின் சாதனைகளை அறிந்து கொள்ளுகின்றனர்.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின் மூலம், நடிப்புக் கலை, இயக்குதல், ஒளிப்பதிவு, படத்தொகுப்பு போன்ற கலைத் தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன. இந்த நிறுவனத்தில் பயின்ற பலர், திரைப்பட உலகில் புகழ் மிக்கவர்களாக ஒளிவீசித் திகழ்கிறார்கள். வெளிமாநிலத்து மாணவர்களும் இங்குப் பயில்கிறார்கள். முன்பு 40 பேர் படித்தனர். மாண்புமிகுபுரட்சித் தலைவர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றுக் கொண்டபின், தற்போது 166 மாணவர்கள் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இங்குள்ள நூலகம் திரைப்படக் கலை மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. இத்தகையதொரு நிறுவனத்தை இந்தியாவின் மாநில அரசுகளில் நமது மாநிலந்தான் சிறப்பாக நடத்தி வருகிறது.

அண்மையில் புதிய வண்ணப் படக் கூடம், ஆவணக் காப்பகம் ஒலிச்சாதன அமைப்பு, மாணவர் விடுதி ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு ஸ்டுடியோவில் மாணவர்கள் படப்பிடிப்புப் பயிற்சி பெற்று வருகிறார்கள். தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் இந்தப் படப் பிடிப்பு அரங்கம் வாடகைக்கு விடப்படுகிறது. மற்ற அரங்குகளைவிட வாடகை குறைவு என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

'கட்சி, மதம், சாதி வித்தியாசமின்றி பெருந்தகைகளின் பிறந்த நாட்கள் கொண்டாடப் பெற வேண்டும்' என்று தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, தமிழ்ச் சான்றோர் - நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்கள் - அறிஞர்கள் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களைச் சென்னையிலும், மாவட்டத்தலைநகரங்களிலும் செய்தித் துறை கொண்டாடி வருகிறது.

பாரதியார் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுதும் கொண்டாடியது. தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, தமிழ்த்தென்றல் திரு. வி. க.




உள்ளங்கவரும் டிசைன்களில் பெட்சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள், உடுக்கத் தூண்டும் லுங்கிகள், நேப்கின்கள் மற்றும் பாலிஸ்டர் ரகங்கள்.

Erotex
FABRICS

# ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

"ஜெகநாத நிலையம்" 218, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001 போன் : 74170 & 75568 தந்தி: "ஈரோடெக்ஸ்"

ஷோரூம்கள் :

- 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-600 004
- 10, பி. வி. கே. ஐயங்கார் ரோடு, பெங்களூர்-560 053
- 7-3-130, மெயின் ரோடு, ஹிந்துப்பூர் (ஆந்திரம்)
- 231, நாய்க்கர் புது வீதி, மதுரை-1,

ஜெ. சத்தானந்தன்
தலைவர்

/ER/2/T

## ஓர் அறிவிப்பு

**மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் பொறுப்பில் பல துறைகள் இருக்கின்றன. அனைத்துத் துறைகளின் ஆக்கப் பணிகளையும் இந்த இதழ் ஒன்றிலேயே அடக்கிவிடுதல் எளிதல்ல. எனவே சில துறைப் பணிகளின் வளர்ச்சி குறித்த கட்டுரைகள் அடுத்து வரும் இதழ்களிலும் தொடரும்.**

**ஆசிரியர்**

வ. வே. சு. அய்யர் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களை அரசு விழாக்களாக இந்தத் துறை நடத்தியது. தியாகி சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டு விழாவை அக்டோபர் திங்களில் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், காயிதேமில்லத், முத்துராமலிங்கத்தேவர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், அம்பேத்கார் போன்ற பெருந்தலைவர்களின் பிறந்த நாள் விழாவை அரசு ஆண்டுதோறும் கொண்டாடிவருகிறது.

சென்னையில் உள்ள காமராஜர் நினைவு இல்லம், ராஜாஜி நினைவாலயம், காந்தி இல்லம், வள்ளுவர் கோட்டம், எட்டையபுரத்தில் உள்ள பாரதி நினைவில்லம், பாரதி மண்டபம், ஈரோட்டில் உள்ள பெரியார்—அண்ணா நினைவகம் - காஞ்சியில் உள்ள அண்ணா நினைவு இல்லம், தொரப்பள்ளியிலுள்ள ராஜாஜியின் இல்லம், தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம், கன்னியாகுமரி காந்தி நினைவாலயம், ஒட்டப்பிடாரம் வ. உ. சி. நினைவில்லம் ஆகியவை இந்தத் துறையின் பொறுப்பில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்கும் பெரும்பணி இத்துறைக்கு வாய்த்துள்ளது.

கிண்டி அருகே சிறப்பான அளவில் நேரு சிலை ஒன்றை நிறுவவும், கன்னியாகுமரியில் மிக உயரமான அளவில் வள்ளுவர் சிலை ஒன்றை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தந்தை பெரியார் அவர்களின் நினைவாக - மாவட்டத் தலைநகரங்களில் நினைவுத் தூண்களை அரசு எழுப்பியுள்ளது. இந்தத் தூண்களில் அவரது பொன்மொழிகளைப் பொறித்துள்ளது.

சென்னை நகரில் சுற்றுலாத் துறையின் மூலம் பொருட்காட்சிகள் நடைபெறுகின்றன. மாவட்டத் தலைநகரங்களிலும் மக்களுக்கு அரிய செய்திகள் — தகவல்கள் ஆகியவற்றைத் தரும் வகையில் செய்தித்துறை, பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் மதுரை, சேலம், கோவை, திருச்சி, நெல்லை, வேலூர் ஆகிய ஊர்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழக அரசின் பல்துறை அரங்குகளும், மைய அரசின் அரங்குகளும் இப்பொருட்காட்சியில் இடம் பெறுகின்றன. இவற்றின் வாயிலாக - பல்வேறு செய்திகள் - பாடங்களைப்போல் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பற்பல ஏடுகளைப் படித்து அறிந்து கொள்ளும் செய்திகளைப் பொருட்காட்சியின்மூலம் மக்கள்பெறுகிறார்கள். மக்களுக்குச் செய்தி அளிப்பதுடன் அரசுக்கு வருவாய் தேடித் தரும் சாதனமாகவும் இது திகழ்கிறது. இந்தியாவிலேயே இது ஓர் முன்னோடித் திட்டமாக நடைபெற்று வருகிறது.

அரசு ஆற்றிவரும் அரும் பணிகள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏனைய அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் உரைகள், கட்டுரைகள் ஆகிய வற்றையும் அரசின் சாதனைச் சரிதங்கள் குறித்தும் 'தமிழரசு' இதழ் பொதுமக்களுக்குத் தெரிவித்து வருகிறது. தமிழில் மாதமிருமுறை ஏடாகவும், ஆங்கிலத்தில் மாத ஏடாகவும் விளங்கி வரும் இந்த இதழின் பணிகள் சிறப்புற நடைபெறுவதற்காகத் 'தமிழரசு' அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது.

மத்திய அரசின் 'திட்டம்', மாநில அரசின் 'உழைப்பவர் உலகம்', 'திருக்கோயில்' போன்ற இதழ்களும் இங்கு அச்சாகின்றன. ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் இந்த அச்சகத்திற்கு ரூ. 6.5 இலட்ச ரூபாய் செலவில், அண்மையில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு, அரசு வழங்கும் சலுகைகள் போன்ற முக்கியமான செய்திகள் அவ்வப்போது சிறுசிறு கையேடுகளாக வெளியிடப் பெறுகின்றன.

இவ்வாண்டு முடிவிற்குள் கொடைக்கானல், ஏர்க்காடு, வேலூர், கோவை, திருச்சி, கும்பகோணம், நெய்வேலி ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் முழு ஒத்துழைப்புடன் தொலைக்காட்சி நிலையங்கள் உருவாகவுள்ளன.

நாகர்கோவில், மதுரை ஆகிய ஊர்களில் வானொலி நிலையங்களும் உருவாகி வருகின்றன.

இவ்வாறு, பொதுமக்களுக்கும் அரசுக்கும் பாலமாகத் திகழ்ந்து வரும் செய்தித்துறை, தனது பணிகளை - பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.



தந்தி: "சென்டெக்ஸ்" போன்: 32

ஒவ்வொருவரும் தேர்ந்தெடுப்பது

ஒவ்வொருவரும் உபயோகிப்பது

# சென்டெக்ஸ்

- படுக்கை விரிப்புகள்
- தலையணை உறைகள்
- மேஜை விரிப்புகள்
- அலங்காரத் திரைத் துணிகள்
- துண்டுகள்
- டர்க்கித் துண்டுகள்
- சீர் சக்கர் ரகங்கள்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்:

**சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,
கே. 885.**

தபால் பெட்டி எண். 32 சென்னிமலை-638 051.
தமிழ்நாடு.

ஷோரூம்கள்:

1) சென்டெக்ஸ் ஷோரூம்,
811, அண்ணாசாலை, சென்னை-2

2) சென்டெக்ஸ் ஷோரூம்,
11, பிரிகேடு ரோடு,
பெங்களூர்-1.

M. P. நாச்சிமுத்து B.A., B.L.
தலைவர்.



# அறநிலையத் துறையின் அரும் பெரும் பணிகள்

தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கி வரும் பல்வேறு துறைகளில் இந்து சமய அறநிலையத்துறையும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

தொன்று தொட்டே தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையில் அறநிலையங்களாகிய திருக் கோயில்கள், மற்றும் அவற்றோடு தொடர்புடைய பல வகைச் சமய நிறுவனங்கள், பெரிதும் தொடர்புடையனவாக விளங்கி வருகின்றன.

கோயில்களை உண்மையிலேயே சிறந்த சமுதாய நல நற்பணிக் கூடங்கள் என்றே கூறலாம். ஆதலின் தமிழ்நாடு அரசின் பல்வேறு பிற துறைகளைப் போல அறநிலையத்துறையும் மிக்க முதன்மையும், சிறப்பும் வாய்ந்து முன்மாதிரியாகத் திகழ்கிறது.

**திருக்கோயில்கள்:**

இந்துசமய அறநிலையத் துறையானது கடந்த நான்கு ஆண்டுகளில் பலவகைகளில் வளர்ந்து முன்னேற்றம் பெற்றுள்ளது. அறநிலையத்துறையின் பொறுப்பில் 34,230 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,193: திருமடங்கள் 55: திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கோயில்கள் 55: குறிப்பிட்ட கட்டளைகள் 1,721: அறக்கட்டளைகள் 189: சமணக் கோயில்கள் 17. இந்நிறுவனங்களில் 25,930 நிறுவனங்கள் உதவித்தொகை விதிக்கத்தக்க வருமானம் உடையனவாகும். இவற்றின் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 18.57 கோடி என மதிப்பிடப்படுகிறது. இத்தொகை, சென்ற ஆண்டு ரூபாய் 17.72 கோடியாக இருந்தது. இவ்வாண்டில் ரூ. 0.85 கோடி உயர்ந்துள்ளது.

**திருக்கோயில் பணியாளர்களுக்குச் சலுகைகள்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 15-7-82-ஆம் நாள் முதல், தொகுதி காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூபாய் 100-க்கு மேற்பட்டுச் சம்பளம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் இத்திட்டத்திற்காகப் பெயரளவிலான குறைந்த அளவுத் தொகை ரூ. 25 பிரிமியத் தொகையாகச் செலுத்த வேண்டும். ரூ.100க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் பணியாளர்கள் பிரிமியம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை, இத்திட்டம் செயலுக்கு வந்த பின்னர், மரணமடைந்த ஆலயப் பணியாளர்கள் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்பீட்டுத் தொகையைப் பெற்று வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி இதுவரை 40 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 5,000 வீதம் இதுவரை ரூ. 2 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் பத்தாயிரம் அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயில்களில் பத்து ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டிற்கும், அரை மாதத்திற்குரிய சம்பளம் வீதம் பணிக்கொடை வழங்கப்படுகிறது. திருக்கோயில் பணியாளர்களுக்கு அவ்வப்போது பஞ்சப்படி அனுமதிக்கப்பட்டு வருகின்றது. நானூறு திருக்கோயில்களில் வருங்கால வைப்பு நிதித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-81 முதல், பணியாளர்களின் சம்பளம், பஞ்சப்படி முதலிய செலவுகள், ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும் என்ற வரம்பு 40 சதவீதமாக இருக்க வேண்டும் என்று உயர்த்தப்பட்டுள்ளது.

**திருப்பணி வேலைகள்:**

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறை பலவகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. 292 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ரூபாய் 12.97 கோடி அளவிற்குத் திருப்பணி நிர்வாக அனுமதி வழங்கப் பெற்றுள்ளது. 1357 திருப்பணி வேலைக்கான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 114 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் ரூ. 69 இலட்சம்





அளிக்கப் பெற்றுள்ளது. பிற்பட்டோர் நல வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள 35 திருக்கோயில்கள் அறநிலையத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 7 இலட்சத்து 78 ஆயிரம் அரசு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1097 திருப்பணி வேலைகள் ரூ. 3.14கோடி செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 39 திருக்கோயில்களின் திருப்பணி வேலைகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. பக்தர்களுக்கும், பயணிகளுக்கும் உரிய வசதிகள் செய்தளிக்கும் முறையில் 58 ஓய்வு விடுதிகளும், 231 குடில்களும் 936 அறைகளும், 103 திருமண மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன.

**அரசு மானியங்கள்:**

1983-84 ஆம் ஆண்டில் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், திருவுருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசு ரூ. 23 இலட்சம் அனுமதித்துள்ளது. இவ்வாண்டில் மட்டும் 108 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாக நடத்தப்பெற்றன.

**தங்கரதம்:**

பழனி, திருத்தணி, திருச்செந்தூர், சுவாமிமலை, சமயபுரம், மதுரை, இரத்தினகிரி, திருவேற்காடு, வடபழனி ஆகிய ஒன்பது பெரிய திருக்கோயில்களில் தங்க ரதம் செய்யப்பட்டுள்ளன. சென்னை கந்தகோட்டம் திருக்கோயிலில் தங்கரதம் அண்மையில் செய்து வெள்ளோட்டம் நடைபெற்றது.

**இலவசத் திருமணங்கள்:**

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கு இணங்க நிதிவசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது. 15-8-81-லிருந்து இதுவரை ரூ. 7.86 இலட்சம் செலவில் 944 திருமணங்கள் சமயபுரம், திருத்தணி, திருவேற்காடு, திருவாரூர், இரத்தினகிரி, சோளிங்கபுரம், கருவூர், பண்ணாரி மற்றும் பல இடங்களில் நடத்தப்பட்டன.

**குறைந்தபட்ச ஊதியம் பெறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு நிதியுதவித் திட்டம்:**



தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணி புரியும் திருக்கோயில் ஊழியர்கள் பலர் மாதத்திற்குக் குறைந்த பட்சம் ரூபாய் 50 கூட ஊதியம் பெற வகையின்றி அல்லல்படுவது அரசின் கவனத்திற்கு வந்தது, இவ்விதப் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்ய தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களின் உபரிநிதி மூலதனத்தில் இருந்து ரூ. 1 கோடி ஒதுக்கி, அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தைக்கொண்டு மாதத்திற்கு ரூ. 50-ம், அதற்கும் குறைவாகவும் ஊதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் கடன் முதலான நிதியுதவி வழங்கும் திட்டம் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிதி வசதி இன்மையால், ஒருகால பூசை கூட நடைபெறாமல் உள்ள திருக்கோயில்களுக்கு நிதி உதவித் திட்டம்:**

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி, இயற்கையின் சீற்றம் ஆகிய பல்வேறு காரணங்களால் பல திருக்கோயில்கள் வருமான இழப்புக்கு உள்ளாகி, ஒரு கால வழிபாட்டுக்கும் கூட வசதியற்ற நிலையில் உள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் குறிப்பாக தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் ஆங்காங்கே காணப்படுவது அவ்வப்போது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, இந்நிலையை மாற்றி இத்தகைய திருக்கோயில்களில் குறைந்த பட்ச அளவிலாவது இறைவழிபாடு தொடர்ந்து நடைபெற வகை செய்ய வேண்டிய அவசியத்தைக் கருதி இதற்காக நிதி வசதி படைத்த ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தவும், இதனை அதிக வட்டிவிகிதம் கிடைக்கத் தக்க வகையில் முதலீடு செய்தும் அவ்விதம் செய்யப்படும் முதலீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருமானம் சுமார் ரூபாய் அறுபது இலட்சத்தினை வழிபாட்டிற்குச் சிரமமான ஆலயங்களில் ஒருகால பூசை நடைபெறச் செய்ய நிதி உதவி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

**கூட்டு வழிபாடு:**

ஆதி திராவிடர்களுக்கும், ஏனைய இந்து சமய மக்களுக்கும் இடையில் பேதங்களை ஒழித்து ஒற்றுமையை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழகம் முழுவதிலும் ஐயாயிரத்திற்கும் அதிகமான கோயில்களில் சிறப்புக் கூட்டு வழிபாடும், பொது விருந்தும் நடத்துவதற்கான திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகின்றது. 15-8-81 மற்றும் 15-8-82 அன்று திருவேற்காடு மற்றும் மாங்காட்டில் இச்சிறப்பு மிக்க நிகழ்ச்சியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்துசமய நிறுவனங்களில் சாதி, இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தற்குரிய வழிவகைகள் ஆராயப் பெற்று அதற்கென அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று அவற்றைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெற்று வருகின்றன.

**தேரழுந்தூரில் கம்பர் கோட்டம்**

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் நினைவாலயம் அமைக்க 29 ஆண்டுகளுக்குமுன் முன்னாள் ஆளுநர் திரு ஸ்ரீபிரகாசா 10-10-54ல் அடிக்கல் நாட்டி, அதே நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லாது நின்றுவிட்ட திட்டத்தைப் புதுப்பித்து, கம்பர் நினைவைப் போற்றும் வகையில் கோட்டம் அமைக்க அரசு முடிவு செய்தது; முன்னாள் ஆளுநர் அடிக்கல் நாட்டிய அதே இடத்தில் அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலத்தில் ரூ. 20 இலட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாக இந்தப் பணியை முடிக்கக் கருதி 18-3-84 அன்று பணி துவங்கப்பட்டது.

# வனம் வழங்கும் வளம்



காடு நாட்டில் பொருளாதாரத்திலும், மக்களின் நல்வாழ்விலும் மிக முக்கிய மானதொரு பங்கினை வகித்து வருகிறது; ஆகவே அதனைப் பேணிப்பாதுகாத்தல் அவசியம்; அப்பொழுதுதான் மனித சமுதாயத்திற்குத் தேவையான மரம், விறகு, பசுந்தழை, உரம், எண்ணெய் பொருட்கள், காகிதம், ரயான், தோல் பதனிடும் மூலப் பொருட்கள் கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில், செய்துள்ள சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் பலப்பல.

1979-80ஆம் ஆண்டு முதல் 1983-84 வரையிலான காலத்தில், வனத்துறையின் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான, அரசால் செலவிடப்பட்ட தொகை சுமார் 100 கோடி ரூபாய்களாகும். ஆண்டுதோறும் இத் துறையில் திட்டப் பணிகளுக்கான செலவுத் தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டு, மேலும் மேலும், மேம்பாட்டுப் பணிகளை அதிகமாகச் செய்து கொண்டு வருகிறது. மேற்படி ஐந்தாண்டுக் காலத்தில் அரசிற்கு வரப்பெற்ற வருவாய் சுமார் ரு. 72 கோடி ஆகும்.

1976-77ஆம் ஆண்டில் தமிழக வனத்துறையின் கீழிருந்த வனப் பரப்பளவு 20,844 கி.மீட்டராகும். 1984ஆம் ஆண்டில், அதன் பரப்பளவு 22,040 கி. மீட்டராக உயர்ந்துள்ளதைக் காண்கையில், கடந்த எட்டு ஆண்டுகளில், வனத்துறையில் ஏற்பட்டுள்ள சீரமைப்புப் பணியினால் சுமார் 1600 கி.மீ. வனப் பரப்பளவு உயர்ந்துள்ளது. மேலும் கடந்த சில ஆண்டுகளாக தமிழக அரசு எடுத்துள்ள முடிவுகளின் காரணமாக, வனத்துறை நிலங்கள் மற்றைய பணிகளுக்கு அல்லது மற்றைய துறைகளுக்கு மாற்றுவது அல்லது இயற்கைக் காடுகளை அழித்து, புது வனத் தோட்டங்கள் அமைப்பது ஆகியவை அறவே நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், அதே சமயத்தில் அரசு தரிசு நிலங்கள், புகை வண்டி செல்லும் சாலைகள், சாலையோரங்கள் ஆகிய இடங்களில் மரங்களை நட்டு வளர்க்கும் பணி மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வன வளப் பாதுகாப்பிற்காக 1882 தமிழ்நாடு வனச்சட்டம், 1949 தமிழ்நாடு தனியார்காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தமிழ்நாடு மலைப்பகுதிகள்(மரங்கள் பாதுகாப்பு) சட்டம் இவைகளின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள விதிகள் ஆகியவைகளில் அரசு செய்துள்ள சில பல மாறுதல்கள் வருமாறு:

சில மர வகைகள் ''ஷெட்யூல் இனத்தில்'' சேர்த்தல், ஷெட்யூல் இன மரவகை வனக் குற்றங்களில், தண்டனை கடுமையாக ஆக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறைப் படுத்துதலும் மற்றும் அபராதத் தொகையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு காடுகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளோரை வெளியேற்றுதல்; மாவட்டக் குழுக்களை அமைத்து, தனியார் காடுகள் மற்றும் மலைப் பகுதிகளில் மரம் வெட்டும் கோரிக்கை மனுக்களைப் பரிசிலித்தல்; தனியார் மற்றும் மலைப்பகுதிக் காடுகளில் மரங்களை வெட்டி, புதிய மரங்களை நட்டு வளர்ப்பதற்கான வைப்புத் தொகையினை அதிகப் படுத்துதல்; தனியார் மற்றும் மலைப் பகுதிக் காடுகளில் மரங்களைத்திருட்டுத்தனமாக வெட்டுவோர்க்குக் கடுமையான தண்டனை அளித்தல்; மரங்கள் முதிர்ச்சியடைந்தவை என்பதைக் கோடிட்டுக் காட்டுதல்; தனியார் காடுகள் மற்றும் மலைப்பகுதிக் காடுகளில் மரம் வெட்டுதலைச் செயல்திட்டம் மூலம் செயல் படுத்துதல்.

சட்டம் மற்றும் விதிகளைத் திருத்தினால் போதுமா? போதாது. அவைகளைச் செவ்வனே செயல்படுத்துவதற்கேற்ப 12 வனப்பாதுகாப்புப் படைகள் பல முக்கிமான இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தில் பல இடங்களில், 83 வன சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு, அவற்றின் மூலமாக வனக்குற்றங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வனக்குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமும், அதே சமயத்தில் பணியாளர்களுக்குப் பாதுகாப்புத் தேவையினைக் கருத்தில் கொண்டு நவீன வசதிகள் குறிப்பாக துப்பாக்கி, தொலைபேசி, வாகன வசதி வழங்கப்பட்டுள்ளன.



பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமையால், காட்டுப் பகுதிகளில் வனக் குற்றங்கள் நிகழ்வது தடுக்கப்பட்டு வருகின்றன.

வனத்துறை மேற்கொண்டுள்ள சில நிர்வாக மேம்பாட்டுப் பணிகள் வருமாறு;

அரசு ரப்பர் தோட்டத்தினை (Government Rubber Plantation) கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு வட்டம் என இரு வட்டங்களாகப் பிரித்தல், கோட்ட அதிகாரிகளின் பணிகளை வட்டார அதிகாரிகள் செவ்வையாகக் கண்காணித்திட, வேலூர், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு புதிய வட்டங்கள் ஏற்படுத்துதல், கோயம்புத்தூர் மாவட்டம் கோவை மற்றும் பெரியார் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக கோயம்புத்தூர் வடக்கு, மத்திய கோட்டங்கள், கோயம்புத்தூர், சத்தியமங்கலம், ஈரோடு, என மூன்று கோட்டங்களாகப் புதியதாகச் சீரமைத்தல்; மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கப்பகுதிகளில் தர்மபுரியைத் தலைமை இடமாகக் கொண்டு மேலும் ஒரு மண்வளப் பாதுகாப்புக் கோட்டம் அனுமதித்தல்; தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மரங்களின் விலையில் 5 சதவீதம் என்ற அளவில் நிர்வாகச் செலவுகள் வசூலித்தல்; சேலத்தில் ரு. 9.82 லட்சம் செலவில் பாதுகாப்பான சந்தன மரக்கிடங்கு கட்ட அனுமதித்தல்; திருப்பத்தூருக்கு அருகே சந்தனத்தைலத் தொழிற்சாலை ஒன்று அமைத்தல்.

புதிய இரண்டு வனக் கோட்டங்களை ஏற்படுத்தி, தென் ஆர்க்காடு ,சேலம் மாவட்டங்களில் முக்கியமலைப் பகுதியான கல்ராயன் மலையை மேம்படுத்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

விலை மதிப்புள்ள மரவகைகளைக் (சந்தன மரம் முதலியன) கடத்துபவர்கள் சென்னையிலிருந்து செயல்பட்டாலும்கூட, சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அவர்களைக் கண்காணிப்பதற்கு வனத்துறை எவ்வித விசேட அமைப்பினையும் பெறவில்லை. இக்குறையினைப் போக்கிட வனப்பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

## வனச் செல்வம் பெருகும் வழி

1980ல் மத்திய வனவாரியம் தன்னுடைய பரிந்துரையில், வனம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் முறையை, ஐந்து வருடங்களில் படிப்படியாகக் குறைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

பல மாநிலங்கள் ஒப்பந்தக்காரர்கள் முறையை அடியோடு ஒழித்துவிட்டன. சில மாநிலங்கள் ஓரளவுதான் ஒப்பந்தக்காரர்கள் முறையை நீக்கியுள்ளன.

இதுபற்றித் தலைமை வனப்பாதுகாவலரும், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''தமிழ்நாட்டு வனவேலைகளை பொறுத்தவரை, ஒப்பந்தக்காரர்களை நீக்குமுறை படிப்படியாக எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கொள்கைப்படி சிறு காடுபடு பொருட்கள் சேமிக்கும் வேலை, லாம்ப்ஸ் (LAMPS) மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு வன விதித் தொகுப்புப் பிரிவு 130ஏ-யின்படி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் விறகு கூப்புகளும் முடிந்தவரை கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன. ஒதுக்குக் காட்டில் விறகு கூப்புகளை வெட்டுவது நிறுத்தப்பட்டாலும் சில விறகு கூப்புகளை வெட்ட, துறையே நடவடிக்கை எடுத்துள்ளது. 1981ஆம் ஆண்டிலிருந்து மூங்கில் கூப்புகளை பொது ஏலம் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மூங்கில் கூப்புகள் துறை மூலம் அல்லது அம் மூங்கில்கள் தேவைப்படும் காகிதத் தொழிற்சாலைகள் மூலம் தேவைக்காக வெட்டி எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

''துறை மூலம் வனவேலைகளைச் செய்வது, ஊக்கம் தருவதாக உள்ளது. துறைக்கு இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும். மேலும் விறகு கூப்புகள் வெட்டுவது வன இயல்படி நடந்து வருகிறது. ஒப்பந்தக்காரர்கள் மூலம் விறகு கூப்புகளை வெட்ட அனுமதித்தால், அவர்கள் ஒப்பந்தத்தை மீறி விறகு கூப்புகளுக்கு வெளியே உள்ள மரங்களையும் வெட்டுவார்கள்.''

''துறை மூலம் வெட்டுவதால் மேற்படி கள்ள வெட்டுக்களும், ஒப்பந்த மீறல்களும் தடுக்கப்படுகின்றன. மேலும் துறை மூலம் மூங்கில் கூப்புகள் வெட்டப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் மூலம் அதிக மூங்கில்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஒப்பந்தக்காரர்களை நீக்கியதன் மூலம் வனச் செல்வங்கள் அழிவது குறைக்கப்படுகிறது.''

**With**

**the best**

**compliments**

**from :**

# Chandrika Products

( Manufacturers of Chandrika Ayurvedic Toilet Soap )

Head Office :

**COIMBATORE**

Branch .

**MADRAS**



# வாழ்வளிக்கும் கல்வி

மாண்புமிகு கல்வி அமைச்சர்
**திரு. சே. அரங்கநாயகம்**

தேசிய அளவில், சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்கு, கல்வி ஒரு சக்தி வாய்ந்த கருவியாக விளங்குகிறது. எனவே கல்வி வளர்ச்சிக்காக எல்லா நிலைகளிலும் முனைப்புடன் செயலாற்றி வருகிறது **மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு.**

1984-85-ல் தமிழக அரசு நிதி நிலை அறிக்கையில் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 402 கோடியாகும். இது அரசின் மொத்தச் செலவான ரூ. 1946 கோடியில் 21 சதவிகிதம்ஆகும். 1980-81ல் கல்வி மானியத்தின் கீழ் செலவிட்ட தொகை ரூ. 224 கோடி மட்டுமேயாகும். இது இவ்வாண்டு ரூபாய் 402 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தொடக்கக் கல்வி :**

14 வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் கோட்பாடாகும். அதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 6-11 வயதுத் தொகுதியில் 95 சதவிகிதத்தினரையும் 11-14 வயதுத் தொகுதியில் 50 சதவிகிதத்தினரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்பது அனைத்து இந்தியாவிற்கும் மைய அரசு திட்டக்குழு விதித்துள்ள இலக்காகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தற்பொழுதே (1983-84) 6-11 வயதுத்தொகுதியினரில் 97.96 சதவிகிதத்தினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 69.40 சதவிகிதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (1980-81-ல் பள்ளிகளில் படித்தோர் 6 - 11 வயதுத் தொகுதியில் 94.67 சதவிகிதத்தினரும், 11-14 வயதுத் தொகுதியில் 59.68 சதவிகிதத்தினரும் மட்டுமே ஆவர்). 1983-84-ல் மட்டும் 3.82 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். பெரும் எண்ணிக்கையில் மாணவ மாணவியர் கடந்த இரண்டு ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளதற்கு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமே' காரணமாகும்.

**தொடக்கப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டம்**

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 முடியவுள்ள வயதுத் தொகுதி மாணவ மாணவியருள் (பெரும்பாலும் 1-5 வகுப்புகளில் 'பயில்வோர்') ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்' கீழ் 1982 ஜூலை - செப்டம்பர் முதல் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நாள்தோறும் 34,000-க்கு மேற்பட்ட பள்ளிகளில் மொத்தம் 44 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் (நாள் தோறும் குழந்தைக்கு 45 காசு செலவில்) சத்துணவு பெற்று வருவது வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும். இத்திட்டம் 15-9-84 முதல் 10-15





வயது வரையுள்ள மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும்.



**தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கான பிற நடவடிக்கைகள் :**

தொடக்கப் பள்ளிகளில் 1-3 வகுப்புகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ. ஒரு கோடி செலவில் இலவசமாய்ப் பாட நூல்கள் வழங்கப்படுகின்றன.

1-3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யப்படுவதில்லை, இச்சீர்திருத்தம் 1977-78 முதல் அமலாக்கப்பட்டது. தொடக்கப் பள்ளியில் சேரும் (6-11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்று விடுவோர் தொகை 1977-78-ல் 40 சதவிகிதம் ஆக இருந்தது.

1982-83-ல் அது 29 சதவிகிதமாகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பள்ளி செல்லும் மனப்பான்மையைப் பிஞ்சுப் பருவத்திலேயே புகட்டுவதற்காக தமிழகத்தில் கிராமப்புறங்களிலுள்ள 4343 குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி (இளஞ்சிறார் பள்ளி) வகுப்பு தொடங்க அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் பெரும்பாலானவை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அவற்றில் பணி செய்யும் சுமார் 95,000 ஆசிரியர்களும் யாதொரு இடர்ப்பாடும் இன்றி கல்விப் பணியில் ஆர்வத்தோடு பணி செய்ய வழி வகுத்து அவர்கள் அனைவரும் 1-6-81 முதல் அரசுப் பணியாளர்களாக் ஏற்கப்பட்டுள்ளனர். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 5154-க்கு, கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ. 33 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி வசதி**

1977-78 முதல் இதுவரை மொத்தம் 525 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. உயர்நிலைப்பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைத்தல், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் தருதல், கட்டடங்கள் ஆகிய வகைகளில் அரசு, ஆண்டுதோறும் நிதிநிலை இடந்தரும் அளவுக்குச் செலவிட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981-82 முதல் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 6-10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1 மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 37,000 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இந்தச் சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982-83 முதல் 300 மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இது இவ்வரசு செயல்படுத்தியுள்ள முற்றிலும் புதிய சிறப்புத் திட்டமாகும்.

பள்ளி மாணவர்களுக்கு மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கப்படுகின்றன. பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் மாணவர்கள் எளிதில் பெறும் வகையில் பள்ளிதோறும் கூட்டுறவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பாடம் பாடமாக எழுதித் தேர்ச்சி பெறும் கம்பார்ட்மெண்டல் முறையை இவ்வரசு 1978 முதல் அமலாக்கி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. 1978-79 முதல் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அமலாக்கப்பட்டுள்ளது.**

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி :**

1978-79-ல் புதிதாகத் தொடங்கிய "+2, அதாவது மேல்நிலைப் பள்ளிக் கல்வியை பள்ளிகளிலேயே படித்தல் வேண்டும் என்ற இவ்வரசின் சீரிய முடிவினால் எஸ். எஸ். எல்.சிக்கு மேலான உயர்கல்வி பயிலும் வசதி தற்போது ஆயிரக்கணக்கான கிராமப்புற மையங்களிலும் கிட்டியுள்ளது. முன்னர் புகுமுக வகுப்பு பயிலும் வசதி சுமார் 188 மையங்களில்தான் இருந்தது. இப்பொழுதோ, மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் 1400க்கு மேற்பட்ட பள்ளிகளில் உள்ளன. இவற்றில் சுமார் 1000 மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகளில் 1983-84ல் பயின்று வந்த 3.02 இலட்சம் மாணவர்களில் 57,000 பேர் தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர் (இந்தியாவனைத்திலும் மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற்கல்வி பயின்று வந்தவர்கள் எண்ணிக்கை 1982-83ல் 85,000 மட்டுமேயாகும்) **அனைத்து மாநிலங்களிலும் மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட வகுப்புகளின் எண்ணிக்கையிலும் தரத்திலும் தமிழ்நாடு முன்னோடியாக இருக்கிறது.** மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்களைப் பயின்று வெளி வரும் 1300 மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்ட ரூ. 12 கோடி அளவிலும், ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வாங்க ரூ. 6 கோடி அளவிலும் ஆன பெருந்தொகைகளை இவ்வரசு செலவிட்டு அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் பணி செய்யும் 'உட்படுத்தப்பட்ட' ஆசிரியர்கள் சுமார் 4,000 பேரும் பயன் அடையும் விதத்தில் 10 மாதச் சான்றிதழ்ப் பயிற்சி ஒன்றை நடத்தி அவர்கள் முழுத்தகுதி பெற்ற மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர்களையொப்பப் பணி நலன்களை அடையச் செய்யும் திட்டம் 1983-84 முதல் செயல்படுகிறது.

மனநிறைவு கொண்ட ஆசிரியர் சமுதாயத்தின் முழு ஒத்துழைப்

புடன் தான் கல்வி சிறப்பாக அமைய முடியும் என்பதை அறிந்து ஆசிரியர்களுக்கு இவ்வரசு அண்மை ஆண்டுகளில் வழங்கியுள்ள முதன்மை வாய்ந்த நன்மைகளில் சில.

ஆண்டுக்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு.

20 ஆண்டுப் பணிக்குச்சிறப்பு நிலை.

இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் படிப்படியாக இடைநிலை ஆசிரியர்களாக உயர்வு பெற வசதி.

ஆசிரியர்கள் குறைகளை உடனடியாகத்தீர்க்க,கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் குழுக்கள்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு.

தனியார் பள்ளி ஆசிரியர்களும், பிற பணியாளர்களும் பணியிலிருக்கும் பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி, கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில், (வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி) தனியார் பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை அண்மையில் தரப்பட்டுள்ளது.

மைனாரிட்டிகள் அல்லாத தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொழுது ஆதி-திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் பிற்பட்டோருக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்என்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய சலுகைகள் அண்மை ஆண்டுகளில் மிகத் தாராளமாக்கப்பட்டுள்ளன.

1981 மக்கள் தொகைக்கணிப் பின்படி தமிழ்நாட்டின் 4.83 கோடி மக்களில் 2.21 கோடி பேர்களே எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவு அற்றோர் எண்ணிக்கை 2.62 கோடியாகும். அவர்கள் 54 சதவிகிதம் ஆவர். எழுத்தறிவற்றோருக்கு எழுத்தறிவிக்கும் பணிக்கு கடந்த சில ஆண்டுகளாகத்தான் முதன்மை தரப்பட்டு வருகிறது. 1976-77-ல் முதியோர் கல்விக்கு ரூ. 11 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ ஆண்டுக்கு ரூ. 3 கோடிக்கு மேலே நிதி ஒதுக்கப்படுகிறது. அண்மை



ஆண்டுகளில் 16 இலட்சம் பேருக்கு மேல் முதியோர் கல்வி அளிக்கப்பட்டது. 1983-84ல் செயல்பட்ட முதியோர் கல்வி மையங்கள் எண்ணிக்கை 17,000 ஆகும். பயிலுவோர் - 5.50 இலட்சம் பேர். (3.55 இலட்சம், மகளிர் உட்பட).

முறையான பள்ளிகளில் பயில இயலாத மாணவ, மாணவியருக்காக கிராமப்புறங்களில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1000-க்கு மேல் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 6-14வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆண்டுதோறும் 30000-க்குமேலானவர்கள் கல்வி பெற்று வருகின்றனர்.

**வயது வந்தோர் கல்வி மையங்களில் 1982-83-ல் மகளிரைச் சேர்த்ததில் சிறப்பாக சாதனை புரிந்ததற்காக இம்மாநிலத்திற்கு மைய அரசு விருதாகிய ரூ. 25 இலட்சம் கிடைத்துள்ளது.**

**புதிய பல்கலைக் கழகங்கள்:**

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும். அண்ணா பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவை இவ்வரசின் முனைப்பான முயற்சிகளின் பயனாக நிறுவப்பட்டவை ஆகும். பெண்களுக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் அண்மையில் கோடைக்கானலில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்று அன்னை தெரஸா அவர்களின் பெயரால் தொடங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளிலிருந்து 1978-79 முதல் புகுமுக வகுப்பு நீங்கிய பின்னர் கல்லூரிக் கல்வியின் தர உயர்வுக்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்பொழுதுள்ள கலைக் கல்லூரிகள் 187 ஆகும். அவற்றில் 2 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆண்டுதோறும் புதிய பட்டப் படிப்பு வகுப்புகளும், பட்டமேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டு வருகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் நலன் கருதிப் பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள விகிதங்கள் அமலாக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட தகுதி பெற்ற பயிற்றுநர் மற்றும் விளக்குநர்களுக்கு உதவிப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வும், பத்தாண்டுப் பணி முடித்த உதவிப் பேராசிரியர்களுக்குப்பேராசிரியர்களாகப் பதவி உயர்வும் தரப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் எம். பில் (M. Phil) படிப்புக்காக 626 பேர்களும் பி.எச்டி (Phd.) படிப்புக்காக 35பேரும் அனுப்பப்பட்டனர். தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாகச்சம்பளம்,பட்டுவாடா செய்யும் முறை 1.4-80 முதல் செயல்படுகிறது.

**சட்டக்கல்லூரி:**

கோயம்புத்தூரில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இவ்வரசு புதிதாகத்தொடங்கிய 2 சட்டக் கல்லூரிகள் உட்பட இப்பொழுது மொத்தம் 4 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் யோசனைக்கேற்ப இம்மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் 1983-84 முதல் ஐந்தாண்டு (மேல் நிலைப் பள்ளிப் படிப்பில் தேறிய பின் 5 ஆண்டு) சட்டப் படிப்பு முறை புகுத்தப்பட்டுள்ளது. 1983-84-ல் சட்டக் கல்லூரி ஒவ்வொன்றிலும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களில் சுமார் பாதிப் பேர் இந்த புதிய 5ஆண்டு சட்டப் படிப்பு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**தொழில் நுட்பக்கல்வி:**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் இடைவிடாத நாட்டம் செலுத்த வேண்டியதை வலயுறுத்துவதற்காக தலைமைச் செயலகக் கல்வித் துறையின் பெயர் 1983 மார்ச் மாதத்தில் 'கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறை' என்று மாற்றியமைக்கப்பட்டது. 'அறிவியல் தொழில்நுட்பவியல் மாநில மன்றம்' ஒன்றை' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

## இருள் நீக்கும் பிள்ளைகள்



**ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் நிர்வாக நிபுணர்களாகவும் மாறி வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். அந்தப் பிள்ளைகளின் மூலம் தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும். கஷ்ட நஷ்டங்கள் துடைக்கப்படும்.**

**பேரறிஞர் அண்ணா**

தொழில் நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பரில் அமைக்கப்பட்டது. கடந்த 6 ஆண்டுகளில் பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) 37 புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள தொழில்கல்வி நிலையங்களிலும் தேவைக்கேற்பப் பல்வேறு பட்டயப் படிப்புகளும் பட்டப்படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

அரசுக்கு தொடராச்செலவோ, தொடரும் செலவோ எப்பொழுதும் ஏற்படாத வகையில், தனியார் பாலிடெக்னிக்குகளை தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. அந்த தனியார் பாலிடெக்னிக்குகள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்க அத்திட்டம் வழிவகை செய்கிறது. அந்நிபந்தனைகளில் சில முக்கியமான அம்சங்கள் வருமாறு:

போதுமான நிலத்தை தனியார் நிர்வாகம் தர வேண்டும். ரொக்க வைப்புத் தொகையான ரூ. 10 இலட்சம் வைப்புத் தொகை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களைச் சேர்ப்பது அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டுச் செய்யப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய கட்டணமும் (Capitation Fee ) வசூலிக்கக் கூடாது. நிபந்தனைகள் மீறப்பட்டால் அந்த பாலிடெக்னிக்குகளை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தெரிவிக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் தனியார் பாலிடெக்னிக்குகளைத் தொடங்க பல நிருவாகங்கள் முன் வந்துள்ளன.

சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும், ரூ. 1.59 கோடி செலவில் 'கோள்கள் இயங்கும் காட்சி' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது. திரு சி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு இது அமைக்கப்படும். இந்த பிளானிடேரியத்துக்கு 'பிர்லா பிளானிடேரியம்' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம்மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

### விளையாட்டும் இளைஞர் நலனும்

விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக 1979 செப்டம்பரில் புதிதாக ஒரு துறை அமைக்கப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், அண்ணாமலை நகர் ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகளும், கோயம்புத்தூரில் மாணவியர் விளையாட்டுப் பள்ளி ஒன்றும், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1983-84-ஆம் ஆண்டில் விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதி வசதிகள் மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலைக்கும் விரிவாக்கப்பட்டன. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப்பள்ளி, சென்னை மற்றும் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் இவ்வசதி அளிக்கப்படும். அண்மையில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், பள்ளி கல்லூரிகளில் பயிலாத இளைஞர்கள் ஆகியோர்களுடைய விளையாட்டுத் திறனைப் பேணி வளர்ப்பதற்கு இப்புதிய துறை பல்வேறு முனைப்பான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

விளையாட்டில் ஆர்வம் மிக்க இளஞ்சிறார்களை பாலர் பள்ளி நிலையிலேயே தெரிந்தெடுத்து அவர்களுடைய விளையாட்டுத் திறனைப் பேணி வளர்க்கும் திட்டம் ஒன்றையும் விளையாட்டுத்துறை செயல்படுத்தி வருகிறது.

பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கத்தைத் தமிழக அரசு வெகுவாக ஊக்குவித்து வருகிறது. இந்தியா அனைத்திலும் உள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கினர் தமிழகத்தில் உள்ளனர். சாரண சாரணியர் இயக்கத்தில் தலைசிறந்த விருது தமிழக முதல்வருக்கு 1982ஆம்ஆண்டில் வழங்கப்பட்டது. தேசிய பணித் திட்டம் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலையிலும் அமலாக்கப்படுகிறது. 1983-84-ல் மேல் நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்கள் 20,000 பேர் தேசியப் பணித் திட்டத்தில் பங்கு பெற்றனர்.

### தமிழ் வளர்ச்சி

தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு புதிய திட்டங்களை இவ்வரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. 15-9-81-ல் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கும் பணி நடந்து வருகிறது. சிறந்த தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும், சிறந்த பிற மொழி நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கும் ஆன மொழி பெயர்ப்புத் திட்டம்; பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழ் ஆராய்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக மானியம் தரும் திட்டம், வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரும் திட்டம், ஓலைச் சுவடிகளை சேகரித்துப் பேணிப் பாதுகாத்து அச்சிட்டு வெளியிடும் திட்டம் ஆகியவை செவ்வனே நடைபெற்று வருகின்றன. தமிழ்க் கவிஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு அரசு தக்க விருதுகளையும், பாராட்டுக்களையும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. அரசுத் துறைகள் அனைத்தும் தமிழில் திறம்படச் செயல்படச் செய்வதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981-82லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆக, பல்வேறு நிலைக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்; கல்வி வசதிகளைப் பரவலாக்குதல்; தொடக்கப் பள்ளி வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் சத்துணவு; அனைத்து நிலைகளிலும் கல்வித் தர உயர்வு; ஆசிரியர்கள் பணி நிலை மேம்பாடு; மாணவர்களுக்கான பல சலுகைகள்; விளையாட்டு, இளைஞர் நல வளர்ச்சிக்கான நடவடிக்கைகள்; தமிழ் வளர்ச்சிப் பணிகள் ஆகிய அனைத்து முனைகளிலும் கல்வி வளர்ச்சிக்குத் தமிழக அரசு அண்மை ஆண்டுகளில் ஆற்றியுள்ள பணி மிகச் சிறப்பானதாகும்.

தமிழகத்தில் 1980-81 முதல் செயலாற்றப்பட்டு வரும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விவசாயப் பணிகளுக்காக வேளாண்மைத் துறைக்கு ரூ. 8,074.04 இலட்சம் ஒதுக்கப்பட்டு, சிறப்பான பல செயல் திட்டங்களில் சாதனைகள் பல புரிந்துள்ளது மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு.

சென்ற மூன்றாண்டுகளில் தமிழகம் கடுமையான வறட்சியாலும், அண்மையில் ளது. அந்த ஆண்டு சுமார் 50,000 டன் அரிசி முதல் முறையாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

1980-81ஆம் ஆண்டில், 66,000 பேல் பருத்தி தமிழகத்திலிருந்து சோவியத் யூனியன், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1981-82 தவிர அடுத்து வந்த ஆண்டுகள் வறட்சியாலும், வெள்ளத்தாலும் தாக்கப்பட்ட போதிலும், வேளாண்மைத்துறை, உற்பத்தி வீழ்ந்து துக்கு வழிகோலுகின்றன.

அமோக விளைச்சலை அள்ளித் தரும் ரகங்களை அதிக அளவு நிலப்பரப்பில் பயிரிட ஊக்குவிக்க, தரமான வித்துக்களும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் அரசு வேளாண்மைக் கிடங்குகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கும், அரிசன விவசாயிகளுக்கும் விதைகள் மற்றும் பூச்சி மருந்துகள் 25% முதல் 50% வரை



# வேளாண்மையில் வியத்தகு சாதனைகள்

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

**டாக்டர் கா. காளிமுத்து**

வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருந்தும் உழவர் பெருமக்களின் தளராத நம்பிக்கையினாலும், உழைப்பாலும் வேளாண்மைத்துறை நிறைவேற்றிய சீரிய பல உற்பத்தித் திட்டங்களினாலும் உணவு உற்பத்தி தமிழகத்தில் உன்னத நிலையில் உள்ளது.

ஐந்தாம் திட்டகால இறுதியில் அதாவது 1979-80ஆம் ஆண்டில், அரிசி உற்பத்தி, என்றும் இல்லாத அளவு 58 இலட்சம் மெட்ரிக் டன்களை அடைந்து புதிய சாதனையைப் புரிந்துள் விடாமல் ஒருநிலைப்படுத்தி, மாநிலத்தின் உணவு நிலையைக் கட்டிக்காக்கும் அளவுக்குச் செயல் பட்டது என்பது பெருமிதத்துக்குரியது.

**விதைகளும், விதை சுத்திகரிப்பும், இடுபொருள் விநியோகமும்**

வேளாண்மை உற்பத்தி உதவியாகத் தரமான விதைகளைப் பெருக்க 46 அரசு விதைப்பண்ணைகள் தற்பொழுது தமிழகத்தில் செயல்படுகின்றன. 13 விதை சுத்திகரிப்பு நிலையங்களும் தமிழகம் முழுவதும் தரமான வித் மானிய விலையில் கொடுக்கப்பட்டன. கடந்த 1983-84ஆம் ஆண்டில் மற்ற ஆண்டுகளைவிட இரண்டு மடங்கு நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டு முன்பருவம் மற்றும் பின்பருவம் இடுபொருள் இருவார விழாக்கள் மாநிலம் முழுவதும் செயலாற்றப்பட்டு ரூ. 36 இலட்சம் மதிப்புள்ள புதிய உயர் விளைச்சல் தரும் நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகள் உழவர் பெருமக்களுக்கு இலவசமாக

வழங்கப்பட்டன. புதிய விவசாய கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தை மூன்றுமுறை வறட்சியும் ஒரு முறை வெள்ளமும் தாக்கின. இந்த இயற்கைச் சீற்றத்தால், தமிழக விவசாயம் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அரசின் தக்க நிவாரணப்பணிகளால் விளைவு கட்டுக்கடங்கி விளைச்சலில் குறை ஏற்படவில்லை. ஆனால் 1983-84ல் வறட்சியைத் தொடர்ந்து, வெள்ளம் ஏற்பட்டதால் ஓரளவு விளைபொருள் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இந்த மாறுபாடு ஏற்படாமலிருந்தால் இந்த ஆண்டு மிக நல்ல விளைச்சல் விவசாயிகளுக்கு கிடைத்திருக்கும்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு அப்பகுதிகளை மேம்பாடு செய்ய ஏற்படுத்தப்பட்ட திட்டம் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம். இதன் செலவை மத்திய, மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

நெல், சிறுதானியங்கள், தென்னை, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவற்றில் புதிய ரகங்கள் வெளியிடப்பட்டன. உழவர்களின் கஷ்டத்தைப் போக்கிட வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் புதிய பண்ணைக்கருவிகள் மற்றும் பதம் செய்யச் சாதனங்கள் கண்டறியப்பட்டன.

புன்செய்யிலும் 212 ஆயிரம் ஏக்கர் நிரூபணங்கள் அமைக்கப்பெற்று, சிறு விவசாயிகள் சாகுபடியில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

1983-84ல் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ. 74 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும், 25% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ. 17 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும் மானிய விலையில் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ. 28.50 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும் 1983-84ல் மானிய விலையில் வழங்கப்பட்டன.

**வேளாண்மை உற்பத்தி**

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் அடுத்தடுத்து இயற்கை இன்னல்களினால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டும் தொடர்ந்து உணவுப்பயிர் உற்பத்தித்திறனில் தமிழகம் அகில இந்திய அளவில் தனி இடம் பெற்றுள்ளது.

மற்றும் மிகச்சிறுவிவசாயிகளுக்கு 2 கோடி பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**விவசாய உயர் மட்டக்குழு**

விவசாயிகள் பல்வேறு பிரச்சனைகளை ஆராய்ந்து ஆவன செய்ய அமைச்சர் தகுதியில் உள்ள ஒருவரைத் தலைவராகக் கொண்டு மாவட்டந்தோறும் விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று, 1981ல் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

**பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் ஒரு புதிய விவசாய விரிவாக்கத் திட்டம் தமிழகத்தில் முதற் கட்டமாக 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் செங்கல்பட்டு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படத் தொடங்கியது. கிராமங்களைப் பகுதிகளாகப் பிரித்து குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு விரிவாக்கப்பணியாளர் வீதம் காலத்திற்கேற்ற புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்களை தொடர்பு மற்றும் சார்பு நிலை விவசாயிகள் தெரிந்து, தங்கள் நிலபுலங்களில் கையாண்டு, விளைச்சலைப் பெருக்கிடும் உன்னதத் திட்டம் - பயிற்சி



கரும்பில் பயறு ஊடுபயிர்

| பயிர் | தமிழ் நாடு | அகில இந்தியா |
|---|---|---|
| | (உற்பத்தித்திறன் எக்டேருக்கு கிலோவில்) | |
| அரிசி | 2262 | 2082 |
| சோளம் | 958 | 688 |
| கம்பு | 1112 | 381 |
| ராகி | 1528 | 1047 |
| நிலக்கடலை | 1242 | 797 |
| பயறுவகை | 381 | 385 |

**வேளாண்மைப் பண்ணைக் காடுகள்**

இந்தத் திட்டத்தின்கீழ் சிறு

வழித் தொடர்புத் திட்டம். இத்திட்டம் இப்பொழுது தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் தீவிரமாகச்செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 36.47 கோடி.

**புதிய துறைகள் :**
**எண்ணெய் வித்துத்துறை:**

1980-81ல் இத்துறை அமைக்கப்பட்டது. தென்னை வளர்ச்சிக்கென ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம், தென்னை உற்பத்திப் பெருக்குத் திட்டம், நெட்டை குட்டை தென்னங்கன்று உற்பத்தி மற்றும் விநியோகிக்கும் திட்டம் ஆகிய திட்டங்களால் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. 1983-84ஆம் ஆண்டு41.43லட்சத்திற்கு மேல் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. அவற்றுள் 35,51,000 நெட்டை தென்னங்கன்றுகளும், 5,92,000 நெட்டை குட்டை தென்னங் கன்றுகளும் ஆகும். தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் மத்திய அரசின் உதவியுடன் 3 திட்டங்களும், தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் 5 திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

**வேளாண்மை விற்பனைத்துறை :**

தமிழகம் முழுவதும் 13 மாவட்ட விற்பனைக் குழுக்களின் கீழ், 257 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.102 இடங்களில் தரம் பிரிவு மையங்களும், 36 அக்மார்க் ஆய்வுக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. தரம் பிரிக்கப்படுவதால் நுகர்வோர்களுக்கு நல்ல பொருளும், விவசாயிகளுக்குநல்ல விலையும் கிடைக்கிறது.

**தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர் மேம்பாட்டுத் துறை :**

இத்துறையில் 23 மாபெரும் அரசு பழப்பண்ணைகள் உள்ளன. தரமான பழக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நியாயமான விலையில் உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நகரக் காய்கறித் திட்டம், சென்னை, திருச்சி, வேலூர், மதுரை ஆகிய நகரங்களுக்கு விரிவாக்கப்பட்டு, விதைப் பொட்டலங்களும், பழச்செடிகளும் விநியோகிக்கப்படுகின்றன. தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், வாழை வளர்ச்சித் திட்டம், மேற்குத்தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை தற்பொழுது செயல்படும் திட்டங்கள் ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தால் 30,150 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ்,பழ உற்பத்தியினை அதிகரிக்க, வாசனைத் திரவியங்கள் பயிரிடும் நிலங்களைக் கூடுதலாக்க மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ. 15.2 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

**வேளாண்மைப்பொறியியல் துறை :**

நிலவளமேம்பாட்டுத் திட்டம், சிறுபாசனத் திட்டம் மற்றும் நீர் வளப் பாதுகாப்புத் திட்டம், பாசன மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகின்றது. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-83ல்) ரூ. 1079.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1983-84ல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 287 கசிவு நீர்க்குட்டைகளைக் கட்டியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தனித்திட்டமாக வறட்சிப் பகுதிகளின் கீழ் 2757 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 1983-84ல் மத்திய அரசின் நில நீர் வள அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் வாங்க ரூ. 99 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**விதைச் சான்றுதுறை :**

சென்ற நான்காண்டுகளில் சுமார் 23,000 எக்டேர் பரப்பில் நெற்பயிரும், 2000 எக்டேர் பரப்பில் சிறுதானியப் பயிரும்,10,000 எக்டேர் பரப்பில் வீரிய சிறுதானியப் பயிரும், 10,000 எக்டேர் பரப்பில் பருத்தி வகைகளும், 14,000 எக்டேர் பரப்பில் பயறுவகைகளும் விதைச் சான்றுரைத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதனால் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விவசாயிகளுக்கு வழங்க முடிந்தது.

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் :**

குறிப்பிட்ட சில பகுதிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்கென வேளாண்மையிலேயே, பல துறைகள் ஒருங்கிணைந்த திட்டங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் தீட்டப் பெற்றன. இத்திட்டங்களின் பயனாகவும், விஞ்ஞானிகளின் கடும் உழைப்பாலும் 1977 முதல் 1983 வரை, நெல்லில் ஆறு புதிய இரகங்களும் சிறுதானியங்களில் ஐந்து புதிய இரகங்களும், பயறு வகைகளில் 12 புதிய இரகங்களும், எண்ணெய் வித்துக்களில் 2 புதிய இரகங்களும், பருத்தியில் 5 புதிய இரகங்களும், கரும்பில் 2 புதிய இரகங்களும் , தீவனப் பயிர்களில் ஒரு புதிய இரகமும் வெளியிடப்பட்டன. பயிர்ச்சாகுபடி மற்றும் பாதுகாப்பு, விதை நுண்ணியல், பண்ணைக் கருவிகள் மற்றும் பதனஞ்செய்முறைகளிலும் புதிய உத்திகள் கையாளப்படுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டன.

1984-85 ஆம் கல்வியாண்டிலிருந்து மேலுமொரு வேளாண்மைக் கல்லூரியை திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிகுளத்தில் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.



கோடை உழவு



இதோ!
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
கையடக்கமான அளவில்...
V.V.D
COCONUT OIL
MICRO FILTERED PURE
MADE IN INDIA
தரமான தேங்காய்களிலிருந்து தயாரிக்கப்
படுவது. துல்லியமாக வடிகட்டப்படுவது.
சுத்தமானது. உங்கள் கூந்தலை போஷித்துப்
பராமரிப்பது. உடலுக்குக் குளிர்ச்சி தருவது.
மென்மையான இயற்கை மணம் கமழ்வது.
இது ஒரு விவிடி தயாரிப்பு.
V.V.D இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

# தொழில் வளத்தால் எழில் வளர்க்கும்

# தமிழகம்

**தொ**ழில் வளர்ச்சியில் ஈடு இணையற்ற முறையில் விளங்கி வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு.

தமிழகத்தைத் தொழில்மயமாக்குவதற்குப் புரட்சித் தலைவர் பெரும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். மின்அணுத் தொழிலிலும் தீவிரமான அக்கறை காட்டி வருகிறார். அந்த அக்கறையின் விளைவுதான் தமிழ்நாடு மின் அணு நிறுவனத் தின் தோற்றம்.

தமிழ்நாட்டில் மின்அணுத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தூண்டுகோலாக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) 1980-81ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

**மின்னணு கடிகாரத் தொழிற்சாலை**

ஜப்பானிலுள்ள ஹட்டாச்சி நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் மின்னணுக் கைக்கடிகாரங்கள் சென்னையில் தயாரிக்கப் படுகின்றன. எச். எம். டி. நிறுவனம் மற்றும் அரசுக்குச் சொந்தமான மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிக்க உரிமம் பெற்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் சேர்த்து ஒப்பிடும்பொழுது எல்காட்டின் இந்தச் சாதனை ஒரு முன்னோடியாகும்.

**சர்க்கரைத் தொழில்**

தமிழகத்தில் மொத்தம் 22 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 10 கூட்டுறவுத் துறையையும் 3 பொதுத் துறையையும் சார்ந்தவை. ஒன்று மைய அரசின் நேரடி மேற்பார்வையிலும் எஞ்சிய 8 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.75 லட்சம் எக்டேர் கரும்புப் பகுதியிலிருந்து 190 இலட்சம் டன் கரும்பு உற்பத்தியாகிறது.

கரும்பு விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கொடுக்கும் வண்ணம் மைய அரசு கரும்புக்கு டன்னுக்கு ரூ. 135 என்று விலை நிர்ணயித்த போதிலும் இவ்வரசு, டன் ஒன்றுக்கு ரூ.160 வீதம் விலை நிர்ணயித்துள்ளது. விவசாயிகளுக்கு அரசு அளித்து வரும் ஊக்கத்தின் காரணமாக 1979-80-ல் 3.67 இலட்சம் டன் அளவில் இருந்த சர்க்கரை உற்பத்தி 1982-83ல் 6.51இலட்சம் டன்னை எட்டியது. சர்க்கரை கட்டுமானத்திலும் உயர்வு காணப் படுகிறது.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகிதம் தயாரிப்பு நிறுவனம்

சர்க்கரை ஆலைகளில் எரிக்கப்படும் கரும்புச் சக்கையை மூலம் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதுதாள் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் ஒரு சிறப்பான திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு ''தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை''நிறுவியுள்ளது. திருச்சி மாவட்டத்தில் தொழிலில் பின் தங்கிய பகுதியான கரூர் தாலுக்காவிலுள்ள புகலூர் கிராமத்தில் இந்த ஆலை நிறுவப் பட்டு வருகிறது. இது ரூ. 200 கோடி மூலதனமாகக் கொண்ட பெரிய திட்டமாகும். திட்ட மதிப்பிட்டில் பாதியளவு பணத்தை உலக வங்கி அளிக்கிறது. டி.என்.பி.எல். நிறுவனம் 1979ஆம்ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்டு, மே மாதத்தில் செயல்படத் துவங்கியது. ஆலை நிறுவும் வேலை 1981 செப்டம்பரில் துவங்கப்பட்டது.

திட்டம் முழுமையாக நிறைவேறும் போது ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்

**மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர்**

**திரு சி. பொன்னையன்**





திருச்சி மாவட்டத்தில் உள்ள புகளூரில் ரூபாய் 200 கோடி முதலீட்டில் உருவாகி வரும் 'தமிழ் நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் இயந்திரப் பிரிவுகள்

தாள் காகிதமும், 40,000 டன்கள் எழுது தாள் காகிதமும் உற்பத்தி ஆகும். இரண்டுக்கும் இடையிலான காகிதமும் உற்பத்தி செய்யப்படும்.

முடியும் தறுவாயிலிருக்கும் இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

| | |
|---|---|
| நிலப்பரப்பு | - 700 ஏக்கர் (ஏறத்தாழ) |
| தண்ணீர்த்தேவை | - 25 எம். ஜிடி. |
| மின்சாரம் | - 30 எம். வி. ஏ. |
| கரும்புச்சக்கை தேவை | - 4 லட்சம் டன் ஆண்டொன்றுக்கு |
| மரம் | - 70,000 டன் ஆண்டொன்றுக்கு. |
| நிலக்கரி | - 3.4 லட்சம் டன் ஆண்டொன்றுக்கு |



**வலிமை மிக்க இந்தியாவில் வளம்மிக்க தமிழகத்தை உருவாக்கி நமது சந்ததிகளுக்கு ஒளிமிக்கஎதிர்காலத்தைப்படைத்திடும் அரியதோர் பொறுப்பைச் சரித்திரம் நமது தோள்களில் சுமத்தியிருக்கிறது.**

இத்திட்டத்தினால் 1,200 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 5,000 பேர்களுக்கு மறைமுகமான வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

செய்தித்தாள் காகிதத்தை இறக்குமதி செய்வதைத் தவிர்ப்பதன் மூலமாக, டி. என். பி. எல். நிறுவனம் நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துகிறது. சாதாரணமாக ஆண்டொன்றுக்கு 8 சதவிகிதமாகப் பெருகிவரும் அந்நியச் செலாவணியைத்தவிர்ப்பதுடன் தேவைக்கும், விநியோகத்திற்கும் இடையிலுள்ள இடைவெளியையும் இது குறைக்கும்

எதிர்பாராத சில சூழ்நிலைகளைத் தவிர்த்து இறக்குமதி செய்யப்படும் மரக்கூழைக் கொண்டு மாதிரி உற்பத்தி இவ்வாண்டு ஜூலை மாதத்திலும், 1985-ஆம் ஆண்டு முதல் உள்நாட்டிலிருக்கும் மரக்கூழைக் கொண்டு உற்பத்தியும் துவங்கும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் தமிழக அரசு தொழில் வளத்தில் முன்னேற்றம் பெறுகிறது என்றால் அது மிகையாகாது.

# நான்காண்டுகளில் நாற்பதாண்டுப் பணிகள்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு. ப. குழந்தைவேலு**



முக்கனி போல் முத்தமிழ் இனிக்கும் என்றும், தேன் தித்திக்கும் என்றும், அகில உலகமும் அறிஞர் அண்ணாவை அறியும் என்றும் குறிப்பிட்டுக் கூறத் தேவை இல்லை. அதுபோல் பொன் மனச் செம்மல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் சீர்மிகு தலைமையில் தமிழகம் பொற்கோலம் பூண்டு, புதியதொரு பொற்காலத்தைப்படைத்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறத்தேவை இல்லை. ஏனெனில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சியில் தமிழகம் பெற்றுள்ள உயர்வும் சிறப்பும் நாடறிந்த உண்மை. இந்த நாடறிந்த உண்மையை ஏட்டில் எழுதிடும் நோக்கோடு தான் இக்கட்டுரையை அளித்துள்ளேன்.

எந்தவொரு திட்டமும் மக்களை நேரடியாக அடைந்து அவர்கள் வாழ்வில் ஏற்றமும் சிறப்பும் அளிக்கும் வகையில் தீட்டப்படவேண்டும் என மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவது உண்டு. நல்லதையே எண்ணி, எண்ணியதை விரைந்து நிறைவேற்றல் வேண்டும் என்பது புரட்சித் தலைவரின் பொன்மனக் கொள்கை.

இக்கொள்கையின் அடிப்படையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரின் சீர்மிகு சிந்தனையில் உதித்த திட்டம் தான் தன்னிறைவுத் திட்டம். தன்னிகர் இல்லாத் தன்னிறைவுத் திட்டம் என்ற அடைமொழியைப் பெற்ற இந்தத்திட்டம், இந்தியாவின் வரலாற்றிலேயே எந்த மாநிலமும் நிறைவேற்றி இராத திட்டம். இந்தத் திட்டம் இன்றைய கிராம்ப் புறங்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் அமைத்துக் கொடுத்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

தமிழகத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும், 1980-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு முடிய மூன்றான்டு காலத்தில்-மூன்று கட்டங்களாக நிறை வேற்றி முடிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு மட்டும் தமிழ் நாடு அரசு ஏறத்தாழ 225 கோடி ரூபாயை மக்கள் நலனுக்காகச் செலவிட்டுள்ளது. இத்திட்டத்தில் 6762 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டதுடன், 27390 கிலோ மீட்டர் நீள இணைப்புச் சாலைகளும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்து இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகளும் இடப்பட்டன. தவிர 29,615 சிறு பாலங்கள், கட்டப்பட்டதுடன், 2446 சிறிய பாசன ஏரிகள் மேம்படுத்தப்பட்டன. ஊரக மருந்தகங்களுக்கான 460 கட்டடங்கள், தாய்சேய் நல நிலையங்களைஅமைக்க1170கட்டடங்கள் தவிர பள்ளிகளுக்கான 5154 கட்டடங்களும் கட்டி, தமிழ்நாடு அரசு மிகக் குறுகிய காலத்தில் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றைப் படைத்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தன்னிறைவுத்திட்டத்தை அளித்ததோடு இந்த அரசு தன்னிறைவு கொண்டு விடவில்லை. ஊராட்சிகள் பெற்ற இதே நன்மைகளையும் வசதிகளையும் தமிழகத்தின் பேரூராட்சிகளும், நகராட்சிகளும் அடைய வேண்டும் என்று விரும்பி, தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு.

இதற்கிணங்க,கடந்த 1982ஆம்

ஆண்டு முதல் தன்னிறைவுத் திட்டம், பேரூராட்சிகளுக்கு விரிவு படுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் 146 பேரூராட்சிகளில் இந்தத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட ரூ.5 கோடி மானியமாக தமிழ் நாடு அரசு வழங்கி உள்ளது. இவை தவிர்த்து முதற்கட்டப்பணிகளில் முடிக்கப்படாமல் எஞ்சி இருந்த பணிகளை முடிக்க ரூ. 101.32 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பெருந் தொகையைக் கொண்டு, பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல், சிறுபாலங்கள் கட்டுதல், வடிகால்கள் அமைத்தல், ஆதிதிராவிடர்களுக்கு இடுகாட்டுப்பாதைகள் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், சலவைத் துறைகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் மேலும் 200 பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட தன்னிறைவுத்திட்டத்திற்கு அரசு 5 கோடி ரூபாயை மானியமாக வழங்கி உள்ளது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில், நிதி வசதி குறைவாக உள்ள 20 நகராட்சிகள் 1982-83 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூபாய் 5 கோடி மானியமாக வழங்கப்பட்டு குடிநீர் வசதி, சாலைகள் மேம்பாடு, பள்ளிக் கட்டடங்கள், தாய்சேய் நல விடுதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 1983-84ஆம் ஆண்டில், இத்திட்ட நிறைவேற்றத்திற்காக 31 நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவைகளுக்குத் தமிழ் நாடு அரசு பெரும்பாலும் வழங்கி உள்ள மானியத் தொகை ரூ.5 கோடி.

சுருக்கமாகச் சொன்னால், இந்தியா விடுதலை பெற்று 34 ஆண்டுகள் முடிந்து இருந்தும், ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் முழுமையாக நிறைவேற்றப்பட்டிராத அடிப்படைத் தேவைகளைத் தீர்க்கும் திட்டத்தை, ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளுக்குள் செய்து முடித்த மாண்புமிகு புரட்சித் தலைவரின் சாதனை தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று.

எந்தவொரு திட்டமும் மக்களுக்காகத் தீட்டப்பட்டு, மக்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவார் என முன்பே சொன்னேன் அல்லவா? அவர் கருத்துக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்ட திட்டம்தான் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்.

கிராம மக்கள் இடையே வேலை இல்லாக் கொடுமையையும், போதிய வேலை இல்லா நிலையையும் நீக்க அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்,



நாடெங்கும் நிறைவேற்றப்பட்டாலும் தமிழகத்தில்தான் இந்தத்திட்டம் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது என ஆங்கில ஏடுகள் பாராட்டிக் கட்டுரைகள் எழுதியமை, திட்டங்களை நிறைவேற்றுவதில் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசின் திறமைக்கு ஒரு சான்று.

1979-இல் உழைப்புக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, 1980-ஆம் ஆண்டில் 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற பெயரை ஏற்ற இந்தத் திட்டத்தில் உழைக்க முன்வரும் தொழிலாளர்களுக்கான ஊதியம் பணமாகவும் அரிசியாகவும் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பு. இத்திட்டத்தில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உணவு தானியத்தைக் கோதுமையாகத்தான் அளிக்க முடியும் என மத்திய அரசு தெரிவித்தபோது, அரிசி அளிக்கக் கோரி மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் வற்புறுத்தலுக்குப் பின்பு மத்திய அரசு கோதுமைக்குப் பதில் அரிசி அளிக்க சம்மதித்தது.

தனிமனிதர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி அதன் மூலம் தனி மனிதர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் தமிழகத்தில் திறம்பட நிறைவேற்றப்படுகிறது.

1978-79-ஆம் ஆண்டு இத்திட்டம் 161 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் 1980 அக்டோபர் 2-ஆம் தேதி முதல் இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தை நிறைவேற்ற 1980-81ஆம் ஆண்டு ஓர் ஒன்றியத்திற்கு ரூ.5 இலட்சம் வீதம், அரசால் அளிக்கப்பட்ட தொகை 1981-82-ல், 6 இலட்சமாக உயர்த்தப்பட்டதோடு, 1982-83ஆம் ஆண்டு முதல், இந்தத் தொகை ரூபாய். 8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் புலிகுத்தியில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடம்.





கக்காம்பட்டி கீழ்நாட்டார் சாலையில் சரளை பரப்பப்பட்டுள்ளது.

நீர் உயர நெல் உயரும் என்பது போல், அரசின் உதவித் தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப இத்திட்டத்தினால் பயன்பெறுவோரின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இத்திட்டத்தால் 1980-81 ஆம் ஆண்டு 2,55,323 பேர் பயன் அடைந்தனர். 1981-82 ஆம் ஆண்டு பயனடைந்தோரின் எண்ணிக்கை 3,58,225 ஆக அதிகரித்தது.

நடப்பாண்டில் 31.3.84 வரை 2,77,641பேர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனா. இந்த 2,77,641 நபர்களில் ஆதி இந்துக்கள் மற்றும் மலைசாதியினர் மட்டும் 1,08,718 பேர் என்ற செய்தி, அடித்தள மக்களின் நல்வாழ்வில் இவ்வரசு கொண்டுள்ள நாட்டத்தைக்கூறும் எடுத்துக்காட்டாகும். மேலும் இத்திட்டத்திற்கென 1983-84 ஜனவரித் திங்கள் வரையில் அரசு ரூ. 3368.96 லட்சத்தைச் செலவழித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்று கூறும்போது 'TRYSEM' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தைக் குறிப்பிட வேண்டும்.

மாணவர்கள் படிக்கும் படிப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மாறி விடாமல், கற்றகல்வியின் மூலம் மாணவர்கள் சொந்தக் காலில் அதாவது சொந்தத் தொழில் செய்து வாழ்வை வளமாக்கும் வகையில் பல வகைத் தொழில்களில் பயிற்சி அளிப்பதே 'TRYSEM' திட்டத்தின் கொள்கை. படிக்கும்போதே சம்பளம் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப இத்திட்டத்தின் கீழ், பயிற்சி அளிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 75 முதல் 200 ரூபாய் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த உடன் பெற்ற பயிற்சியைத் தொழிலாகத் தொடங்கத் தேவையான கருவிகளும் சாதனங்களும் ஒவ்வொரு மாணவருக்கும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் வங்கிகள் மூலம் கடன் பெறவும் தக்க உதவிகள் வழங்கப்படுகின்றன.

''புதியன புகுதல்'' இலக்கிய உலகில் மட்டுமின்றி, ஊரக முன்னேற்றத் துறையிலும் உண்டு. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு புதிய திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

நிலமற்ற தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்த குடும்பத்தில் உள்ளவர்களுள் குறைந்தபட்சம் ஒருவருக்கு ஓராண்டில் 100 நாட்கள் வேலைவாய்ப்பைக் கூண்டிப்பாக அளிக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ள இத்திட்டம், வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து, சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்தி சமுதாயத்தை மேம்படுத்தும். அதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழச் செய்யும் இத்திட்டம் 1983-84ஆம் ஆண்டில் மட்டும் ரூ.8.90 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1984-85ஆம் ஆண்டில் இத்தொகை ரூ.44.50 கோடியாக உயரும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

அடுத்து, குறிப்பிட்டுக் கூறத்தக்கது, சாண எரிவாயு அமைப்பு நிறுவும் திட்டம். பழமையிலும் பழக்க வழக்கங்களிலும் ஊறிப்போன நம் கிராம மக்கள் அறிவியலின் புதுமைகளையும், கண்டுபிடிப்புகளையும் எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற கூற்றை, இத்திட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழக கிராம மக்கள் பொய்யாக்கி விட்டார்கள்.

நமது கிராமப் புறங்களில், 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளில் 10,000 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் இத்திட்டம் நிறைவேற்றப்படத் தொடங்கிய ஒரு சில மாதங்களுக்கு உள்ளாகவே இந்த இலக்கைத் தாண்டி மொத்தம் 11394 சாண எரிவாயு அமைப்பு நிறுவப்பட்டுள்ளன அரசு அளித்த மானியமும், ஊக்கமும் இதற்குக் காரணம் எனக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை. நடப்பாண்டில் 10 ஆயிரம் சாண எரிவாயு அமைப்புகளை அமைக்கும்

பணியும் விரைவில் இலக்கை அடையும் என்பது என் நம்பிக்கை.

கடந்த நான்காண்டுகளில் இன்னும் பல பயன்களை மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு திறம்பட ஆற்றி உள்ளது. அவைகளை முழுவதும் விவரிக்க வேண்டும் என்றால் காலமும் காகிதமும் போதா. எனவே ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு என்ற பழமொழியின் உதவியோடு, இவ்வரசு ஆற்றி, ஆற்றும், ஆற்றப் போகும் மாபெரும் பணிகள்பற்றி சில வரிகளில் தனித்தனியாகக் கூற விழைகிறேன்.

கடந்த மூன்றாண்டில் தமிழகத்தில் உள்ள 16 ஆயிரம் வருவாய்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஆடவர் மற்றும் மகளிர் கழிப்பிடங்கள் ரூ.22.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் மகளிர் கழிப்பிடங்கள் கட்ட ரூ.27 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கிராம மக்கள் நாட்டு நடப்புச் செய்திகளை அறிந்து சொள்ளும் வகையில் 13,496 சமூகக் கல்வி நிலையங்களுக்கும், 378 தகவல் நிலையங்களுக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பயன்தரும் நூல்கள் வாங்க நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 47,893 சமுதாய வானொலிப் பெட்டிகளும், 692 தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்கள் வாழ்வில் ஒளி ஏற்ற கல்ராயன், ஏலகிரி மலைப்பகுதிகளில் தனிவளர்ச்சி வட்டாரங்கள் ஏற்படுத்தி சிறப்புக் கவனம் செலுத்த ரூ.8 லட்சம் வழங்கப்படவுள்ளது.

உலக வங்கியிடமிருந்து கடன் பெற்று பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற கடந்த பிப்ரவரி மாதம் வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியைத் தந்துள்ளன.

**20 அம்சத் திட்டத்தைத் தக்க பொலிவுடன் நடத்துவதற்காக மாநில அரசு தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.**

**மாநில அரசின் திட்டங்களை முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். நல்ல முறையில் நிறைவேற்றி வருகிறார். அதனால் தமிழ்நாட்டு மக்களுக்குப் பல நன்மை தரும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.**

**மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர்**
**திரு ஆர். வெங்கட்ராமன் (16.5.84)**

தமிழகத்தின் பேரூராட்சிகள் 1320 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகளையும், 3,230 கிலோ மீட்டர் நீளமுள்ள கப்பிச் சாலைகளையும், 5,650 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக் கல் மண் சாலைகளையும் பராமரித்து வருகின்றன. இவைகளின் மேம்பாட்டிற்காக 1983-84இல் ரூ. 15 இலட்சமும், (இதில் பாதி மானியம்) 1984-85ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சமும் மொத்தம் ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கல் கட்டுமான வடிகால்களை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு ரூபாய் 45,000 மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

அங்காடிகள், கடைத்தெருக்கள், கட்டணக் கழிப்பிடங்கள் முதலியவைகளை அமைத்து பேரூராட்சிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள 342.31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற சுற்றுலா இடங்களில் அனைத்து அடிப்படை மற்றும் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்த 58 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு பல்வேறு பணிகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், சுவாமிமலை, திருப்பரங்குன்றம், திருவேற்காடு போன்ற திருத்தலங்களின் மேம்பாட்டிற்கென இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாத 167 பேரூராட்சிகளுக்கும் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக இவ்வாண்டு ரூ.5 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டிற்கென ரூ. 2048.95 இலட்சம் செலவில், பேருந்து நிலையங்கள் கட்டுதல், அங்காடிகள் அமைத்தல், சாலைகள் இடுதல், மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

போதிய நிதிவசதி இல்லாத நகராட்சிகளில் பேருந்து நிலையம், கடைகள் முதலியன கட்டுவதற்காக 1980-81ல் ரூ. 300.75 இலட்சமும், 1981-82ல் ரூ. 362.29 இலட்சமும், நகராட்சிக்குக் கடனாக வழங்கிய தமிழ்நாடு அரசு, இவ்வாறு கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

மொத்தத்தில், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு நான்காண்டுகளை முடித்துள்ள பொன்மனச் செம்மல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நாற்பது ஆண்டுகளில் நடைபெற்றிருக்க வேண்டிய பணிகளை நான்கே ஆண்டுகளில் விரைந்து நிறைவேற்றி உள்ளது என்பதைக் கூறவேண்டியது இல்லை.



சாண எரிவாயு அமைப்பு

# தொழிலாளர் நலம் காக்கும் தூய அரசு

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
**திரு. எஸ். இராகவானந்தம்**



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பதவிக்கு வந்தபின், தமிழ்நாட்டில் தொழில்நல்லுறவுகள்குறிப்பிடத் தக்க அளவிற்கு நீடித்து வரும் நல் வாய்ப்புக்கிட்டியுள்ளது. இதற்கு முக்கிய காரணம், அரசின் தொழிலுறவுக்கொள்கைதான்.

தொழில் உரிமையாளர்கள் எவ்வித இடையூறுமின்றி, தங்கள் தொழிலை நடத்தவும், அதே சமயம் தொழிலாளிகளுக்குச் சட்டப்படிக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பாதுகாத்தும், அவ்வப்போது ஏற்படும் பிணக்குகளில் உரிய நேரத்தில் தகுந்த வகையில் தலையிட்டுத் தொழில் நல்லுறவைப் பாதுகாத்தும், தொழிலாளர் நலச்சட்டங்களைக் கண்டிப்பாக அமல் நடத்தியும் வருவதன் மூலம் தொழிலின் அமைதியைக் கட்டிக் காத்துத் திறமையுடன் அரசு செயல்பட்டு வருகிறது.

ஒரு தொழிலாளி தொடர்ந்து இரண்டு ஆண்டுக் காலக்கெடுவில் குறைந்தது 480 நாட்கள் எந்த ஒரு நிறுவனத்திலாவது பணி புரிந்திருந்தால், அவர் ஒரு நிரந்தரத் தொழிலாளியாகக் கருதப்பட்டு, நிரந்தரத் தொழிலாளிகளுக்கான அனைத்துப் பயன்களும் தரப்பட வேண்டும் என்று கோரும் The Tamilnadu Industrial Estts. Conferment of Permenent Status to workmen சட்டம், 1981-ஆம் ஆண்டு இந்த அரசால் நிறைவேற்றப்பட்டது. இது 1-1-82 முதல் அமல் செய்யப்பட்டு வருகிறது.



இத்துடன் ஏதாவது தன் வினையாக அல்லாமல் மற்ற காரணங்களுக்காகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளிகளுக்குப் பிழைப் பூதியப்படி வழங்கக் கோரும் சட்டம்ஒன்றும் 1982-ஆம் ஆண்டு அரசால் நிறைவேற்றப்பட்டது. தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளிகளுக்கு இச் சட்டப்படி வேலையளிப்பவர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு, பிழைப்பூதியம் கட்டாயமாக வழங்க வேண்டும்.

அமைப்பு ரீதியில் (Organised Sector) உள்ள தொழிலாளர்களுக்கு நலச்சட்டங்களை நிறைவேற்றும் அதே நேரத்தில் அமைப்பு ரீதியில் அல்லாத (Un Organised Sector) பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நலனையும் இந்த அரசு கவனத்தில் கொண்டுள்ளது. குறுமக் கூலிச் சட்டம், தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் ஆகிய ஒரு சில சட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்படும் அமைப்பு ரீதியல்லாத தொழிலாளர்கள் பலர் உள்ளனர். இந்த வகைத் தொழிலாளர்களில் கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் பெரும் பகுதியினராக அடங்குவர்.

**கைத்தறித் தொழிலாளர்களின் நலனுக்காகவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த அரசு** 1981-**ஆம் ஆண்டில்** Tamilnadu Handloom workers Conditions of Employment, Miscellaneous Provisions Act, 1981 **என்று ஒரு சட்**

டத்தைக் கொண்டு வந்தது. நெசவாளிக்கும் மாஸ்டர் வீவர் எனப்படும் வேலை அளிப்பவர்க்கும் தொழிலாளி—வேலை அளிப்பவர் உறவை நிர்ணயித்து, தொழிலாளிக்கு உரிய கூலி, பணித் தொடர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் இதர நலன் குறித்த தேவைகளைத் தொழிலாளி பெற வழி வகைகளைச் செய்கிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனுக்கு இதுபோன்ற ஒரு சட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் மட்டும் தான் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இச்சட்டத்தின் செல்லத்தக்க நிலை குறித்து, சென்னை உயர்நீதி மன்றத்தில், மாஸ்டர் வீவர்களால் தாக்கல் செய்யப்பட்ட பல உரிமை மனுக்களும் தற்சமயம் தன்ளுபடி செய்யப்பட்டு விட்டன.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (Manual Labourers) அமைப்பு ரீதியில் அமையப் பெறாத தொழிலாளர்களின் மற்றொரு பெரும் பிரிவினராவர். அவர்களும் தங்கள் வாழ்வுக்கான செய்யும் தொழில் சிரமங்கள் பலவற்றை அனுபவித்துக் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அரசு உதவிக் கரம் நீட்டியுள்ளது. அவர்கள் பணிமுறைகளை வகைப்படுத்தவும், பல்வேறு நலன்களையும் வசதிகளையும் கொடுக்கவும் [Tamilnadu Manual workers (Regulation of Employment and Conditions of Work) Act. 1982.] என்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வர உள்ளது. இச்சட்டத்தின்கீழ் விதிகளும் நடைமுறைகளும் இறுதியாக்கப்பட்டபின், சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

மேற்கூறிய நலச்சட்டங்கள் தவிர, கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்கள் நலனுக்காகச் சகல உரிமைகளையும் வசதிகளையும் உள்ளடக்கிய தனிச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அமைப்பு ரீதியில் இல்லாத இவ்வகைத் தொழிலாளர்களுக்குக் கொண்டு வரப்படும் சட்டம் அவர்கள் மேம்பாட்டிற்கும் நல்வாழ்விற்கும் பெரிதும் உதவும். இச்சட்டத்தின் முன்வரைவு ஏற்கெனவே சட்டப்பேரவையில் அறிமுகப் படுத்தப்பட்டு, சபையின் ஆலோசனையில் உள்ளது.



மேற்கூறியவாறு புதிய சட்டங்களைக் கொண்டு வரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு வருவதுடன் தற்சமயம் அமலில் உள்ள சட்டங்களுக்கும் தொழிலாளர்களுக்குப் பயன் பெறத்தக்க வகையில் உரிய சட்டத் திருத்தங்களையும் அப்போதைக்கப்போது அரசு கொண்டு வந்துள்ளது. Factories Act Beedi and cigar workers (conditions of Employment) Act. 1966. Motor Transport workers Act 1961 and Tamilnadu Shops and Estts. Act. 1947 ஆகிய சட்டங்களை உரிய வகையில் திருத்தம் செய்து, தொழிலாளிகளுக்குப் பணி விவர அட்டைகள் ( Service Books Time cards ) கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நிறுவனத்தில் பணிபுரிந்ததற்கும், பணியின் கால அளவிற்கும் இந்த அட்டைகள் தொழிலாளர்கள் சார்பாகச் சான்று கூறும்.

குறுமக் கூலிச் சட்டத்தின்கீழ் புதிய தொழில்களை அரசு உள்ளடக்கியுள்ளது. அத்தொழில்களில் பெரும்பகுதி, அமைப்பு ரீதியற்றவை. அத்தொழில்களில் பணிபுரியும்தொழிலாளிகளுக்கும் குறுமக்கூலி நிர்ணயிக்கப்பட்டு, சட்டத்தின் பயன் தரப்படுகிறது. மருத்துவமனைகள் மற்றும் நர்சிங் ஹோம்கள் வனத் தொழில் ), சோப்பு செய்தல், டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் தொழில், சிறு பொறியியல் தொழில், தையல் நிறுவனங்கள், கழிவுப் பஞ்சாலைத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இந்த நடவடிக்கையினால் குறுமக்கூலிச் சட்டத்தின் பயன்களைப் பெற வழிவகைகள் அரசால் செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தொழிலாளர்களின் நலன்களைப் பொறுத்த வரையில் பல்வேறு நலப்பணிகளை ( Welfare Measures ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் அரசு செய்து தருகிறது. பல்வேறு வசதிகளில் குறிப்பிடத்தக்கவைகளில் ஒன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக ஒரு விடுதி கட்டப்பட்டதாகும். இந்த விடுதி சென்னை தேனாம்பேட்டையில் பத்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த விடுதியைக் கட்ட ரூ. 2 இலட்சம் மானியமாகவும், 5 கிரவுண்டு 1,590 சதுர அடிப் பரப்புள்ள மனை ஒன்றைத் தொழிலாளர் நல வாரியத்திற்கு இலவசமாகவும் இந்த அரசு அளித்தது.

கொடுக்கப்பட்ட மனை ஒரு கிரவுண்டு ரூ. 76,300 வீதம் மொத்தமாக ரூ.3,81,500 பெறுமானம் உடையது. இந்த விடுதி 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், மறைந்த புகழ்மிக்க தொழிற்சங்கத் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் நினைவாக 'ஜீவா இல்லம்' எனப் பெயர் சூட்டப் பெற்றுத் திறந்து வைக்கப்பட்டது. மேலும் தொழி

லாளர்கள்' மற்றும் அவர்கள் குடும்பங்கள் தங்குவதற்கான பதினைந்து இலட்ச ரூபாய் செலவில் குற்றாலத்தில் தங்கும் விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதில் ஒரே சமயம் 58 நபர்கள் தங்கலாம். இதே போன்ற ஓய்வு விடுதிகள் மாமல்லபுரம், கொடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் தொழிலாளர் நல வாரியம் 39 தொழிலாளர் நல மையங்களை நடத்தி வருகின்றது. தொழிலாளர்களின் சிறு குழந்தைகளுக்குப் பாலர் வகுப்புகளும், தொழிலாளர் வீட்டுப் பெண்களுக்குத் தையல் பயிற்சி வகுப்புகளும் இந்த மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. +2 வகுப்புகள், பொறியியல் வகுப்புகள், டாக்டர் படிப்பு, பொறியியல் படிப்பில் டிப்ளமா வகுப்புகள், ஐ. டி. ஐ. வகுப்புகள் ஆகியவற்றில் படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளமும் கணிசமான அளவில் வழங்குகிறது. இத்துடன் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காகப் புத்தக வங்கிகளையும் தொழிலாளர் நல வாரியம் நடத்துகின்றது.

பல்வேறு வசதிகளையும் நலன்களையும் வழங்கும் தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலப் பணிகளுக்குச் செலவிடப்படும் நிதியை அதிகரிக்க வேண்டி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நிதிச் சட்டத்தை அரசு திருத்தியுள்ளது. இதன்படி தொழிலாளி தனக்காக ஆண்டு



> தொழிலாளர்கள் தாங்களே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; தொழிலாளர் இயக்கங்கள் தனி இயக்கமாக இருக்க வேண்டும்; அரசியல் இருக்கக் கூடாது.

தோறும் தரும் நிதி ரூ.2 ஆகவும், ஒவ்வொரு தொழிலாளிக்காக வேலையளிப்பவர் தர வேண்டிய நிதி ரூ. 4 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்னவென்றால், அரசும் தொழிலாளர் நலனுக்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 வீதம் ஆண்டுதோறும் நிதி உதவி செய்வதாகும்.

அப்போதைக்கப்போது தொழிலாளர் நலச் சட்டங்களை நிறைவேற்றியும், சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரும் அதே சமயத்தில் வேலை நிறுத்தம், மற்றும் கதவடைப்பு போன்றவைகளால் பாதிக்கப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கும் உரிய நேரத்தில் தேவையான உதவிகளை அரசு செய்து வருகிறது.

வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புக் காலங்களில் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து பெருந் தொகையான பண உதவிகள் செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கப்பட்டு வருவது நன்கு புலனாகும். இந்த அரசு பதவிக்கு வந்த பின் இதுநாள் வரை பதினொரு தடவைகள் இதுபோன்று நிவாரணங்கள் அளிக்கப் பெற்றுள்ளன.

1981-ஆம் ஆண்டில் பங்கிங்காம் கர்னாடிக் ஆலையில் பணி புரியும் 13,000 தொழிலாளர்களில், ஒவ்வொருவரும் தலா ரூ. 200 வீதம் ரூ. 26 இலட்சம் உதவித் தொகை கொடுக்கப்பட்டதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இந்த வகையில் இதுவரையில் கொடுக்கப்பட்ட தொகைகளில் இதுதான் மிகமிக அதிகமாகும்.

தொழிலாளர்களுக்குத் தங்கள் நலன்களுக்கும் உரிமைகளுக்காகவும் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களின் விவரங்களையும், விதிமுறைகளையும் போதிக்கவும் விளக்கம் அளிக்கும் வகையிலும் 'உழைப்பவர் உலகம்' என்ற தமிழ் மாத இதழை, தமிழ்நாடு தொழிலாளர் மையத்தின் மூலம் அரசு வெளியிடுகிறது.



**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்:**

நல்லமுறையில் நடத்தப்பெறும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் தலைவர்களின் மனப்பான்மை, நிர்வாகப்பொறுப்பில் உள்ளவர்களின் கடமை உணர்வுகள், நிர்வாகத் திறனில் சீர்மை போன்ற விஷயங்கள் குறித்து தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் போதிக்கப்படுகின்றன. இந்த மையம், முதல் வகுப்பு இன்ஸ்டிடியூட் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு பொருட்களில் கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் பயனுள்ள வகையில் இந்த மையம் அடிக்கடி நடத்தி வருகிறது. தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் தொழிலாளர்களுக்காகக் கொணரப்பட்ட பல்வேறு சட்டங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியிலும் தமிழ்நாடு தொழில் மையம் ஈடுபட்டு உள்ளது.

# குறைவின்றி குடிநீர் வழங்கிய அரசு

எல்லாத் திட்டங்களையும் போலவே குடிநீர்த் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு சிறப்புறத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துள்ளது.

## இரு பெரு வாரியங்கள்

குடிநீர்த் திட்டங்களை விரைவாகவும், விரிவாகவும் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பணியைச் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், சென்னை நகர் தவிர பிற மாவட்டங்களில் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன.

வழங்கியாக வேண்டும் என்ற உண்மையை 1976-77-இல், நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்தது.

## தன்னிறைவுத் திட்டம்

கிராமப் புறங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும், மிகக் குறுகிய காலத்திற்குள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தன்னிகரில்லாத் தன்னிறைவுத் திட்டம் 1980-81-ஆம் ஆண்டு, முதல் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள எல்லா குடி இருப்புகளுக்கு மட்டுமின்றி, மறுவகைப்படுத்தப்பட்ட , 7,600 குடி இருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் மாபெரும் பணி நிறைவேற்றப்படுவதற்கு ஒரு சில ஆண்டுகளில் தான் குடிநீர் வழங்கும் திட்டம் அதிக அளவில் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ள உண்மை விளங்குகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 2,300 குடி இருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1982-83ஆம் ஆண்டு 4069 குடி இருப்புகளுக்குக் குடிநீர் வழங்கி உள்ளது.

## வறட்சி வாட்டியபோது...

1982-83 மற்றும் 1983-84 ஆகிய ஈராண்டுகளில், கடுமையான வறட்சி தமிழகத்தைத் தாக்கியபோது, அதை எதிர்த்து சமாளித்த குடிநீர் வடிகால் வாரியத்தின் திறமை குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் துளைக் கிணறுகள் நாடெங்கும்



## பல்வகைத் திட்டங்கள்

இந்த அரசு பதவி ஏற்றநாளில் இருந்து, மகத்தான தன்னிறைவுத் திட்டம், குறைந்த பட்சத்தேவைகளைத் தீர்க்கும் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட கிராமப் புற குடிநீர் வழங்கும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க ஒல்லும் வகையெல்லாம் உழைத்து வந்துள்ளது.

## ஆய்வுப் பணி

பல்வேறு வகைகளைச் சார்ந்த 18,167 குடிஇருப்புகளுக்குஉடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எடுத்துக் கொள்ளப்பட்டு, மிகப் பெரும் தொகையான ரூ. 170 கோடி 1980-81 முதல் 1982-83 வரையிலான மூன்றாண்டுகளுக்குத் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்ய முன்வந்தது. இதன் விளைவாக 1933 மார்ச்சுத் திங்கள் இறுதிவரை குடிதண்ணீர்த்தட்டுப்பாடு கொண்ட 7662 குடி இருப்புகளுக்கு மட்டுமின்றி, வகை மாற்றம் செய்யப்பட்ட 2582 குடி இருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டது. இதனால் பயன்பெற்ற மக்கட் தொகை 30.36 இலட்சமாகும்.

## முனைந்த முயற்சிகள்

பழைய ஆவணங்களைப் புரட்டிப் பார்த்தால், கடந்த அமைக்கப்பட்டன. வறட்சிப் பணிகளில் காட்டிய அதிக நாட்டம் காரணமாக மற்ற நீர் வழங்கும் பணிகளை 1983 அக்டோபர் திங்கள் முதல் தான் நிறைவேற்ற முடிந்தது. இருப்பினும் இக்குறுகிய கால அளவிற்குள் 47.69 கோடி ரூபாய் செலவில், 3,500 குடி இருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணியைச் செவ்வனே நிறைவேற்றியது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். மேலும், 1981-82, மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் வான் பொய்த்தபோது ஏற்பட்ட வறட்சியைத் துளைக் கிணறுகள் மூலம் தீர்த்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.




துளைக் கிணறுகள் அமைக்கும் பணி 1982 செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் 20.60 கோடி செலவில் 9688 ஆழ்துளைக் கிணறுகள் கைக்குழாய்களுடன் அமைக்கப்பட்டன. வறட்சி தொடர்ந்து நீடித்ததால், 1983-84-ஆம் ஆண்டிலும்ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 25.19 கோடி செலவில் 11850 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு,கைக்குழாய்கள் பொருத்தப்பட்டன. இத்தகைய பணிகளுக்குப் பிறகும் அதாவது 1983 செப்டம்பர் திங்களுக்குப் பிறகும், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வறட்சி நீடித்ததால், ரூ. 91.80 இலட்சம் செலவில், இம் மாவட்டங்களில், 454துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டன.

### பிற நாட்டினர் உதவிகள்

பதவி ஏற்ற நாள் முதற்கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காகப்பெருந்தொகையைஒதுக்கீடு செய்ததோடு மட்டுமின்றி, நீர் வழங்கு திட்டங்களுக்கென இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்த பல நற்சேவை நிறுவனங்களின் உதவியையும் தமிழ்நாடு அரசு அரும்பாடுபட்டுப் பெற்றுள்ளது.

இத்தகைய அரும்பெரும் முயற்சிகளுள் ஒரு சிலவற்றை இங்கே கூறவிழைகின்றேன்.

### உலக வங்கி உதவி

உலக வங்கியின் உதவியோடு நிறைவேற்றப்படும் குடிநீர், மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்கள் முதலில் குறிப்பிடத்தக்கவை. உலக வங்கியின் உதவியோடு, இந்த ஆண்டில்கோயம்புத்தூர்,மதுரை, சேலம் ஆகிய மூன்று மாநகரங்களுக்கும், 75 நடுத்தர நகரங்களுக்கும் குடிநீர் வழங்கவும், 14 நகராட்சிகளுக்குக்குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்களை நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. உலக வங்கித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 149.42 கோடி. 740 குடி இருப்புகளுக்கு நீர் வழங்கும் ரூ. 14.14 கோடி செலவிலான திட்டமும், இதில் அடங்கும். உலக வ்ங்கித் திட்டத்தால் மொத்தம் 38.96 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் வாஷிங்டனில் நடைபெற்று வெற்றிகரமாக முடிந்துள்ளது. உலக வங்கியில் இருந்து நிதி உதவி விரைவில் கிடைக்கும் என்பது உறுதி. உலக வங்கித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இத் திட்டம் முடிக்கப்பட்ட பின்பு, தமிழ்நாட்டின் நகரங்களைப் பொறுத்த வரையில் குடிநீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது!

### ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமம்

கிடைக்கும் தண்ணீரில் ஃபுரோரைடு என்னும் உடல் நலக்கேடு விளைவிக்கும் உப்பு கலந்துள்ள நீரைக் கொண்ட கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களுக்குத் தூய்மையான நீரை வழங்குவதற்காக, ஐரோப்பியப் பொருளாத்தாரக் குழுமத்தின் உதவியோடு நிறைவேற்றப்படவிருக்கும் திட்டத்தைப் பற்றியும் இஙகே குறிப்பிடவிழைகின்றேன்.

ஒரு லிட்டர் குடிதண்ணீரில் ஒன்றரைமில்லி கிராம் ஃபுளோரைடு கலந்து இருந்தால் அந்தந தண்ணீர் உடலுக்கு ஊறு விளைவிக்கும். கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஏறத்தாழ 726 குடி இருப்புகளில் இதுபோல் ஊறு விளைவிக்கும் நிலையிலான குடிநீரே இயற்கையாகக் கிடைக்கிறது. மிகத் தொலைவில் இருந்து இத்தகைய குடி இருப்புகளுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமத்தின் உதவிக்காக அனுப்பப்பட்டது. ரூ. 15.20 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய, குழுமம் தன்னுடைய ஒப்புதலைத் தெரிவித்து உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 3,78,000 மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கான வேலைகள் நடப்பாண்டில் தொடங்கப்பட்டு இரண்டரை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

TAMIN

## தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை-600 005.
## (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ்பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள்:—

| | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | கெமிகல் கிரேடு<br>+ 93% $Ca\ Co_3$ |
| வெங்கக்கல் (குவார்ட்ஸ்) | + 99.8% $Sio_2$ |
| பெல்ட்ஸ்பார் | + 12% $K_2 0$ |
| ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது. |
| வெர்மிகுலைட் (மைக்கா) | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| சிலிகா மணல் | + 99.7% $Sio_2$ |
| வெப்பந்தாங்கும் களிமண் | ரிப்ராக்டரி கிரேடு 32.1 % $A1_2\ o_3$ |

*தேவைக்கு அணுகவேண்டிய முகவரி:*

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD ஹவுஸ், 31, காமராசர் சாலை,
தபால்பெட்டி எண். 2961
சேப்பாக்கம்,
சென்னை-600 005.

தொலைபேசி எண்: 848932 தந்தி: MINESALITE

டெலக்ஸ்—416081 TNML IN

**டேனிடாவும்**
**யுனிசெப் நிறுவனமும்**

மேலும் நமது அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, டேனிடா என்று அழைக்கப்படும் டேனிஷ் அகில உலக முன்னேற்ற நிறுவனமும், யுனிசெப் நிறுவனமும் நம்குடி நீர்த் திட்டங்களுக்குப் பல உதவிகளைப் புரிந்துள்ளன. டேனிடா நிறுவனம் அளித்த 2,500 கைப் பம்புகளைக் கொண்டு சேலம் மற்றும் தென்ஆர்க்காடு மாவட்டங்களில் இருந்தபழையபம்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுஅவைகளுக்குப் பதிலாக புதிய பம்புகள் நிறுவப்பட்டு விட்டன. இது போக எஞ்சி இருந்த புதிய பம்புகள் தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் நிறுவப்பட்டு வருகின்றன. 3000 'இந்தியா மார்க் II' என்ற பம்புகளை 'யூனிசெப்' நிறுவனம் நமக்கு வழங்கியது. இவைகளைக் கொண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம்,வட ஆர்க்காடு,மற்றும்தர்மபுரிமாவட்டங்களில் உள்ள பழையபம்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு இவ்வாண்டில் புதிய பம்புகள் நிறுவப்படும். பிற மாவட்டங்களில் உள்ள பழைய பம்புகளுக்குப் பதிலாக 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியோடு புதுப் பம்புகளை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் தற்போது உள்ள 728 நகரங்களுள்315 நகரங்களில்தற்போது குடிநீர் வசதி போதுமான அளவில் செய்யப்பட்டுவிட்டது. 19 நகராட்சிகளில் ரூ. 45.84 இலட்சம் மதிப்பிலான 112 குடிநீர் வழங்கு பணிகள் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு ,முடியும் தறுவாயில் உள்ளன. 1983-84-இல் 200 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 92.66 இலட்சம் மதிப்பீட்டில், நீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

**சென்னை நகரம்; தொடரும் பணிகள்**

அடுத்ததாகச் சென்னைப்பெரு நகருக்குக் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு எடுத்த பெரும் முயற்சிகளைப் பற்றி சிறிது கூற விரும்புகிறேன்.

எந்த ஆண்டிலும் இல்லாத வறட்சியும், குடிநீர்த் தட்டுப்பாடும் சென்னை நகரைக் கடந்த சில ஆண்டுகளில் திண்டாட வைத்தபோது, குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்த்து இந்த அரசு சமாளித்த விதம் இந்த அரசின் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. 1981, 1982 மற்றும் 1983 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பருவ மழை தவறியதால், 1983 பிப்ரவரி 21-ஆம் நாள் முதல்,ஒரு நாள் விட்டு ஒரு நாள் வீதம் குடிநீர் வழங்க வேண்டிய நிலை உருவாயிற்று. எனினும் சென்னையில் எந்த ஒரு குடி இருப்புப் பகுதியும் குடிநீரின்றி இடர்ப்படாதவாறு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னைக்கு நீர் வழங்கும் பூண்டி நீர்த்தேக்கத்தில் கால்வாய் வெட்டப்பட்டு, பரந்து கிடந்த நீர் ஓரிடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, சென்னை நகரின் வீடுகளில்உள்ள குடிநீர்க்குழாய்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும் 15 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு குடிநீர் வழங்கல் குறைவின்றி நடத்தப்பட்டது. தாமரைப்பாக்கத்தில் இருந்து புழல் நீர்த்தேக்கத்திற்கு நிலத்திற்குக் கீழே பதிக்கப்பட்ட இரும்புக் குழாய்கள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டது. இவைகளைத்தவிர1,800குழாய்க் கிணறுகள், 1204 ஆழ் கிணறுகள் சென்னை நகரின் பல்வேறுபகுதிகளில் தோண்டப்பட்டன. சென்னையில் பல்வேறு குடி இருப்புப் பகுதிகளில் 1,300 இரும்புத் தொட்டிகள் நிறுவப்பட்டு 151 லாரிகள் மூலம் தினமும், குடிநீர் வழங்கப்பட்டது. குடிநீர்ப் பிரச்சினை 12-10-83 அன்று தீருவது வரை, போர்க் கால நடவடிக்கை முறையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் செயல்பட்டு, குடிநீர் குறையைத் தீர்த்து வைத்தது.

*செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி பகுதிகளில் கைப்பம்புகள் வேலை செய்வதை உலக வங்கிக் குழுவினர் 22-6-83ல் பார்வையிட்டனர்*



**கிருஷ்ணா பேராற்றுத் திட்டம்**
**மாண்புமிகு முதல்வர் முயற்சி**

**எல்லாவற்றிற்கும் மேலாக, சென்னைப் பெருநகரின் குடிநீர்ப் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க ஆந்திராவின் கிருஷ்ணா நதியில் இருந்து நீர் கொண்டுவரும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் தான் நிறைவேற்ற முடிந்தது. இதற்கான ஒப்பந்தம் ஏற்கனவே கையெழுத்தாகி, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஆண்டு முதற்கட்டமாக ரூபாய் 6250.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

'நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை...கூட கோபுரங்கள் கேட்கவில்லை...குடிக்கத் தண்ணீர் தான் கேட்டார்கள். மக்களின் ஆசியோடு, அண்ணாவின் வழியில் நடக்க இருக்கும் இந்த அரசு மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை முதலில் தீர்த்து வைக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்," என மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற முதல் நாள் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

அன்று அவர் செய்த அந்த அறிவிப்பு, இன்று செயலாக்கப் பட்டு விட்டது.



# மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்
## கன்னியாகுமரி மாவட்டம்
## (இருப்பு) நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 600 மிக ஏழைக்குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் விரும்பும் தொழில் செய்யத் திட்டங்கள் தயாரித்து அரசு அங்கீகாரத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேல்கூறிய நோக்கங்களுக்காக நடப்பு ஆண்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 8 லட்சம் வீதம் மத்திய மாநில அரசுகள் நிதி உதவி அளித்துள்ளன.

### செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1) உழவு மாடு வழங்குதல்
2) வண்டியும் மாடும் வழங்குதல்
3) மாட்டுத் தொழுவம் கட்டுதல்
4) பால்மாடு வழங்குதல்
5) கலப்பினக்கன்றுகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்குதல்
6) பன்றி வளர்த்தல்.
7) ஆடு வளர்த்தல்
8) வாத்து வளர்த்தல்
9) மீன்வலை முடிப்பதற்கு நைலான் நூல் வழங்குதல்.
10) கட்டுமரம், வலை வழங்குதல்
11) உள்நாட்டு மீனவர்களுக்கு சைக்கிள் வழங்குதல்
12) தேனீ வளர்த்தல்.
13) கிராம கைவினைஞர்களுக்கு உதவி செய்தல்.

### இந்நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் இதர திட்டங்கள்

1) தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்
2) கிராமிய இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்
3) உள்ளமைப்புத் திட்டம்
4) மாபெரும் திட்டம்
5) நிலமற்ற ஏழையின் வேலைக்கு உறுதியளிப்புத் திட்டம் முதலிய திட்டங்கள்

*இது சம்பந்தமான மேல் விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகவும்.*

**திரு. எஸ். நடராஜன்**
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.

**திரு. எல். கே. திரிபாதி, இ ஆ.ப.**
பெருந்தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.



# இந்திய மருத்துவம் மேன்மை பெறுகிறது

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

**டாக்டர் எச். வி. ஹண்டே**

தமிழ்நாட்டின் சித்த மருத்துவத்தின்கீழ் 1964 முதல் இயங்கி வரும் ஒரே கல்லூரி பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியாகும். 5½ ஆண்டுகள் காலஅளவுள்ள பி.எஸ்.எம். & எஸ் படிப்புக்கு ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 44லிருந்து 75ஆக 1980-81ல் உயர்த்தப்பட்டது.

1983-84 முதல் மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு 2 இடங்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறது. இப்பொழுது ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 77 ஆக உயர்த்தப்படுகிறது. மூன்றாண்டுப் பயிற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குண பாடம் ஆகிய இரு பிரிவுகளைக்கொண்ட சித்தா பட்ட மேற்படிப்பு, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆகும். இப்படிப்பில் அரசு 1983-84 முதல், மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுக்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. பட்ட மேற்படிப்புக்கு ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 21 ஆகும். இப்படிப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகப்படியான உதவித் தொகை 20.10.81 முதல், வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மருந்தாளுநர் பட்டயப்படிப்பு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்படுகிறது. 1981-82க்கு முன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் சித்தாவில் 7பேர்களும், ஆயுர்வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் எடுக்கப்பட்டார்கள்.

1981-82 முதல் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8லிருந்து 25 ஆகவும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் 7லிருந்து 25 ஆகவும் உயர்த்தப்பட்டது. ஆயுர்வேத, யுனானி, மருந்தாளுநர்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதால் ஆயுர்வேதா, யூனானிக்கான 10 இடங்களும் 5 ஆண்டுகள் வரையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. மேற்கண்ட 10 இடங்களும் சித்தாவுக்குப்பயன்படுத்தப்படுகின்றன. 1983-84 முதல் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சித்தாவில் 25 லிருந்து 30 ஆக உயர்த்தப்படுகின்றது.

1979-80ஆம் ஆண்டு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 1982ல் அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. 1983-84ல் அரசு, மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுக்கு இப்படிப்பில் ஒரு இடம் ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பொழுது ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்கிறது.

சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவமுறைகளின் கீழ், செவிலியர்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பயிற்சிசென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்

திய மருத்துவ மனையில் டிசம்பர் 1983ல் தொடங்கப்பட்டிருக்கிறது.

*1979-80* முதல், 3 மாணவர்கள் தமிழ்நாட்டிலிருந்து இயற்கை முறைப் பட்டப்படிப்பிற்கு அனுப்பப்படுகிறார்கள். மேற்கண்ட 3 மாணவர்கள் ஹைதராபாத் காந்தி இயற்கை முறை மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

*1982-83*ல் அரசு யோக முறையை ஒரு வைத்திய முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின்வருமாறு:

- சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் அரசிதழ் பதிவில்லாத ஊழியர்களின் குடும்பங்களுக்கான ஒரு தனி வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- *1979-80*ல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
- *1979-80*ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- *1981-82*ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு முடிக்கப்பட்டு 14.11.83ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியல் ஆய்வகம் ஊடுகதிர்ப் பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்ட 1979-80ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. நோய் குறியியல் ஆய்வகமும், உயிர் வேதியல் ஆய்வகமும் 19.4.'82 முதல் இயங்கி வருகின்றன. 300 எம். ஏ. ஊடு கதிர் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கிறது. 25.8.'83 முதல் ஊடு கதிர்ப்பிரிவு இயங்கி வருகிறது.
- மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979-80ல் ஆரம்பிக்கப்பட்டது.
- புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்ட 1981-82ல் அரசு அனுமதி அளித்துள்ளது.
- சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் மருந்துகள் சோதனை செய்யும் ஆய்வகத்திற்கு ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு 1983-84ல் அனுமதி அளித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் செய்யப்பட்ட சாதனைகள் பின்வருமாறு:

- *1980-81*ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இயந்திரமயமாக்கப் பட்ட மருந்து செய் நிலையம் *1980-81*ல் மற்றும் *1982-83* ஆண்டுகளில் நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ஊடுகதிர்ப் பிரிவுக்கான கட்டடம்கட்ட 1982-83ல் அரசு அனுமதி அளித்துள்ளது.
- *1982-83*ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவிற்கான கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.

*1979-80*ல் தாலுகா, மற்றும் தாலுகா அல்லாத மருத்துவ மனைகளில் 15 சித்தா பிரிவுகளும், 1980-81ல் 15 சித்தாபிரிவுகளும் திறக்க அனுமதி அளித்துள்ளது. 103 சித்தா பிரிவுகளில் 102சித்தா பிரிவுகள் இப்பொழுது இயங்கி வருகின்றன.

*1979-80*ல் அரசு மருத்துவ மனை, சிதம்பரம் (தென் ஆர்க்காடு மாவட்டத்திலும்), இராமநாதபுரம் மாவட்டம் தலைமை மருத்துவமனையிலும், தர்மபுரி மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும், ஒவ்வொரு மருத்துவமனையிலும் 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுதொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

*1980-81*ல் மாவட்டத்தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம், ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும், 1981-82-ல் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, வேலூர் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, திண்டுக்கல்லிலும், ஒவ்வொரு மருத்துவ மனையிலும் 25 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவு தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

*1983-84*ல் அரசு மருத்துவ மனை, கடையநல்லூர், மாவட்டத்தலைமை மருத்துவமனை. கடலூர், மாவட்டத் தலைமை மருத்துவமனை தூத்துக்குடி ஆகிய இடங்களில் 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுகள் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

மே 1981ல் 185 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், டிசம்பர் 1981ல் 15 ஆரம்பச்சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், ஏப்ரல் 1982ல் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், மே 1983ல் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது.

பிப்ரவரி 1980ல் அரசு 20 கிராம சித்தா மருந்தகங்களும், மே 1983ல் 1 அரசினர் கிராம சித்தா மருந்தகமும் திறக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

1983ல் தன்னாட்சி உரிமையுள்ள மூலிகை வாரியம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பிப்ரவரி 1983ல் முதல் அனைத்திந்திய சித்த மருத்துவ மாநாடு தஞ்சாவூரில் சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழுவால் நடத்தப் பட்டது.

1983-84ல் சித்த மருத்துவ மேம்பாட்டுக்காக அரசு தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகம் அமைக்க ஆணை வழங்கியுள்ளது.



# பொதுமக்களுக்குப் பயன்படும் போக்குவரத்துத் துறை



**மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்**

**திரு சு. முத்துசாமி**

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அரசு பல துறைகளிலும் பெரும் பெரும் சாதனைகளை ஆற்றி வருகின்றது. போக்கு வரத்துத்துறையிலும் குறிப்பிடத்தகுந்த புணிகளை நிறைவேற்றியிருக்கிறது.

நான்காண்டுகளுக்கு முன் அரசுப் போக்கு வரத்துக் கழகங்களில் 6407 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, இன்று 8466 ஆக உயர்ந்திருக்கிறது. நாட்டுடைமையாக்கப் பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தமிழகத்தி லுள்ள மொத்தப் பேருந்துகளில் 1980-ல் 56 சதவீதமாக இருந்தது. இன்று 62 சதவீதமாக இருக்கிறது.

**கடந்த நான்காண்டுகளில்**

| | |
|---|---|
| ஆரம்பிக்கப்பட்ட புதிய வழித்தடங்கள் | 1342 |
| இதனால் பயனடைந்த கிராமங்கள் | 2389 |
| இதனால் பயனடைந்த மக்கட்தொகை | 35.24 (இலட்சம்) |
| வாங்கிய புதிய பேருந்துகள் | 4,163 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | |
| 1980-ல் | 47,321 |
| 1984-ல் | 68,539 |

பெரிய போக்குவரத்துக் கழகங்களான, பாண்டியன், சேரன், கட்டபொம்மன் ஆகிய போக்கு வரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து, குமரி மாவட்டத்தில், நேசமணி போக்குவரத்துக் கழகம் என்றும், பெரியார் மாவட்டத்தில் ஜீவா போக்குவரத்துக் கழகம் என்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் என்றும் புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1.4.1983 முதல் தனியாகச் செயல்படுத்தப்பட்டன, பல்லவன் புற நகர்ப்போக்குவரத்துக் கழகத்தைச் சீர்படுத்தி வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைத்து 1.12.'82 முதல் செயல் படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கும், மலைப்பகுதிக்கும் செல்ல 81 சிறிய பேருந்துகளும், 216 குறுகிய பேருந்துகளும், 10சந்தைப் பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நகர்ப்புறப் பேருந்து வழித்தடத்தின் நீளம் 25 கிலோ மீட்டரிலிருந்து 30 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசுப் போக்குவரத்துக் கழகப்பேருந்துகளில் மின் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இம் மாதிரி கருவியை அரசுப் போக்குவரத்துக் கழகம் தானாகவே தயார் செய்து பொருத்தியது.

சென்னை பெருநகர் போக்குவரத்துக்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு,ரூ. 12.60 கோடி கடனுதவி பெற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் 2வது திட்டமாக 555 பேருந்துகளை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் போக்கு வரத்துத் துறையில் ஆலோசனை கூற

பல்லவன் போக்குவரத்து, பரிந்துரைப்பணிக் குழு அமைத்துள்ளது.

முதன் முறையாக பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க 1981-82 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ.3.78 கோடி கடனாகப் பெற்றது. 1982-83ஆம் ஆண்டிற்கு ரூ. 1.79 கோடி கடனும், 1983-84ல் ரூ. 2.40 கோடி கடனும் பெறப்பட்டது.

முதன் முறையாக சென்னைக்கும் ஈரோட்டுக்கும் நடுவே தூங்கும் வசதி கொண்ட 2 சிர்வளி பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திலும் கம்பியில்லாத் தந்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய வழித்தடங்கள் உருவாக்குவதற்கு மாவட்டம் தோறும் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களில் டீசல் எண்ணெய் மிச்சப்படுத்த ஊக்கத்திட்டம் புகுத்தப்பட்டது.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள் :**

1.9.'77 அன்று போடப்பட்ட ஊதிய ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு அமலிலிருந்தது. ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்னமேயே, அரசு அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு, கலந்து பேசி சுமுகமான முறையில் 1.9.80க்கு முன்பாகவே ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ஊதியத்தின் குறைந்த அளவு உயர்வு ரூ.65 ஆகும். உயரளவு ரூ. 130 ஆகும். அகவிலைப்படி, விட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி, சலவைப்படி எல்லாம் கூட்டப்பட்டன. இதனால் கழகங்களுக்கு ஓராண்டில் ஆகும் கூடுதல் செலவு ரூ. 9 கோடியாகும். இரண்டாம் முறையாக மற்றுமொரு புதிய ஊதிய ஒப்பந்தம் 1.9.83ல் அமலாக்கப்பட்டது. இதனால் குறைந்த அளவு உயர்வு ரூ. 75ம், அதிக அளவு உயர்வு ரூ. 150ம் ஆகும். போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 10 கோடியாகும்.

நீண்டகால ஊதியத்திட்டப்படி பதவி உயர்வு அளிப்பது குறித்து ஓராண்டிற்கு ஒரு முறை ஆய்வு செய்தது, ஆண்டிற்கு 4 முறையாக மாற்றியமைக்கப்பட்டது.

சம்பளத்தில் 20 முதல் 25 சதவிகிதம் வரையில் தான் செயலூக்கத் தொகை என்றிருந்த உச்சவரம்பு நீக்கப்பட்டது.

பேருந்துக் கட்டண உயர்வால் வசூலாகும் கட்டணத்திற்குரிய படியை அதற்கேற்ற விகிதாச்சாரத்தில் குறைக்காமல், அதிக வருவாயில் தொழிலாளர்களும் பங்கு பெறும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டது.

மாறுபடும் அகவிலைப்படிக்குப் பதிலாக, அனைத்திந்திய நுகர்வோர் விலை குறியீட்டெண் அடிப்படையில் அகவிலைப்படி மாற்றியமைக்கப்பட்டது.

விட்டு வாடகைப்படி, குறைந்த பட்சமாக 12 சதவிகிதம் என்று மாற்றியமைக்கப்பட்டது.

நகரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டும் நகர ஈட்டுப்படி முதலில் வழங்கப்பட்டு வந்தது. இந்தப்படி கிராமங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் 'கிராமப் படி' என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

மருத்துவப்படி, மாதச் சம்பளத்துடன் அளிக்கப்பட்டுள்ளது.

சலவைப்படி ரூ. 6லிருந்து ரூ. 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.




புதுக்கோட்டையில் நடைபெற்ற பல்துறை விளக்கப் பணி நிகழ்ச்சியின்போது அமைக்கப்பட்டிருந்த அரங்கம்.




மகப்பேறு விடுப்பு அதிகமாக்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலைகள்அதிகமாக்கப்பட்டன. அவைகளில் மலிவான விலையில் உணவு வழங்கப்பட்டது.

பணிமனை ஓய்வுஅறைகளில் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டன.

இரவு நேரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சிற்றுண்டியும், தேநீரும் இலவசமாக வழங்கப்படுகிறது.

தொழிலாளர்கள் விடுமுறையில் தங்குவதற்கு விடுமுறைக்கால ஓய்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள், குடும்பத்துடன் குறிப்பிட்ட அளவு கழகப் பேருந்துகளில் இலவசமாகப்பிரயாணம் செய்ய அனுமதியளிக்கப் பட்டது.

பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி இறுதித் தேர்வில் மாவட்டத்தில் முதலாவதாகத்தேர்ச்சி பெற்றால் அவர்களுக்கு மேற்படிப்புச் செலவுக்கு,பணம் அளிக்கப்படுகிறது.

பணிமுடியுமுன்பு தொழிலாளர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசு ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

அவருடைய ஈமக்கடன்களுக்காக ரூ.150 மானியம் அளிக்கப்படுகிறது.அவர் பணிசெய்து கொண்டிருக்கும் பொழுது பிறரின் வன்முறைச் செயலால் இறந்து விட்டால் அவரது வாரிசுக்கு ரூ. 5000 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பணிமுடியுமுன்பு தொழிலாளர் இயலாமையுற்றால் அவர் வேறு தகுந்த பணிக்கு மாற்றியமைக்கப்படுகிறார்.

**பொது**

டீசல், டயர் மற்றும் உதிரி பாகங்கள் விலை ஏறிய போதிலும், சீரிய நிர்வாகத்தாலும், கடும் சிக்கன முறைகளாலும் ஒன்பது போக்குவரத்துக் கழகங்களில், ஆறு போக்குவரத்துக் கழகங்கள் 1982-83ஆம் ஆண்டில் ஆதாயம் ஈட்டியிருக்கின்றன. அவை அரசுக்கு சுமார் நான்குகோடி ரூபாய் உபரி வாகன வரியாகச் செலுத்தியிருக்கின்றன.

நம் நாட்டில் போக்குவரத்துக் கழகங்களில் கட்டப்படும் பேருந்துக் கூடுகள் மிகவும் நேர்த்தியாக இருப்பதால் அந்தமான், டெல்லி, கேரளம், ஆந்திரம்,கர்நாடகம் போன்ற இடங்களில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களுக்கு நம் போக்குவரத்துக் கழகங்கள் நிறையப் பேருந்துக்கூடுகள் கட்டிக் கொடுக்கின்றன.

டீசல் எண்ணெய் மிகுந்த அளவு மிச்சப்படுத்தியதற்காக சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு இவ்வாண்டு மத்திய போக்குவரத்துக் கழக நிறுவனம் பரிசளித்திருக்கிறது.

உற்பத்தித்திறனை அதிகப் படுத்தியதற்காக அகில இந்திய ரீதியில் சோழன், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்கள் முதல் இரண்டு பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள 24 மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் சாதனைகளை ஆய்வு செய்து தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றாகும் என மத்திய திட்டக்குழு அறிவித்திருக்கிறது.

போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியைக் கொண்டு மாவட்டந்தோறும் சுற்றுலா நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

உடல் ஊனமுற்றோருக்கு பேருந்துகளில் இருக்கை ஒதுக்குதல், மாணவர்களுக்குச் சலுகைப் பயணச்சீட்டு அளித்தல், வேலைவாய்ப்பளித்தல், ஊழியர்களுக்கு மூன்றுசக்கர வண்டி வாங்க சுலபக் கடன் அளித்தல், உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவு வேலைவாய்ப்பளித்தமைக்காக பல்லவன் போக்குவரத்துக் கழகம் கடந்த பல ஆண்டுகளாக இந்தியக்குடியரசுத் தலைவர் அவர்களிடம் பரிசு பெற்று வருகிறது.

# எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு

# புதிய சாலிடெர் TS33E!

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் திறல் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெகு சீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங்களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. விசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கனமாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழுதாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடியான பராமரிப்பு உண்டு.

**ரூ. 325 மிச்சம்**
**உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்**



# சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

DIPR/216/84/61 ASP



# கோடி நன்மை தரும் கூட்டுறவு

மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
**திரு. எஸ். திருநாவுக்கரசு**

கூட்டுறவு இயக்கம், சிக்கனம், சுய உதவி மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் என்னும் கொள்கையின் அடிப்படையில், விவசாயம், தொழில், உற்பத்தி முறைகள், வாணிபம், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் முன்னேற்றம் காணும் சீரிய நோக்கைக்கொண்டது.

பெரும்பாலும், கிராமப்புறங்களில் வளர்ந்து வரும் இவ்வியக்கம் தமிழகத்தில் கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்காக அரும் பங்கு ஆற்றுகிறது.

### விவசாயிகளுக்கு உற்ற துணை

**தமிழக விவசாயிகளைக் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் பெருமளவில் கொண்டு வந்தது**—தமிழகத்தில் விவசாயிகளின் நன்மைக்காக சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்றஅளவில் சுமார் 4,700 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்களும், வட்ட மற்றும் வட்டார அளவில் 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் 53.14 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் (விவசாய நில உடைமைப்படி) உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தீவிர ஆதரவுடன் இவற்றில் கடந்த நான்கு ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட சுமார் 7 சதவீத விவசாயக் குடும்பங்கள் உட்பட, தற்போது சுமார் 83 சதவீத விவசாயக் குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்துள்ளன.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்கள் தமிழகத்தில் 42.05 இலட்சம் உள்ளன. இவற்றிலும் கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட சுமார் 7 சதவீதக் குடும்பங்கள் உட்பட, தற்போது சுமார் 81 சதவீத குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்துள்ளன.

**ஆதிதிராவிடர்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வர மானிய உதவி தந்து வருவது**—ஆதிதிராவிடர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழை விவசாயிகளைப் பெருமளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பியதற்கிணங்க அவ்வகுப்புகளைச் சேர்ந்த விவசாயக் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவருக்கு, அவர் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக ரூ100 அரசு மானியம் வழங்குகிறது. அவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கப்படுகிறார். கடந்த ஆண்டுகளில் இவ்வகையில் 80,000 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன, நடப்பு ஆண்டில் அரசு மானியம் வழங்கி மேலும் 10,000 இவ்வகைக் குடும்பங்கள் சேர்க்கப்பட உள்ளன.

**விவசாயக் கடன்கள் வழங்கியது**—கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், சாகுபடி செலவிற்காகவும், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களை ஏற்று நடத்துவதற்காகவும், விவசாயிகளுக்கும் கடன்களைத் தொடர்ந்துவழங்கி வருகின்றன. நிலங்களைக் குத்தகைக்குப் பயிரிடுவோருக்கும் கூட சாகுபடிக் கடன்கள் வழங்கப்படுகின்றன; நிலமில்லாத பண்ணைத்தொழிலாளர்களுக்குக் கூட துணைத் தொழில்களுக்கான கடன்கள் வழங்கப்படுகின்றன. தேவைக்கேற்ப இக்கடன்கள் ஒருவருக்கு 30,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன; நபர் ஜாமீன்பேரில் 25,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றது.

சிறு விவசாயிகளுக்கு 11.5 சதவீத வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12.5 சதவீத வட்டிக்கும் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. சாகுபடிச் செலவிற்காகக் கொடுக்கப்படும் குறுகிய காலக் கடன்கள் அறுவடையான விளைபொருள் விற்பனைத் தொகையிலிருந்து திருப்பித் தரப்பட வேண்டும். துணைத் தொழில்களுக்காகப் பெறப்படும் மத்திய காலக் கடன்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும்.

நீண்ட காலக் கடன்கள் சிறு விவசாயிகளுக்கு 10 சதவீத வட்டிக்குத் தரப்படுகின்றன; பெரிய விவசாயிகளுக்குச் சிறு பாசன காரியங்களுக்காக 10 சத வீத வட்டிக்கும், இதர காரியங்களுக்காக 12.5 சத வீத வட்டிக்கும் தரப்படுகின்றன. நீண்ட காலக் கடன்கள், 7 முதல் 15 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும்.

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசிடமிருந்து கடனுதவியுடன் 9,056 விவசாயிகளுக்கு 4.22 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் 1983-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைஅமைக்கும்கடுவிரைவுத்திட்டத்தின்கீழ் அரசு உதவியுடன் பம்ப் செட்டுகள் அமைத்தல், பம்ப் அறைகள் கட்டுதல் உட்பட வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக ஒவ்வொரு கிணற்றுக்காகவும்,15,000 ரூபாய் வரையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. இது வரையில் 3,295 கிணறுகளுக்காகக் கடன்கள் ஒப்பளிக்கப்பட்டு, 2,690 கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் 2,400 நடுத்தர மற்றும் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்கும் இன்னொரு திட்டத்தின் கீழ், அரசு உதவியுடன் கடன்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சாகுபடிச் செலவிற்காக வழங்கப்பட்ட குறுகியகாலக் கடன்களின் அளவு 1979-80ஆம் ஆண்டில் 37.16 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 75.34 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. விவசாயம் மற்றும் துணைத் தொழில்களுக்காக வழங்கப்படும் மத்திய காலக் கடன்களும் 1979-80ஆம் ஆண்டில் 5.54 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 13.22 கோடி ரூபாய்க்கு அதிகரித்துள்ளன. நில மேம்பாடு மற்றும் விவசாயத்தை யொட்டிய பல்வகைக் காரணங்களுக்கான நீண்டகாலக் கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 8.85 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 15.41 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளன. நடப்பு ஆண்டில் குறுகிய காலக் கடன்கள் 100 கோடி ரூபாய் அளவிற்கும், மத்திய காலக் கடன்கள் 17 கோடி ரூபாய் அளவிற்கும் நீண்ட காலக் கடன்கள் 16 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்படும்.**



**வழங்கப்படும் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை உயர்த்தியது** — தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான நோக்கம் மொத்த கடன் பட்டுவாடாவில், குறைந்தது 50 சத வீதத்திற்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்த வேண்டுமென்பது ஆகும். ஆனால், தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் குறுகிய காலக் கடன்களில் நலிந்த பிரிவினருக்கான பங்கு 1979-80ஆம் ஆண்டில் 42 சத வீதத்திலிருந்து1983-84ஆம்ஆண்டில் 56சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. மத்திய காலக் கடன்களில் 87 சதவீதமும், நீண்டகாலக் கடன்களில் 37 சதவீதமும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பயிர் ஈட்டுறுதித் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது:** போர், அணு சம்பந்தப்பட்ட இடர்கள் தவிர வேறு எவ்வகையில் பயிர்கள் பாதிக்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கான ஈட்டுறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுத்த வட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன. விவசாயிகள் நன்மைக்காக இத்திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பிக் கூறி வந்தார்கள். ஒருவிவசாயிஈட்டுறுதிசெய்து கொள்ளக் கூடிய உச்ச அளவுத் தொகை ஆண்டொன்றுக்கு மானாவாரிப் பயிருக்கு 5,000 ரூபாயும், பாசன வசதியுள்ள பயிருக்கு 10,000ரூபாயும் ஆகும்.

சிறு விவசாயிகளும், மிகச் சிறு விவசாயிகளும், தாம் செலுத்திய பிரிமியக் கட்டணத்தில் 50 சத வீத அளவிற்கு மானியம் பெறுகின்றனர். விளைச்சல் குறைவாக இருந்த இடங்களில், 1979-80 முதல் இதுவரையில் 6,059 விவசாயிகளுக்குச் சுமார் 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தது**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு, விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும்நோக்கத்துடன்கடந்த நான்கு ஆண்டுகளில், வட்டி தள்ளுபடி செய்தது அல்லது திருப்பித் தந்தது என்ற வகையில்

42 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும், தவணை தவறாத கடன்களை ஈடுகட்டுவதில் குறையை நீக்குவதற்காக அல்லது தவணைத் தேதியில் செலுத்தத் தவறிய தொகையைச் செலுத்துவதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நீண்ட காலக் கடன் வசூலைத் தள்ளி வைத்ததால்ஏற்பட்ட நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கும், அரசு 84 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களிடமிருந்து விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க, கடந்த நான்கு ஆண்டுகளில் அவர்களிடமிருந்து வரவேண்டிய 27.75 கோடி ரூபாய் அளவிற்கான குறுகியகாலக் கடன்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் மாற்றப்பட்டது. மேலும் நீண்ட காலக் கடன் தவணைகளின் வசூலும் 8.01 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளிப் போடப்பட்டது. சமீபத்திய வெள்ளம் காரணமாக, தஞ்சாவூர், தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன்களின் வசூலைத் தள்ளிப் போடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிணறுகள் தோண்ட நீண்ட காலக் கடன் பெற்றுள்ள உறுப்பினர்களின் கிணறுகள் பொய்த்த பொழுது, பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்துஅவர்கள் செலுத்த வேண்டிய வட்டியிலும் அசலிலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத அளவிற்கும், இதர சிறு விவசாயிகளுக்கு 90 சதவீத அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத அளவிற்கும் உதவி தரப்படுகிறது. **இவ்வகையில் இதுவரை 2,110 பொய்த்த கிணறுகளுக்காக, 112 இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.**

**இரசாயன உர விநியோகத்தைப் பெருக்கியது:**— தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள், தம் உறுப்பினர்களுக்குச் சாகுபடிக் கடன்களின் ஒரு பகுதியாகவும் உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவருக்கும் ரொக்கத்திற்கும், இரசாயன உரங்களைத் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் துவங்கப்பட்ட சுமார் 300 நிலையங்கள் உட்பட, 4,852 சில்லறை உர விற்பனை நிலையங்களின் வாயிலாகத் தமிழகமெங்கும் குறிப்பாக கிராமங்களில், உர விநியோகம் நடைபெறுகிறது.

1979-80-ஆம் ஆண்டில் 25.82 கோடி ரூபாய் மதிப்பிற்கு இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்க, 1983-84ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களால் 48.98 கோடி ரூபாய் அளவிற்கு இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இதை 60 கோடி ரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகையீட்டுக் கடனுதவி**

தமிழகமெங்கும், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. இக்கடன்கள் சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கப்படுகின்றன. இக்கடன்களின் பேரில் 14 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. இவ்வகைக் கடன்கள் 1979-80 ஆம் ஆண்டில் 1,581 கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 9.81 இலட்சம் பேர்களுக்கு 111.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. இது படிப்படியாக அதிகரித்து, 1983-84 ஆம் ஆண்டில், 1,846 கூட்டுறவு அமைப்புகள் மூலமாக 10.24 இலட்சம் பேர்களுக்கு, இதுவரை இல்லாத வகையில், 193.74 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. நகைக் கடன்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து வழங்கப்படுவதன் மூலம் விவசாயிகளும், தொழிலாளர்களும் மற்ற வகையினரும் இலட்சக் கணக்கில் பயனடைவர்.



**சிறு தொழில்களை மேற்கொள்ள குறைந்த வட்டிக்குக் கடனுதவி:**

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் விருப்பத்திற் கிணங்க, தமிழகத்தில் கடந்த நான்காண்டுக் காலமாக நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும் இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்குகிறது. எல்லா வகையிலும், ஆண்டு வருவாய் கிராமப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும் ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் மேற்

படாமல் உள்ளவர்களுக்கு 7,000 ரூபாய் வரையில் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் இது வரையில் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.



**நகர்ப்புறக்கடனுதவி:**

தமிழகத்தில் வட்ட அளவில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் நகர்ப்புற மக்களுக்கும் ஓரளவு நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்கும் வங்கி வசதிகளை அளிப்பதோடு, குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 88 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய்க்கு அதிகரித்தன. இவ்வங்கிகள் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் ஏற்று நடத்த ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2.5 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கி வருகின்றன. இவ் வங்கிகள் சுமார் 140 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகைகளைத் திரட்டியுள்ளன.




**சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்த உதவி:**

படித்து வேலையில்லாத இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கங்கள் சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கும் இடம் பெயராச் சொத்துக்களின் இணைப் பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன. இதுபோன்ற சங்கங்களை இதர மாவட்டங்களிலும் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் ஆராயப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காகத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு உதவுவதற்காகத் தனித் தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு அவர்களது ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள மானியம் மற்றும் கடனுதவி தருவதற்காக தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் போன்ற சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குவதற்காகப் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தமிழகத்தில் இயங்கி வருவது, கூட்டுறவு இயக்கம் நலிந்த பிரிவினரின் பால் கொண்டுள்ள அக்கறையினைக் காட்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் நலத்திற்காக 1983-ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள திட்டத்தின்கீழ், ஒரு பணியாளர் இறக்க நேரிட்டால் அவர் குடும்பத்தினர் 6,000 ரூபாய்க்குக் குறையாமல் ஈட்டுறுதித்தொகை பெற முடியும்.

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான முக்கிய கருவி கூட்டுறவு இயக்கமாகும். கூட்டுறவு இயக்கத்தின்கீழ், இது வரை வராதுள்ள தமிழக மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருமாறும், தமிழகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் அரசு முயற்சிகளில் ஒத்துழைக்கும் படியும்கேட்டுக் கொள்கிறேன்.



# சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல்
கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
**திரு எஸ். என். இராசேந்திரன்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மனித இனத்தின் பிழைப்பிற்கு இன்றியமையாததாகும் என்பதால், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களை மத்திய அரசுடன் கலந்து தமிழக அரசு செம்மையாக நிறைவேற்றி வருகிறது. இதற்காகச் சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை ஒன்று, முழு நேர அரசுச் செயலாளருடன் 15-7-1983 முதல் இயங்கி வருகிறது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்களில் தொழிற்சாலைகளின்று வெளியேறும் கழிவுநீர், காற்றுப் போன்ற வெளியேற்றங்களின் தன்மையைக் கண்காணிப்பதும், நகர்ப்புறக் கழிவுநீரைச் சுத்தம் செய்யும் விதத்தைக் கண்காணிப்பதும் இத்துறையின் முக்கிய பொறுப்புகளாகும். இத்துறை உருவாக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள், தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளுக்கும், தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளும் வெளியிடப்பட்டன. இது தவிர தமிழ்நாடு முழுவதும் ''காற்று மாசு கட்டுப்பாடுப்பகுதியாக'' அறிவிக்கப்பட்டது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் மாசைக் கட்டுப்படுத்துவதற்கான செயல் முறைகளை ஆராய நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் மீதும் காவிரி ஆற்றின் மாசு படுதலைக்கட்டுப் படுத்துவதற்கான பரிந்துரைகளின் மீதும் முடிவெடுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

நீர் மாசுபடுதலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், மத்திய அரசு, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தை 1974ல் இயற்றியது. இச்சட்டத்தை 31-8-81ல் தமிழ்நாடு அரசு அமலில் கொண்டு வந்து இதைச் சரிவர அமல் செய்ய ஒரு வாரியத்தை 27-2-1982 முதல் அமைத்தது. இவ்வாரியத்தின் பெயர் ''தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்" என்று தற்போது மாற்றப்பட்டுள்ளது. நீர் நிலைகளிலோ, நிலத்திலோ கலக்கும் வண்ணம் வெளியேற்றங்களை அல்லது மாசுபட்ட பொருள்களை திரவ நிலையிலோ, காற்று நிலையிலோ திட நிலையிலோ வெளியிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் இசைவினைப் பெற்றுத்தான் அப்படிச் செய்ய வேண்டும். தொழிற்சாலைகள் இசைவு பெற 31-5-1984க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்சாலையும் வெளியேற்றும் பொருள்களின் ரசாயன மற்றும் நுண்ணுயிரியல் தன்மையை இவ்வாரியம் தனது இசைவு ஆணையின் மூலம் கட்டுப்படுத்தும்.

இதற்கிணங்க வெளியேற்றங்களைச் சுத்தி செய்வது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். இதை மீறும் தொழிற்சாலைகளின் மீதும், வாரியத்தின் இசைவு பெற முன் வராத தொழிற்சாலைகளின் மீதும், நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் தொடர இவ்வாரியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

காற்று மாசைத் தடுக்க மத்திய அரசு 1981ல் இயற்றிய காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் இம்மாநிலத்திலும் அமலாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் ''காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக" அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 6 மாதங்களுக்குள் மாநிலத்திலுள்ள காற்று மாசு படுத்தும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவினைப் பெற மனுச் செய்ய வேண்டும்.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் புதிய அல்லது ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி

நிறுவனங்கள் தங்களது கழிவு நீரை வெளியிட மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவைப் பெற வேண்டும். இது பற்றி வாரியம் முக்கிய நாளேடுகளில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. 30-3-'84 வரை 815 தொழிற்சாலைகள்தான் வாரியத்தின் இசைவு கேட்டு விண்ணப்பித்துள்ளன, இவற்றில் 277 தொழிற்சாலைகளுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் குழு**

மாநிலத்தில் திட்டமிடப்படும் ரூ. 50 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை, சுற்றுப்புறச் சூழல் அடிப்படையில் பரிசீலித்து, அரசுக்குக் கருத்துத் தெரிவிக்க ஒரு குழுவை அரசு நியமித்துள்ளது. இக்குழுவின் பெயர் "தமிழ்நாடு சுற்றுப்புறச்சூழல் குழு", இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை அரசுக்குப் பரிந்துரை செய்யுமுன் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் அத்திட்டத்தை இக்குழுவிற்கு அனுப்ப வேண்டும். தூத்துக்குடியிலும், வட சென்னையிலும், நெய்வேலியிலுமுள்ள அனல் மின் நிலையங்களுக்கு இக் குழு அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் இக்குழுவின் தலைவராவார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்-செயலர் இக்குழுவின் உறுப்பினர்-செயலர் ஆவார்.

**கடலோரப் பகுதிகளின் சுற்றுப்புறத் தன்மையைப் பாதுகாக்கும் திட்டம்:**

கடலோரப்பகுதிகளின் சுற்றுப்புறத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டு தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு உயர் மட்ட அதிகாரிகள் குழுவினை அரசு அமைத்துள்ளது. கடலோரப் பகுதிகளில் 500 மீட்டர் தூரத்திற்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இக்குழுவின் அனுமதி பெற வேண்டும்.



**விமான நிலைய சுற்றுப்புறப் பாதுகாப்புக் குழு**

மாநிலத்தில் உள்ள விமான நிலையங்களின் அருகே விமானங்களுக்குப் பறவைகளால் தாக்குதல் ஏற்படக்கூடும் என்பதால் விமான நிலையச் சுற்றுப்புறங்களைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறைச் செயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது, இக்குழுவின் பரிந்துரையின் மேல் திருச்சி விமான நிலையத்திற்கு அருகேயுள்ள தோல் பதனிடும் ஆலைகள் பறவைகள் வராதிருக்கத் தகுந்தவாறு கம்பி வலைகளைப் போட்டுத்தங்களின் சில திட நிலை கழிவுப் பொருள்களைக் காயப்போடுகிறார்கள். சென்னை விமான நிலையத்தின் அருகே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கட்டவிருந்த லாரி மற்றும் பேருந்து முடிவிடத்தை, பறவைகளால் விமானங்களுக்குத் தாக்குதல் ஏற்படலாமென்ற காரணத்தால் அவ்விடத்தை விட்டு மாற்ற, திட்டமிடச் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவிற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்-செயலாளராக இருக்கிறார்.

**உலகச் சுற்றுப்புறச் சூழல் நாள்**

ஒவ்வொரு அண்டும் ஜூன் திங்கள் 5ஆம் நாள் இது கொண்டாடப்படுகிறது. மாட்ட ஆட்சியாளர்களால் மாவட்டத் தலைநகரங்களில் இந்நாளில் சுற்றுப்புறச்சூழல் பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்:**

இச்சட்டம் 1977ல் மத்திய அரசு நிறைவேற்றியது. நீரைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளும் உள்ளாட்சி நிறுவனங்களும் இம் மேல் வரியைச் செலுத்த வேண்டும். சமீபத்தில் வசூல் தொடங்கப்பட்டுள்ளது. இத்தொகை மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அத்தொகையில் வசூலுக்காக $7\frac{1}{2}\%$ போக மீதித் தொகையில் 80% மாநில அரசுக்கு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அளிக்கும் பொருட்டு, மத்திய அரசு திருப்பித் தருகிறது.

காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் புதிதாக அமலுக்கு வந்துள்ளதால் அச்சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளுக்கு இசைவு அளிப்பதைக் கண்காணிக்க மாசு கட்டுப்பாடு வாரியம் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி வருகிறது.

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக அதிகமாக மாசு படுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள், எரி சாராயத் தொழிற்சாலைகள் முதலிய வற்றின் கழிவு நீரைச் சுத்திகரிக்க வைக்கத் தேவையான நடவடிக்கைகளை வாரியம் மேற்கொள்ளும்.

கட்டுப்பாடுகளை மீறும் தொழிற்சாலைகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான சட்டவியல் பிரிவினையும் வாரியம் உருவாக்கும்.

மாசு கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய முக்கியமான கருவி மாசு பட்ட பொருள்களை எடுத்துப் பரிசீலனை செய்வதற்கான அமைப்பாகும். இதற்கெனத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பிராந்திய அலுவலகங்களுக்குத் தனி ஊழியர்களை நியமிப்பதுடன் நீர் மற்றும் காற்றுக் கழிவுகளை முழுமையாக ஆராய்வதற்குத் தகுதியுடைய ஆய்வகம் சென்னையில் அமைக்கும்.

மாநிலத்தின் ஆறுகள் நீர்ப்பிடிப்புகள் முதலியவற்றின் தண்ணீரின் தன்மையைப் பரிசோதித்து, தண்ணீரின் தன்மைச் சேர்ப மாநிலத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, அதில் ஒவ்வொரு பகுதியிலும் நீர்-நிலைத் தன்மை மேலும் பாதிக்காத விதத்தில் எவ்விதத் தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படலாமெனத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டத்தின் கீழ் தண்ணீர் மேல் வரி வசூலிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

நகர்ப்புறத் திடநிலை வெளியேற்றங்களை எவ்விதம் சுத்திகரிக்கலாமெனத் தனியாக ஆலோசிக்கக் குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நிலையைமேம்படுத்த ஆக்கப்பூர்வமான வழிவகைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, அம்மக்களின் அனைத்து நலன்களையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் தனது அன்புக்கரங்களை நீட்டி உதவி புரிந்து வருகிறது.

தமிழக மக்கட்தொகையில் 19.41 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர்.

மல்லாத பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன. 1980-81 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 48 புதிய உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டு செம்மையான முறையில்நடத்தப்பட்டு வருகின்றன. 685 ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்களும், 20 பழங்குடியினர் மாணவர் இல்லங்களும் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1.7.1982க்கு முன்னர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்றுவந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 22 காசு அடக்கச் செலவில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. 1.7.1982க்குப் பிறகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 14 வயது வரையிலுள்ள 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 0.45 காசு செலவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இத்துறையைச் சேர்ந்த பள்ளிகளில் பயிலும் 1.78 லட்சம் இளஞ்சிறார்கள் வயிறார உண்டு கல்வியில் ஆர்வம் காட்டி வரு

# ஆதி திராவிடர்-பழங்குடி மக்களுக்கு அரசு ஆற்றும் நலப்பணிகள்


மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

**திரு எம். விஜயசாரதி**


நடப்பு நிதியாண்டில் 48.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அம்மக்களுக்கான பயன் நல்கிடும்பல திட்டங்கள்செம்மையாய்ச்செயல் படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதிதிராவிடர் – பழங்குடியினரின் நல்வாழ்வு சிறப்பாய் அமைய அவர்களுக்கு அடிப்படைத் தேவை கல்வியே ஆகும். அக்கல்வியினை அளித்திட அரசு அனைத்துவகை ஊக்கத்தினையும் அளித்துவருகிறது. ஆதிதிராவிடர் – பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கட்கும் உண்டி, உறைவிடத்துடன் செம்மையான கல்வியும் அளிக்க அரசு எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறது.

இத்துறையினரால் 952 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், 149 பழங்குடியினர் உண்டி,உறைவிடப் பள்ளிகளும் ஒரு உறைவிட





வது நாடறிந்த உண்மையாகும்.

கல்விக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்காக இத்துறையின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1980—81 | ரூ. 1607.80 | லட்சம் |
| 1981—82 | ரூ. 1791.25 | லட்சம் |
| 1982—83 | ரூ. 2117.58 | லட்சம் |
| 1983—84 | ரூ. 2378.27 | லட்சம் |

1980-81, 1981-1982 மற்றும் 1982-83ஆம் ஆண்டில் 79,695 பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டன. 1983-84ஆம் ஆண்டில் 23,915 பட்டாக்கள் வழங்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் நிலம் கையகப் பணிக்காக ரூ125. லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டு வசதியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரூ.4,000 மதிப்பீட்டுச் செலவில் 201 ச. அடி பரப்பில் பயன் பெறுவோர் தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்ளும் வகையில் ரூ. 3,250 மானியமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள ரூ. 750 பயன்பெறுவோரின் சொந்த உழைப்பாகக் கருதப்பட்டது. தற்பொழுது ஒருவீட்டின் மதிப்பீட்டுச்செலவை ரூ. 4000விருந்து ரூ. 6000 ஆக உயர்த்தி முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது.

மேற்கண்ட வீட்டு வசதித் திட்டத்திற்காக, ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்கென 1981-82 முதல் 1983-84 வரை ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட தொகையின் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1981 —82 | ரூ. 200 | (இலட்சம்) |
| 1982 —83 | ரூ. 200 | ,, |
| 1983 —84 | ரூ. 200 | ,, |

கலப்பு மணம் புரிந்துகொண்ட ஆதிதிராவிடர் மக்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 4000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ. 300 திருமணச் செலவுக்காகவும் அத்துடன் பாராட்டுப் பத்திரம் மற்றும் 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் அளிப்பதுடன், அத் தம்பதியரின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் முறையே 6 இடங்களும் 5 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருவதை உற்றுநோக்குங்கால் மறைந்தபேரறிஞர்அண்ணா அவர்களின் கனவு நனவாகி வருவதை நாம் அறியலாம்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.80 லட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்த வேண்டும் என்ற இலக்கு நிர்ணயித்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட முக்கிய திட்டங்களை எடுத்துக் கொண்டால் வேளாண்மையில் ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு எல்லா உதவிகளும் செய்து தரப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்முறையில் பெரும்பாலான ஆதிதிராவிடர்கள் பயன்பெற்று வருகின்றனர் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். அத்துடன் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகையில் 3ல் ஒரு பகுதி மானியமாக அளிக்கப்படுகிறது. கால்நடை வளர்ச்சியில் இம்மக்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இன்று இம்மக்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி வெண்மைப் புரட்சியில் ஈடுபட வேண்டும் என்பதாகும். அதன்படி ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க 3ல் ஒரு பாகம் மானியம் என்ற நிர்ணயக் குறியை மாற்றி 50சதவிகிதம்மானியமாகஅளித்து ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றன. தானும் வயிறார உண்டு நாட்டின் தேவையையும் ஈடுசெய்கின்றனர் என்ற உண்மை நிலை தமிழ்நாடெங்கும் நிலவுகிறது.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தஇளைஞர்களுக்குத்தரைப் படை மற்றும் காவல்துறையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க இவர்களுக்கு உடல் அமைப்பு, அறிவுக் கூர்மை இவற்றை அதிகரிக்கும் பொருட்டும், சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1981 ஆம் ஆண்டுமுதற்கண் இராமநாதபுரம், திருநெல்வேலி இரண்டு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இரண்டு மாத காலம் பயிற்சி அளிப்பதற்காக அரசு அனுமதி வழங்கியது.

இந்தப் பயிற்சி முகாம்கள்



தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம்தான். அது அவசியமானதுதான்.

மாண்புமிகு பிரதமர்

**திருமதி இந்திரா காந்தி** (23.7.83)

பயன் அளிக்கும் வகையில் அமைந்ததால் 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 100 ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு 60 நாட்களுக்கு இராணுவப் படை மற்றும் காவல் துறையில் சேருவதற்கு வகை செய்யும் பொருட்டு பயிற்சிமுகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியது. இதற்காக ரூ. 11,16,800- சிறப்பு மைய நிதியில் இருந்து வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. முன்பு சொன்ன பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்று இராணுவப் படையில் சேர 636 இளைஞர்களும் காவல்துறையில் சேர 167 இளைஞர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவிகிதமாக பழங்குடியினர் இருந்த போதிலும் தமிழக அரசு, ஆதிதிராவிடர் நலனுக்கெனச் செயற்படுத்தப்படும் சிறப்பு உட்பகுதித் திட்டங்களைப் போலவே பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ்,சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத் துணைத் திட்டம் 1976-77ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1980-81ஆம் ஆண்டில் பழங்குடி மக்களின் துணைத் திட்ட வரைவு ரூ. 345 .25 இலட்சத்திலிருந்து 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 600 ,58 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1984-85ஆம் ஆண்டிற்குள் மொத்தப் பழங்குடி மக்களின் 50 சதவிகிதம் மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தவும்,அவர்களுக்கு முக்கிய தேவையான குடியிருப்பு, பள்ளிகள், சாலை வசதி, மருத்துவம் போன்ற வசதிகள் பழங்குடி மக்களின் துணைத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 12,466 பழங்குடி மக்களின் குடும்பங்கள், குடும்பப் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின் மூலமாக வறுமைக் கோட்டைத் தாண்டியுள்ளன. பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண் வளப்பாதுகாப்பு, சிறுபாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், சமூக நலம்,கிராமியத் தொழில்கள், பட்டுப் புழு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்குதல். மின் இணைப்பு வழங்குதல் ஆகியவை அடங்கும்.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1980ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்த 20 இயங்கும் காவல் படைகள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் (கும்பகோணம்) மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தீண்டாமையின் தீமைகளைப் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் திரையிட்டு விளம்பரம் செய்வதற்காகத் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

வன்முறைக் கொடுமைகள் மற்றும் இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோருக்கும் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ. 250 முதல் ரூ.2000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப்பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சிஅளிக்கும் நிலையம் 1966ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்தியப் பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 1000 மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 44 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1981 —82ல் 8 மாணவர்களும் 1982 —83ல் 2 மாணவர்களும் வெற்றியடைந்தனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், புரட்சித் தலைவர் அரசின் நல்ல சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு சமூக, பொருளாதார, கல்வித்துறையில் மேம்பாடு கண்டிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



# கன்னியாகுமரி மாவட்ட
# கூட்டுறவு நூற்பு ஆலை லிட்., எண். ஒய். 238

ஆரல்வாய்மொழி

*தந்தி ; "கன்யாஸ்பின்"*  *தொலைபேசி எண். 24 & 26*

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 100.00 லட்சம் |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ; | ரூ. 72.71 ,, |
| நிறுவப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை | : | 24960 கதிர்கள்<br>3588 முறுக்குநூல் கதிர்கள்<br>360 கோன் வைண்டிங் உருளைகள் |
| உற்பத்தி செய்யப்படும் நூல்கள் | : | 20, 40, 60, 80, 2/20, 2/60 மற்றும் 2/80 |
| ஆண்டு ஒன்றுக்குச் சராசரி விற்பனை | : | ரூ. 6.00 கோடி |

**திரு என். இராமமூர்த்தி,**
நிர்வாக இயக்குநர்,

**திரு எல். கே. திரிபாதி, இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர்.

குறைந்த விலையில் தரம் வாய்ந்த துணிகளுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
திருமணம் மற்றும் சுப காரியங்களுக்கு ஏற்ற நவீன துணிகளுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
மங்கையர்கள் விரும்பும் பல வண்ணத் துணி ரகங்களுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
பட்டுச் சேலைகளுக்கும், ரெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்
சுமங்கலி சில்க்ஸ்

# சுமங்கலி சில்க்ஸ்

**லாரன்ஸ் ரோடு — கடலூர்-2.**

*அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!!*

**போன் : 776**

# புரட்சித் தலைவரின் புரட்சிகரமான திட்டம்



மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர்
**திரு ஆர். சவுந்தரராஜன்**

நம்முடைய முன்னோர்கள் உணவைப் பிறர்க்கென வழங்கி உண்பவர்களை மிகவும் புகழ்ந்துரைத்து, பிறர்க்குத் தெரியாமல் தானே உண்பவர்களை இகழ்ந்துரைத்தனர்.

''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு''

எனத் திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம்'' என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சூளுரைத்தார். ''ஏழைகளுக்கு உண்ணும் உணவின் வடிவத்தில் இறைவன் தோற்றமளிக்கிறான்'' என்று காந்தியடிகள் கூறியுள்ளார். இக்கருத்தின் விளக்கமாகவே ''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்'' என்று பேரறிஞர் அண்ணா கூறினார். குழந்தைகளிடையே நிலவும் பசிப்பிணி அதுவும் குறிப்பாக அவர்கள் வாழ்வையே அழிக்கும் கொடுமை கொண்ட அந்தப் பசிப்பிணித் துயரைச் சொல்லி முடியாது.



சத்துணவு மையத்தில் அன்னை தெரசா

எனவே அத்தகைய அவல நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டே நம்முடைய குழந்தைகளுக்கான நண்பகல் சத்துணவுத் திட்டம் இந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மனிதாபிமானக் கோட்பாட்டினாலும், நல்லெண்ணத்தினாலும் தூய பணியைத் தொடர்கிறோம் என்ற உன்னத உணர்வினாலும் தொடங்கப்பட்டசில வாரங்களுக்குள் இம்மகத்தான திட்டம் மக்களிடையே ஆர்வத்தையும் ஆதரவையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்**

இத்தகைய மாபெரும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' 2 முதல் 4 வயது வரை உள்ள பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கும், 5 முதல் 14 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கும் 1.7.1982 முதல் கிராமங்களிலும், 15.9.1982 முதல் நகரப்பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டது. உணவு தயாரிக்க ஒவ்வொரு குழந்தைக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் விகிதம் வருமாறு:

பாலர் பள்ளிக்கு அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம், எண்ணெய் 5 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம் என்ற வீதத்திலும் பள்ளிக்கு அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 5 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம் என்ற வீதத்திலும் வழங்கப்படுகின்றன.

**பயனடைவோர்**

1982ஆம் ஆண்டு, திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பொழுது 2 முதல் 4 வயது வரை உள்ள 16.93 லட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு முழுவதும் 27,897 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. 24.34 லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். பள்ளி மையங்களில் 5 முதல் 9 வயது மற்றும் 10 முதல் 14 வயது வரையுள்ள 39.84 லட்சம் மாணவர்கள் உணவருந்தி வருகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 34,087 பள்ளி மையங்கள் வெவ்வேறு துறைத் தலைவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நாடெங்கும் மொத்தம் 65 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர்.

இத்திட்டம் முதியோர் உதவித் தொகை பெறும் 1.99 லட்சம் முதியோர்களுக்கு 15.1.1983 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பாலர் பள்ளி மையங்களிலிருந்து உணவு பெறுகின்றனர்.

*1.1.1984 முதல், முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவையர்க்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.*

**1.5.1984 முதல் முதியோர் உதவித்தொகை பெறத் தகுதி பெற்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 63,000 நபர்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.** அன்று, ஏற்கனவே முதியோர் உதவித் தொகை பெறுபவர்க்கும், இன்னும் பெறாதவர்க்கும் வேட்டி, சேலையும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக, முதியோர் உதவித் தொகை பெறத்தகுதி பெற்ற நபர்கள், ஊனமுற்றவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்ட விதவைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உட்பட, மொத்தம் தோராயமாக 63,000 பேர்பயனடைகிறார்கள்.

### பள்ளிகளில் புதிய சேர்க்கை

புதிய மாணவர்களை அதிகம் சேர்ப்பதில் தமிழ்நாடு என்றென்றும் முன்னணியில் நின்றுள்ளது. எனினும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பு, முந்தைய ஆண்டுகளைவிடப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இருக்கிறது. 5 முதல் 14 வயது வரை கூடுதலாகப் பள்ளிகளில் சேரத் தகுதி பெற்ற மாணவர்களின் இலக்கு 2 இலட்சமாக இருந்த போதிலும் 1982-83ஆம் ஆண்டில் புதியதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2.63 இலட்சமாகும். 1983-84ஆம் ஆண்டு கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3.82 இலட்சம். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினால் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக உள்ளது எனத் திட்டவட்டமாகக் கொள்ளலாம். இத்திட்டம் பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சமான, துவக்கப்பள்ளிகளில் புதிய மாணவர்கள் சேர்க்கை மூலம் துவக்கப் பள்ளிக்கல்வியில் மாறுதலை உண்டாக்குவதில் பெருமளவு உதவியுள்ளது.

### வேலை வாய்ப்பு

இத்திட்டத்தினால் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் 1,86,952 நபர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிலும் விதவைகளுக்கும் கைவிடப்பட்ட



குழந்தைகளுக்குச் சத்துணவு போடுகிறோம்; இது பற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள். பசித்த குழந்தைகள், அரசு வழங்கும் உணவைச் சாப்பிடுவது, கேவலமா?

பெண்களுக்கும்அதிகமாக வேலை வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களில் 1,65,482 பேர் பெண்கள்; அதில் 30,094 பேர் தாழ்த்தப்பட்டோர் மற்றும்பழங்குடியினர்ஆவர். 42,457 பேர் விதவைகள் மற்றும் கைவிடப்பட்டோர்களும் ஆவர். சுதந்திர இந்தியாவின் 35 வருட காலத்தில் இத்தகு மாபெரும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தியமுன்னோடித்திட்டமாக இது திகழ்கிறது.

### உடல் நலம்

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள பாலர் பள்ளி மையங்களில் குழந்தைகளின் உடல் நலத்தைக் கவனிப்பதற்காக விரிவான உடல் நலத்திட்டம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அதன்படி குழந்தைகளின் உடல் நலம் மற்றும் எடையைக் குறிக்கும் அட்டைகள், மையங்களில் பராமரிக்கப்படுகின்றன. யூனிசெப் ( UNICEF ) நிறுவனத்தின் உதவி மூலம் குழந்தைகளின் எடை மற்றும் உயர அளவுகளை அறுதியிட அளவு சாதனங்கள் இதுவரை 2,400 சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி நடத்திய ஆய்வின்படி இத்திட்டத்தில் பங்கு பெற்ற குழந்தைகளின் எடை, உயரம், கை சுற்றளவு முதலியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோருக்கு ஒரு நாளைக்கு 30 கிராம் வீதம் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பல்பொடி வழங்கப்படுகிறது. இளம்பிராயத்திலிருந்து குழந்தைகள் சுகாதாரத்தில் அக்கறை காட்ட இத்திட்டம் உதவுகிறது.

### புதிய சமுதாயத் திட்டம்

இளம்பிராயத்திலிருந்து குழந்தைகள் சாதி சமயவேறுபாடின்றி உண்ணவும், கற்கவும் ஏதுவாய் இருப்பதுடன் தங்களுக்கு உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை மறந்து உண்மையான இந்தியக் குடிமக்களாக வளர்வதற்கும், சமுதாய ஒருமைப்பாட்டிற்கும் இத்திட்டம் வழிவகுத்துள்ளது. **சாதி வேறுபாட்டுணர்வுகள் முற்றும் மறைந்து ஒருமைப்பாடு நிலை பெற்றுத் தழைக்கப் பல்லாண்டு ஆகலாம் எனினும் இவ்வொருமைப்பாட்டிற்குச் சரியான ஒரு துவக்கத்தை இத்திட்டம் ஆரம்பித்துள்ளது என்பதில் ஐயமில்லை.**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், கல்வி கற்கவும் உடல் நலத்தைப் பேணவும், குழந்தைகளின் பொது ஆரோக்கியத்திற்கும் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கி இருப்பதுடன் முதியோருக்கும், கைவிடப்பட்ட விதவையர்க்கும் சமுதாயத்தில் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ள அரிய திட்டமாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏழை எளிய மக்களுக்கும் மற்றும் கொடிய விலங்கினங்களுக்கும் கூட ஈந்த ஏழு வள்ளல்கள் பற்றி அறிந்திருப்பினும், தமிழ்நாட்டின் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் உள்ளத்தில் எதிர்காலத்திற்கான புதிய நம்பிக்கையை உருவாக்க, இத்தகைய ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் ஏழு வள்ளல்களையும்கூட நமது முதல்வர் விஞ்சியுள்ளார் என்றால் மிகையாகாது. எனவேமுதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இந்தியக் குடியரசின்கீழ் உள்ள குடிமகனுக்கு நல்லதொரு எதிர் காலத்தை ஏற்படுத்த, சீரிய சிந்தனைக்குப்பின் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும் என்பதில் ஐயமில்லை.

இத்திட்டச் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள இடர்ப்பாடுகளை நாம் அறிவோம். எனினும் இச்செலவு இந்நாட்டின் வருங்கால முதலீடு என்பதாலும் நாளைய இளைய தலைமுறையினரின் நல்வாழ்விற்குச் செய்து கொள்ளும் முன் வைப்பீடு என்பதாலும் ஆழ்ந்த நம்பிக்கையுடைய புரட்சித் தலைவரின் அரசும் தமிழக மக்களும்இதன் நிதிச் சுமையை ஏற்க உறுதியோடும் மகிழ்ச்சியோடும் முன்வந்துள்ளனர்.

# வீட்டு வசதி வாரியப் பணிகள்



**மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்**

## திரு எஸ். ஆர். இராதா

வளர்ந்து வரும் ஒரு நாட்டில் உள்ள பெரும் பிரச்சினைகளுள் வீட்டுவசதிப் பிரச்சினை என்பது முன்னணியில்இருக்கிறது. பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளான வீட்டுமனைகள், வீடுகள் ஆகிய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1947ஆம் ஆண்டு நகர்ப்புறமேம்பாட்டுக்கழகம் என்ற ஓர் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டு, நிதி நிலை நெருக்கடி காரணமாக, நடுத்தர அளவில் இயங்கிவந்தது.

சென்னை நகரிலும், மற்றும் மாவட்டங்களிலும் பெருகி வந்த வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு பெரிய அமைப்பாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 1961ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. வீட்டுவசதித் திட்டங்களுக்கும் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் தேவையான நிதியைத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் உரிமைகளும் அதற்கு வழங்கப்பட்டன.

பலவித சமூக வீட்டு வசதித் திட்டங்களைப் பெரும் அளவில் நிறைவேற்றி, இதுவரையில் தமிழகம் முழுவதிலும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குடியிருப்பு இல்லங்களை வீட்டுவசதி வாரியம் கட்டி முடித்திருக்கிறது. 1970ஆம் ஆண்டில் ரூபாய் 6 கோடி மதிப்புள்ள வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்த வீட்டுவசதி வாரியம் தற்போது இந்த நிதி ஆண்டில் (1984-85) ரூபாய் 45 கோடி மதிப்புள்ள வீடுகளைக் கட்டும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் :**

தமிழகத்தில் அதிகரித்து வரும் வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அதன் பணிகளைத் தமிழகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. ''பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அதிக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும்'' என்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் அயராது பாடுபட்டு வருகிறது.

குறைந்த விலையில் அதிகமான வீடுகள் கட்டி அதிகமான மக்களுக்குக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. புதுதில்லியில் உள்ள ''நகர்'' வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (Hudco), வாரியத்தின் பல்வேறுபட்ட சமூக வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்ற அதிக அளவில் நிதி உதவி செய்துவரும் ஒரு நிறுவனம் ஆகும்.

**வீட்டு மனைகள் மற்றும் வளர்ச்சித் திட்டம் :**

சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர், மொகப்பேர் மற்றும் மதுரவாயில் ஆகிய ஊர்களில் வாரியம் ஒரு தனித்தன்மை கொண்ட புதிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அடிப்படை வசதிகளும் சுகாதாரமான சுற்றுப்புற சூழலும் கொண்ட வீட்டுமனைகளை இத்திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் ஏழைமக்களுக்கு வழங்குவதன் மூலம் சென்னை மாநகரின் மக்கள் தொகையில் 60% உள்ள ஏழை மக்களின் வீட்டு வசதி நிலைமைமேம்படுத்தப்படுகிறது. மேலும், பாதி கட்டி முடிக்கப்பட்ட வீட்டை முழுமையாகக்கட்டுவதிலும், அவர்களின் சொந்தப் பணத்தை இத்திட்டத்தில் முதலீடுசெய்வதிலும் பொது மக்களின் ஒத்துழைப்பையும் இத்திட்டத்தின்மூலம் பெற முடிகிறது. இத்திட்டத்தின்கீழ் 11,870 விடுகள் 1,445.55 இலட்சம் ரூபாய் செலவில் கட்



டப்பட்டுள்ளன. மேலும் 15,703 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

**நகர விரிவாக்கத் திட்டம் :**

நகரங்களில் மக்கள் நெருக்கடியைப் போக்கும் பொருட்டும், கிராமங்களிலும், புறநகர்ப்பகுதிகளிலும் அவைகளை மேம்படுத்தி மக்களைக் குடியேற்றும் இப்புதிய திட்டத்தை வாரியம் செயல்படுத்த உள்ளது. குறைந்த விலையில் கிடைக்கும், உபயோகம் குறைந்த புறநகர் நிலங்களை வாங்கி, வசதிகளுடன் கூடிய மனைகளாக மேம்படுத்தி, எதிர்பார்க்கும் மக்கள் பெருக்கத்திற்குக் குடியமர்த்த இத்திட்டம் வகை செய்கிறது. மேலும் தொழிற் கூடங்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 10,000 பேர் மக்கள் தொகைக்குக் குறைவான 70 நகர்ப் பஞ்சாயத்து ஊர்கள் இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வீடுகள் :**

**இத்திட்டத்தினால் சிறுதொழில் செய்வோர், நெசவாளர், சலவையாளர், மீனவர் ஆகியோர் பயனடைகிறார்கள். ஆண்டு வருமானம் ரூ. 4200 வரை உள்ளவர்களுக்கு இந்த வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கு 7% வட்டி வீதமும் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.**

**இத்திட்டத்தின்கீழ், பல குடிசைப் பகுதிகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக அவர்களுக்கு வீடுகளை வாரியம் கொடுத்துக் குடியமர்த்துகிறது.**

வாரியம் 10,195 வீடுகளை மனைகள் மற்றும் பணிகள் திட்டத்தின் கீழும், பொருளாதாரத்தில் பின்தங்கியோர் திட்டத்தின் கீழும் அமைத்து இருக்கிறது. ஆலைத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வேலை செய்யும் இடத்திற்கு அருகிலேயே அவர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் கொடுக்கும் திட்டத்தையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**குறைந்த வருமானம் உடையோருக்கு வீடுகள்:**

இத்திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் ரூ. 4201 முதல் 7200 வரை உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டி, வழங்கப்படுகின்றன. வட்டி வீதம் 8%. திருப்பிச் செலுத்தும் காலம் 15 ஆண்டு.

**நடுத்தரவருமானம்உடையோருக்கு வீடுகள் :**

ஆண்டு வருமானம் ரூ.7201 முதல் 18000 வரை உள்ளவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வீடுகள் வாரியத்தால் கட்டி வழங்கப்படுகின்றன. வட்டி விகிதம் 10.5% முதல் 11.5% வரை. திருப்பிச் செலுத்தும் காலம் 12 ஆண்டு.

**உயர் வருமானம் உடையோருக்கு வீடுகள்:**

ஆண்டு வருமானம் ரூ.18000க்கு மேல் உள்ளவர்களுக்கான திட்டம் இது. வட்டி விகிதம் 12.5%. திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டு.

**தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டு வாடகைத் திட்டம்:**

அரசுக்குச் சொந்தமான இடங்களில் அரசு அலுவலர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் தேவையான இடங்களில் வீடுகளைக் கட்டி முடித்து, அதைப் பராமரிக்கும் வேலையையும் செய்யும்படி வாரியத்தைத் தமிழக அரசு பணித்திருக்கிறது. இந்த வீடுகள் அரசால், அரசு அலுவலர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒதுக்கப்படுகின்றன.

**காவலர் குடியிருப்புத் திட்டம்:**

காவலர்களுக்கு, தமிழகத்தில் பல இடங்களில் வீடுகட்டும் திட்டமும், வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாரியம் இத்திட்டத்தை ''முன்வைப்புத் தொகை''த் திட்டத்தின்கீழ் செய்து வருகிறது.

**பளிங்கு ஓடு தொழிற்சாலை:**

ஆண்டுக்கு 3 இலட்சம் பளிங்கு ஓடுகள் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலையை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இங்குத் தயாரிக்கப்படும் பளிங்கு ஓடுகள் வாரியத்தின் வேலைகளுக்கும், வெளிவிற்பனைக்கும் கொடுக்கப்படுகின்றன.

**வீட்டுவசதி நிர்வாகமும், செயல் முறையும்,**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசால் உருவாக்கப்பட்ட, தன்னாட்சி கொண்ட, தமிழகம் முழுவதற்கும் வீட்டுவசதித்திட்டத்திற்கென உருவாக்கப்பட்ட ஒருநிறுவனம். வாரியம் சென்னை மாநகரில் பல கோட்டங்களும், திருச்சி, கோவை, சேலம், ஈரோடு, மதுரை, ஹோசூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் கோட்டங்களும் அமைத்துப்பணிகளை நிறைவேற்றி வருகிறது.

## மாவட்டங்களிலும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள்

குடிசைமாற்று வாரியம் சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகளை அகற்றி மாடி வீடுகள் கட்டியும் குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தும் வருகிறது.

### குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள்:

வாழ்வதற்கொவ்வாத குடிசைப் பகுதிகளிலுள்ள குடிசைகளை அகற்றி அப்பகுதியில் ஒதுக்கீடு பெறத்தகுதி வாய்ந்த குடிசை வாசிகளின் எண்ணிக்கைக்கு குறையாமல் அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுகின்றன.

வாரியம் கட்டும் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் கழிவறை, குளியலறை, மேல்நிலைத் தொட்டிகள் மூலம் தண்ணீர்வசதி மற்றும் கழிவுநீர் வெளியேற்று வசதி ஆகியவை கொண்டதாக இருக்கும்.

வாரியக் குடியிருப்புகளைக் குடிசைவாசிகளுக்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்யும் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் மாதத்திற்கு ரூ. 20- லைசென்ஸ் தொகையாக வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் வசதி செய்தளித்திருந்தால் மாதம் ரூ. 22 வசூலிக்கப்படுகிறது. மேலும் மின்சார வசதியும் அளிக்கப்பட்டிருந்தால் மாதம் ரூ. 25 வசூலிக்கப்படுகிறது.

ஒதுக்கீடுதாரர்கள் விரும்பினால் குடியிருப்புகள் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதற்கு ஆரம்பப் பாதுகாப்புத்தொகை வசூலிக்கப்படுவதில்லை. அவ்வாறு ஒதுக்கீடு பெற்றவர்களிடமிருந்து மாதத் தவணைத்தொகை ரூ. 45 தரைத் தளத்திற்கும், ரூ. 40 முதல் தளத்திற்கும், ரூ. 35 -இரண்டாம் தளத்திற்கும் ரூ. 30 மூன்றாம் தளத்திற்கும் பெறப்படுகிறது.

இந்தத் தவணைத்தொகை 25 ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும். குடியிருப்புகளின் விலையை மேற்குறிப்பிட்ட தவணைமுறையிலோ அல்லது ஒரே தவணையிலோ முழுமையாகச் செலுத்திய பின் ஒதுக்கீடுதாரர்களுக்குக் குடியிருப்பிற்குரிய விற்பனைப்பத்திரம் வழங்கப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில் இவ்வாரியம் 9,006 குடியிருப்புகளை ரூ. 873.46 இலட்சங்கள் செலவில் கட்டியுள்ளது. 1984-85ம் ஆண்டு மேலும் 2,000 குடியிருப்புகளை ரூ. 340 இலட்சங்கள் செலவில் கட்டவுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் ரூ.152.32 இலட்சங்கள் செலவில் 20,790 குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன்பெற்றுள்ளனர். 1984-85ஆம் ஆண்டு 11,950 குடும்பங்கள் ரூ.140 இலட்சங்கள் செலவில் பயன்பெறுவர்.

சென்னை ஹால்ஸ் ரோட்டில் உருவாக்கப்பட்டுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்.



### சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்:

உலகவங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு நில உரிமை வீடுகட்ட கடன் கொடுக்கப்படும். அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,350- செலவு செய்யப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில் 41,524 குடும்பங்கள் பயன்பெறுமாறு ரூ. 935.74 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 1984-85ல்ரூ. 600 இலட்சங்கள் செலவில் மேலும் 15,000 குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

### பட்டா வழங்குதல் மற்றும் வீடு கட்டிக்கொள்ள கடன் வழங்குதல்:

உலகவங்கித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிலஉரிமை மற்றும் வீடுகள் கட்டிக்கொள்ள மேம்படுத்திக் கொள்ள கடனுதவி மற்றும் மான்யம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடன் மற்றும் மான்யம் வழங்க ரூ. 10.33 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலத்தின் விலை (20ச.மீ. மனைக்கு ரூ. 7) அபிவிருத்திச் செலவு (ரூ. 8)மற்றும் பராமரிப்புக்கட்டணம் (ரூ. 2-) ஆகியவை ஒவ்வொரு ஒதுக்கீடுதாரரிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும் 10 ஆண்டுகளுக்கு வசூலிக்கப்படும். மனையின் முழுக் கிரயத்தையும் அபிவிருத்திச் செலவு முழுவதையும் செலுத்தியபின் மனைக்குரிய விற்பனைப்பத்திரம் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட வீடுகட்டிக்கொள்ளக் கொடுக்கப்படும் கடன் 15 ஆண்டுகளில் தவணையில் திரும்பச் செலுத்த வேண்டும். கடந்த நான்காண்டுகளில் 24,483 குடும்பங்கள் நில உரிமை பெற்றுள்ளனர். 17,079 குடும்பங்களுக்கு வீடுகட்ட ரூ. 477.96 இலட்சங்கள் கடன் அங்கீகரிக்கப்பட்டு ரூ. 256.47 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1984-85ஆம் ஆண்டு 20,000 குடும்பங்கள் நில உரிமைபெற உள்ளனர். 15,000 குடும்பங்களுக்கு ரூ. 480 இலட்சங்கள் கடன் அங்கீகரிக்கப்பட்டு, ரூ.273 இலட்சங்கள் கடன் வழங்கப் படத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மாநிலத்தின் பிறபகுதிகளில் குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகளை விரிவாக்கம் செய்வது.

1970ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இவ்வாரியம் 1984 வரை சென்னை மாநகரில் மட்டுமே பணிகளைச் செய்து வந்தது. **1984-85ஆம் ஆண்டிலிருந்து வாரியம் மாநிலத்தின் குறிப்பிட்ட சில இதர நகரங்களிலும் பணிகளைச் செய்ய வேண்டும் என புரட்சித் தலைவரின் அரசு முடிவெடுத்துள்ளது.**

1984-85ம் ஆண்டு மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் குடியிருப்புகள் கட்டுவது குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற பணிகளை வாரியம் மேற்கொள்ளும்.



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஆரோக்கிய மயம் லைப்பாய் நயம்--
போராடிப் பொழுதெல்லாம்
உழைத்த பின்-- ஜோராக ஆடிய
பின்-- நீராடும் இன்பம் லைப்பாய்
போல் வேறில்லை-- குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர்
சுத்தமே உருவான ஆரோக்கிய
மலர்ச்சி !






**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது லைப்பாய்**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 92 2317 TM



# பிற்பட்டோர் முன்னேற்றம் பெற பெரும் திட்டங்கள்

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

**திரு. த. கோவேந்தன்**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை 1969-ம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவரை ஆதிதிராவிடர் நலத் துறையால் கவனிக்கப்பட்டுவந்த பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப் பட்டன. பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971-ல் தனி மானியக் கோரிக்கை ஏற் படுத்தப்பட்டது.

**படிப்பு உதவித்தொகை :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 9ஆம் வகுப்பி லிருந்தும், சீர் மரபினர் மாண வர்களுக்கு 4ஆம் வகுப்பிலிருந் தும் உதவித் தொகை வழங்கப் படுகிறது. இவர்களுக்கு 3ஆம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாகக் கல்வித்துறை மூல மாக வழங்கப்படுகின்றன. இச் சலுகையைப் பெறுவதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500 உச்சவரம்பு நிர்ண யம் செய்யப்பட்டதை, 1981-82-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ரூ. 5,000 ஆக உயர்த்தியது.

**பள்ளிகள் :**

சீர் மரபினர்களுக்காக இத் துறை மூலம் 277 பள்ளிகள் நிர் வகிக்கப்பட்டு வருகின்றன. இதன் படி 2 மேல்நிலை, 8 உயர்நிலை, 36 நடுநிலை மற்றும் 231ஆரம்பப் பள்ளிகள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இப் பள்ளிகளில் 50,453 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். இவற்றில் 1754 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர்.

**மாணவர் இல்லங்கள் :**

மாணவர்கள் கல்வி பயில வசதியாயிருக்கும் பொருட்டு, அரசினர் மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுப் பராமரிக்கப் பட்டு வருகின்றன. இவ்வில் லங்களில் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர்களின் பெற் றோர்-பாதுகாவலர் ஆண்டு வரு மானம் ரூ. 5,000-க்கு மேற் படாமலிருக்க வேண்டும். இத் துறை மூலமாக 483 விடுதிகள் பராமரிக்கப்பட்டு அவற்றால் 28,862 மாணவ, மாணவியர் பய னடைந்து வருகின்றனர். 1984-85-ஆம் ஆண்டில் புதிதாக மேலும் 40 விடுதிகள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

**பரிசு அளிக்கும் திட்டம் :**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் இனத்து மாணவ, மாணவியர்கள் படிப்பில் ஆர்வம் கொள்ளத் தூண்டும் வகையில் +2 தேர்வின் மாநிலத் தில் முதலாவதாகத் தேறியவர் களுக்கு ரூ. 1,000 வீதம் இரு பரிசுகளும் (மாணவருக்கு ஒன்று, மாணவிக்கு ஒன்று) 10ஆம் வகுப்புத் தேர்வில் மாநிலத்தில் முதலாவதாகத் தேறியவர்களுக்கு தலா ரூ. 500 வீதம் 2பரிசுகளும் (மாணவருக்கு ஒன்று, மாணவிக்கு ஒன்று) எஸ். எஸ். எல். சி. ஆண்டுத் தேர்வில் மாவட்டங்கள் தோறும் முதலாவதாகவும் இரண் டாவதாகவும் தேறியவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 100ம் 2-வது பரிசாக ரூ. 50ம் ஆக 32 பரிசு களும், மற்றும் 8ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மற்றும் இரண் டாவதாகத் தேர்வு பெற்றவர் களுக்கு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் முதல் பரிசாக ரூ. 50 இரண்டாவது பரிசாக ரூ. 10 மொத்தம் 32 பரிசுகள் வழங்கப் படுகின்றன.

**உணவு மானியம் :**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் உதவி பெறும் தனி யார் உணவு விடுதிகள் 47-க்கு உணவுச் செலவுக்காக 10 மாதங் களுக்கு உணவு மானியம் வழங்கப் படுகிறது. இவற்றில் தங்கிப் பயிலும் மாணவர்கள் எண் ணிக்கை 2,623, மாணவர் ஒருவ ருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 45 வீதம் நகரங்களிலும் ரூ. 40 வீதம் மற்ற இடங்களிலும் உள்ள விடுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

## இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம் :

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் ஒன்று முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் எல்லா மாணவ, மாணவிகளுக்கும் இரு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதனால் 60,000 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

## கடன் உதவித் தொகை :

தொழிற் படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அவர் தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5001-லிருந்து ரூபாய் 10,000-க்கு உட்பட்டிருப்பின் 1981-82ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ரூ. 500 வீதம் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பினைப் படிக்கும் காலம் முழுமைக்கும் 5 ஆண்டுகளுக்கு மிகாமல் உதவித் தொகை ரூபாய் 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

## இலவசத் தொழிற் கருவிகள் :

ஆண்டு தோறும், முடிதிருத்துதல், சலவை செய்தல், கல் உடைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத்தொழில் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## சலவைத்துறை :

சலவைத் தொழிலாளர்தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்குச்சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளைச் சுகாதார முறையில் அமைப்பதற்காகப் பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் மொத்த மதிப்பீட்டுத் தொகையில்50சதவிகிதம்கடனாகவும், 50 சதவிகிதம்மானியமாகவும் வழங்கப்பட்டு, இதுவரை 54 சலவைத்துறைகள் கட்டப்பட்டுள்ளன.

## மரச் சாமான்கள் :

1984-85ஆம் ஆண்டில் கர்ணம் மேசை போன்ற மரச்சாமான்கள் வழங்குவதற்காகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்களுக்கு ரூ. 4 லட்சம், சீர் மரபினர் மாணவர் இல்லங்களுக்கு 50 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1981-82 லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்காநூரணியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம் புதூரிலும் உள்ள பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் நேரடிமேற்பார்வையில் உள்ளன. இப்பட்டறைகளில் பொருத்துதல், இரும்பு வேலை செய்தல், தகடு உலோகத் தொழில் பழுது பார்ப்புத் (டிங்கரிங்) தொழில் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர் மரபினர் இனத்தவர் மேற்கூறிய தொழில்களில் வேரூன்றி நின்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள இயலும் வகைகளில், அவர்களிடம் போதிய தொழில் நுட்ப அறிவை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சியின் கால அளவு 18 மாதங்கள்; இதுவரையில் 479 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம் :

ஏழ்மை நிலையில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பு இனத்தவர்களில் குறிப்பாக நரிக்குறவர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் மற்றும் ஒட்டர் ஆகியவர்களுக்கு வீட்டுமனை வழங்க 1981-82 ஆம் ஆண்டு அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்தது.



# புதிய திட்டங்கள்

## டாக்டர் ராவ் இந்திய ஆட்சிப் பணிக்குழுமம் :

இத்திட்டத்தின் நோக்கம் பல் கலைக் கழகங்களில் முதுநிலைப் பட்டப்படிப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேறும் பிற்படுத்தப்பட்ட மாணவர் களைப் புதுடெல்லியில் உள்ள 'டாக்டர் ராவின் அனைத்திந்திய ஆட்சிப்பணிப் பயிற்சி மன்றம்' என்ற நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசு நடத்தும் தேர்வாணைக் குழுவின் பணித் தேர்வுக்காக நல்ல பயிற்சி அளிப்பது ஆகும். இத்திட்டத்தின் மூலம் 1983-ல் இரண்டு பேர் மத்திய அரசின்கீழ் உள்ள நிறுவனங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டம் 1983-லிருந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் புகழ் பெற்ற முதுநிலை வழக்குரைஞர் களிடம் பயிற்சி பெற இயலவில்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்தவர் களிடையே இருந்து ஒவ்வோராண்டும் 20 சட்டப் பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து அவர்கள் போதுமான பல்வேறு அனுபவம் பெறும் பொருட்டுச் சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் அமர்த்தி 3 ஆண்டுகளில் பயிற்சி பெறுமாறு செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

பயிற்சிக்காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு

ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். இத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 1,81,000 செலவேற்படும்.

**வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக மாணவர் இல்லங்களை ஏற் படுத்துதல் :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இம் மாநகரிலுள்ள புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மூலமாக முறையான பயிற்சி பெறும் பொருட்டு ரூ. 500-க்கு மேற் படாத கல்விக் கட்டணத்தை அவர்களுக்கு வழங்குவதற்கும், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள மாணவர்கள் சென்னை மாநகரி லுள்ள பயிற்சி வசதிகளைப் பெற இயலும் வகையில் சென்னை மாநகரில் (மேலே குறிப்பிட்ட வாறு) 50 மாணவிகளுக்கு ஒன்றும் 50 மாணவர்களுக்கு ஒன்றுமாக இரு இல்லங்களை ஏற்படுத்த வும் அரசு முடிவு செய்துள்ளது.

இது தவிர விடுதியில் தங்காது பயிலும் 50 மாணவ, மாணவி களுக்கு உதவி அளிக்கப்படும். உயரளவு ரூ. 500-க்கு உட்பட்டு கல்விக்கட்டணம் முழுவதையும் அரசு ஏற்கும். மேலும் உணவு, தங்குமிடச்செலவுகளையும் அவை தொடர்பான செலவுகளையும் அரசு ஏற்கும். இத்திட்டத்தின் மூலம் பயனடைவோரின் எண் ணிக்கை ஆண்டொன்றுக்கு 600 ஆகும்.

**முடிதிருத்தும் நிலையங்கள் அமைக்க நிதி உதவி :**

முடிதிருத்துவோர் ஊராட்சி ஒன்றியம் மற்றும்பேரூராட்சி மை யங்களில் சொந்தமாக முடிதிருத் தும் நிலையங்களை அமைத்திட நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக்கழகம்**

இக்கழகம் தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலத்திற்காகச் செயல் பட இந்தியகம்பெனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 25-2-82 லிருந்து செயல்பட்டு வருகிறது. இதன் மூலதனம் ரூ. 10 கோடி யாகும். இது பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் திட்டி



பிற்பட்ட இனத்து மாணவி படிப்புக்காகப் பரிசு பெறுகிறார்.

செயல்பட்டு வருகிறது. இதுவரை இக்கழகம் பிற்படுத்தப்பட்டோ ருக்கான 23 தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 11.09 இலட் சம் கடன் உதவி அளித்துள்ளது.

**இத்துறை நடத்தப்படும் விடுதி களின் எண்ணிக்கை, ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாக்கப்பட்டு வரு கின்றது.**

1980–81-ல் 357 விடுதிகள் மூலம் 22732 மாணவ மாணவிய ரும், 1981-82-ல் 397 விடுதிகள் மூலம் 24742 பேரும் 1982-83ல் 440 விடுதிகள் மூலம் 26862 பேரும், 1983-84ல் 483 விடுதி கள் மூலம் 29012 பேரும் பயன் பெற்றுள்ளனர்.

1980-81ல் 4,000 சலவைத் தொழிலாளர்களுக்கும், 4,000 முடிதிருத்துவோருக்கும், 250 போயர்களுக்கும் தொழில் கருவிகள் வழங்கப் பெற்றுள்ளன. 1981-82-ல் இதே எண்ணிக்கை யில் தொழிற் கருவிகள் வழங்கப் பெற்றுள்ளன. 1982-83ல் சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர்க்குத் தலா 4000 தொழிற் கருவிகளும், போயருக்கு 500 தொழிற்கருவிகளும் வழங்கப் பட்டன. 1983-84ல் 4640 சலவைத் தொழிலாளர்களுக்கும், 2,250 முடிதிருத்துவோருக்கும், 500 போயர்களுக்கும் தொழிற் கருவிகள் வழங்கப்பெற்றுள்ளன.

**விவசாயக்கடன் :**

1980-81ல் ரூ. 1.51 இலட் சத்தில் 51 விவசாயக் கிணறு களும், 1981-82ல் ரூ. 1.51 இலட் சத்தில் 47 விவசாயக் கிணறு களும், 1982-83ல் ரூ. 1.67 இலட்சத்தில் 64 விவசாயக் கிணறுகளும் தோண்டப்பட் டுள்ளன. 1983-84க்கு விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 1.43 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது.

**இரண்டாவது பிற்படுத்தப்பட் டோர் நலக்குழு :**

அரசுப்பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டவகுப்பினருக்குப் பிரதிநிதித் துவம் வழங்க 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது.

பிற்படுத்தப்பட்டோர் சாதிப் பட்டியலையும் அவர்களுக்கான 50% இட ஒதுக்கீட்டைப் பரி சீலனை செய்யவும், எல்லாப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இனத் தவர்களுக்கு மேலும் பலன் கிடைக்க வழி வகைகள் செய் வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயவும் இரண்டாவது பிற்பட் டோர் நலக்குழு ஒன்று அமைக் கப்பட்டுச்செயல்பட்டு வருகிறது.

எங்களின் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீவள்ளி விலாஸ்

ராயல் சில்க் ஹவுஸ்

&

வேல்முருகன் தியேட்டர்

கடலூர் – 607 002.

கடலூர் மாநகரில் புதிய ஜவுளிக் கடல்

பட்டுப் புடவைகள்

நாகரீக ஜவுளிகள்

ரெடிமேட் ஆடைகள்

அனைத்தும் ஒரே இடத்தில் நியாய விலையில் தேர்வு செய்திட

சீமாட்டி சில்க்ஸ்

சுபகோவிந்தம் பில்டிங், இம்பீரியல் ரோடு, கடலூர் என். டி.

போன் : 1424

# மகளிர் நலத்திற்கு உதவும் சமூக நலத்துறை

சமூகநலத்தில், நலிந்த பிரிவினரின் மேம்பாடே, நாட்டின் முன்னேற்றத்தினைக் கணக்கிட உதவும் அளவுகோலாக விளங்குகிறது.

கடந்த சில ஆண்டுகளில் இத்துறையின் விரைவான வளர்ச்சியும், சாதனையும் 1980-81-ல் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 10.82 கோடிகள், தற்போது ஆறு மடங்காக ரூ. 68.67 கோடியாக உயர்ந்திருப்பதிலிருந்து நன்கு புலப்படும்.

இத்துறையின்கீழ் இயங்கும் அநேக நலத்திட்டங்களில் மகளிர் நலத் திட்டங்கள் தலையாயது ஆகும்.

உற்பத்தி நிலையங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதன் மூலம்பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், அவர்களுக்குப் பொருளாதார முன்னேற்றத்தில் உதவி செய்வதையும் தேர்ந்தெடுத்த சில துறைகளில் மகளிரைப் பயிற்றுவிப்பதன் மூலம், அவர்களுக்கு மேலும் வேலைவாய்ப்புகளை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு அநேக கூட்டுறவு நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டுறவுத் துறையில் பல்வேறு அலகுகளை ஏற்படுத்தி அவைகளுக்கு மூலதனம், இயந்திரங்கள், இதர கருவிகள் வாங்க மானியம் அளிப்பதோடு பங்குத் தொகை, நடப்பு மூலதனம், கடன் முதலியவையும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நிலையங்களில் எழுதுபொருட்கள் தயாரித்தல், பனைப் பொருள் தொழில், கிராம நூற்பு மையம், சாக்குக்கட்டி மற்றும் மெழுகு வர்த்தி தயாரிக்கும் திட்டம், கயிறு தயாரிப்பு, பட்டு நூல் எடுத்தல், தையல் தொழில், விதவைகளால் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் முதலியவை முக்கியமான தொழில்களாகும்.

இதுவரை இத்திட்டங்களின் கீழ் 5345 பெண்டிர், பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். 3810 பெண்கள் வேலை வாய்ப்பினையும் பெற்றிருக்கின்றனர். சென்ற நான்கு நிதியாண்டுகளில் இத்திட்டங்களுக்காக ரூ. 70.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

முதன் முதலாக இத்திட்டத்தின்கீழ் 1978-ல் ஆண்டுக்கு ரூ 3,000 மட்டுமே வருவாய் பெறும் குடும்பத்திலுள்ள 16 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது கணக்குப் பதிவு மற்றும் கணக்குத் துறையிலும் சுருக்கெழுத்திலும்கூட பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 8920 பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். 1980-81 முதலாகிய சென்ற நான்காண்டுகளில் இத்திட்டத்திற்கென ரூ. 9.05 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.



மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**திருமதி கோமதி சீனிவாசன்**

கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 18-35 வயதிற்குட்பட்ட ஆதரவற்ற மகளிருக்குத் தையல், கம்பளி நெய்தல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், பாய் நெய்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கும் வகையில் 53 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங்களும், 4 உற்பத்திக் கூடங்களும் இத்துறையின்கீழ் துவக்கப்பட்டுள்ளன. பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் ரூ.30 உதவித் தொகையாகப் பெறுவதோடு பின்னர் வேலை வாய்ப்பினையும் பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்நிலையங்களில் 900 மகளிர் பயிற்றுவிக்கப்படுகின்ற

னர். இதில் 4 பயிற்சிக்கூடங்கள் பழங்குடிப் பகுதிகளில் மகளிர்க்காக ஆரம்பிக்கப்பட்டு அத்திப்பட்டு (வட ஆர்க்காடு), கொல்லி மலை, கல்ராயன் மலை மற்றும் ஏர்க்காடு (சேலம்) ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

நவீன துறைகளில் மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக 'மகளிர் வர்த்தக வளர்ச்சித் திட்டம்' சென்னை ஐ.ஐ.டி. யின் ஊரகவளர்ச்சிமையம் உதவியோடு துவக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 100 ஊரக மகளிர் நவீன துறைகளின் மின்னணு, இரசாயன, சோப்புப் பொருட்கள், ஸ்கிரீன் பிரிண்டிங் முதலிய துறைகளில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பினையும் பெறுகின்றனர். இதற்காக 1984-85ல் ரூ. 11.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**சேவை இல்லங்கள்**

சமுதாய அமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் நலிந்து கிடக்கும் மகளிருக்கு, குறிப்பாக 18-40 வயது வரையுள்ள விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்குச் சமுதாயத் தகுதி மற்றும் பாதுகாப்பினையும் வேலை வாய்ப்பினையும் நல்கும் பொருட்டு இத்துறையின் கீழ், தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இம்மகளிருக்கு 8—10 வகுப்புவரை கல்வி அளிப்பதோடுகூட, தொழில் பயிற்சியும், வணிகக் கல்விப் பயிற்சியும் இக்கல்வி இல்லங்களில் அளிக்கப்படுகிறது. இவர்கள் அரசாங்கத் தேர்வுகளுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இவ்வில்லத்தில் சேரும் பெண்களின் குழந்தைகள் மூன்றாண்டுகளுக்குப் பராமரிக்கப்பட்டு அவர்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை கல்வியும் அளிக்கப்படுகின்றது.

**பணிபுரியும் மகளிர் விடுதி**

பணிபுரியும் மகளிர்க்கான விடுதிகள் தமிழக அரசினால் 285 பெண்களுக்குத் தங்கும் வசதியுடன் சென்னை (2), திருச்சி, மதுரை, ஹோசூர் மற்றும், தூத்துக்குடி ஆகிய 6 இடங்களில் செயல்படுகின்றன. இவ்விடுதிகள் நடத்துவதற்காக 1981-82 முதல் இவ்வாண்டு வரை ரூ. 12.34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய விடுதி கட்டடங்கள் கட்டும் தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு 75 சதவிகிதமும், தமிழக அரசு 15 சதவிகிதமும் நிதி உதவி அளிக்கிறது. மிகுதி 10 சதவிகிதம் செலவினைத் தனியார் துறை மேற்கொள்ள வேண்டும்.

**மகளிர் மன்றங்கள்**

சமூகநல மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களையும் பொருட்டு, கிராமப்புறப் பெண்களைக் கொண்ட தமிழகம் முழுவதிலும் 11,250 மகளிர் மன்றங்கள், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 வீதம் அமைக்கப்பட்டுள்ளன. சத்துணவு தயாரிக்கும் செயல்விளக்கம் அளித்தல், குழந்தைகள் கண்காட்சி நடத்துதல், கல்விச் சுற்றுலா செல்லுதல், புத்தகங்கள் வினியோகித்தல் ஆகியவை இம்மன்றங்களின் சிறப்புப் பணிகளாகும். 1983-84 வரையிலான இரண்டாண்டுகளுக்கு ரூ. 30.08 இலட்சங்கள் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்**

1978-79 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000க்கும் குறைவாக வருவாயுள்ள குடும்பத்திலுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் குறிப்புக் கையேடுகள் வழங்கும் திட்டம் அமலில் உள்ளது. இதுவரை 17,061 குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1.01 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படுகிறது.

ரூ. 3,000-க்குக்கீழ் ஆண்டு வருமானம் உள்ள குடும்பத்தில் உள்ள ஆதரவற்ற விதவைகள் தங்கள் பெண்களுக்கு மணம் முடிக்கப்படும் இன்னல்களைக் கருத்திற்கொண்டு, விதவைகளில் 18-30 வயதுவரையுள்ள பெண்களுக்குத் தமிழக அரசு திருமண நிதியுதவி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 1,000 பேருக்கு ரூபாய் 1000 வீதம் உதவி வழங்க ரூ. 10 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

20 முதல் 40 வயது வரையிலுள்ள விதவைகள், ஆதரவற்றோர், கணவரால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் ஏழை எளியோர், உடல் ஊனமுற்றோர் போன்ற பெண்கள் மற்றும் ஆண்களுக்குத் தையல் தொழில் தெரிந்தவர்களாயிருந்தால் அவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு வரை 9,300 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**விதவை மறுவாழ்வுத் திட்டம்**

1975-76-ல் இத்திட்டம் விதவைகளுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காகத் துவக்கப்பட்டதாகும். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு மறுமணம் புரிந்த தம்பதியருக்குத் தேசீயச் சான்றிதழ் ஒன்று, ரூ. 5,000 வரை சேமிப்பில் இருக்கும் வகையில் வழங்கப்படுகிறது. இது கணவனை இழந்த ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டுமே பொருந்தும். இதுவரை 1094 தம்பதிகள் இந்த ஊக்கத் தொகையினைப் பெற்றுள்ளனர்.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், செறிவு நிறைந்த பணிகளை அவர்களது வளர்ச்சியின் முக்கியமான நெருக்கடியான நிலையில் ஒருங்கிணைந்த வழியில் வழங்குகின்ற அளவில் உருவாக்கப்பட்டுள்ளது, இத்திட்டம் குழந்தை பிறப்பதற்கு முன்னாலுள்ள நிலையிலிருந்து 6 வயது வரை கவனம் செலுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்திலும் குழந்தைகள் நல நிலையங்கள் 100 உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 100பேர் பயனடைகின்றனர்

**தாய்சேய் நலத் திட்டம்**

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தாய்சேய் நலத் திட்டத்தின்கீழ் சத்துணவு அளித்தல், சுகாதாரப் பணிகள், சுகாதார மற்றும் சத்துணவுக் கல்வி ஆகிய செறிவு நிறைந்த பணிகள் 6 மாதம் முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் அளிக்கப்படுகின்றன. மேற்படி நலிவுற்ற பிரிவினருக்கும் பயனளிக்கக்கூடிய 135 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்காக இதுவரை ரூ. 44.45 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்**

உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் குறிக்கோள் மக்கள் நலம், ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் வகையில் 6-36 மாதங்களுக்குட்பட்ட சத்துணவுதேவையான நிலையிலுள்ள குழந்தைகளின் முறையான தீவிரக் கண்காணிப்புக்காக அரசு எடுத்து வரும் முயற்சிகளை மேலும் திறன் உடையனவாக்கி அம்முயற்சிகளின் பயனை அதிகப்படுத்துவதாகும். இத்திட்டத்தின்கீழ் குழந்தைகள் எடை பார்க்கப்பட்டு, ஊட்டச்சத்து குறைவாயுள்ள குழந்தைகள் மற்றும்தாய்மார்களுக்கும் துணை ஊட்ட உணவு அளிக்கப்படுகிறது. வைட்டமின் 'ஏ' திரவமும், வயிற்றுப் பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகிறது. 1980 முதல் செயல்பட்டு வரும் இத்திட்டம் இதுவரை ஐந்து கட்டங்களில் மதுரை, முகவை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆர்க்காடு மற்றும் செங்கை மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 55.78 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் திட்டம் :**

ஆதரவற்ற குழந்தைகளையும் பராமரிக்கும் வண்ணம் குடில் முறையில் குழந்தைகளை வளர்க்கும் திட்டம் 1979-ல் அமல்படுத்தப்பட்டது. இதன் கீழ் இவர்களுக்கு உணவு, உறைவிடம், உடை மருத்துவ வசதி முதலியவையும் வழங்கப்படும். அரசின் பங்காக இத்தகு திட்டங்களை நடத்தும் தனியார் நிறுவனங்களுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்திற்கு 131 தனியார் நிறுவனங்களில், 9,235 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். 1980ல்இத்திட்டத்திற்கு நிதி உதவியாக ரூபாய் 255.86 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.






5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற குழந்தைகளைக் கொண்ட 4 ஆதரவற்றோர் இல்லங்கள் சென்னை, மதுரை, கன்னியாகுமரி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் அரசினரால் இத்துறையின் கீழ் நடத்தப்படுகின்றன.

**இல்லம் ஒன்றுக்கு 250 குழந்தைகள் விதம்** நாலாண்டுகளில் 3358 குழந்தைகள் இவ்வில்லங்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

**ஊனமுற்றோர் நலம்**

ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பினைக் கொண்ட ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. நற்பேறற்ற இப்பிரிவினைச் சமூகத்தின் ஒரு பிரிவாக ஒருங்கிணைப்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தொடர்ந்து பெருமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**ஊனமுற்றோர் கல்வி**

ஊனமுற்றோர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும் அவர்கள் தம் முயற்சியாலேயே வாழ்வினை மேற்கொள்வதற்குச் சிறப்புக் கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன.

1980-81ஆம் ஆண்டில் 41 ஆக இருந்த இப்பள்ளிகளின் எண்ணிக்கை தற்போது 51ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 26 அரசுப்பள்ளிகள் மற்றும் 25 அரசு உதவி பெறும் பள்ளிகள். இலவச விடுதி வசதி கொண்ட இப்பள்ளிகளின் மூலம் சுமார் 4,500 ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 51 சிறப்புப் பள்ளிகளில், 21 பார்வையற்றோர்க்கான பள்ளிகளும், 21 காதுகேளாதோர்க்கான பள்ளிகளும், 3 மனவளர்ச்சி குன்றியோர்க்கும், 2 உடல் ஊனமுற்றோர்க்கும், 3 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்க்கென ஒரு

# சிபாரிசுப்படி அடியுரமிட

# விஜய்

# 17-17-17




நெல் பயிருக்குத் தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களையும் ஒரே சீரான அளவில் அடியுரமாக இடவேண்டும் என்று விவசாய இலாகா சிபாரிசு செய்துள்ளது. இவ்வாறு சிபாரிசுப்படி அடியுரமிடச் சிறந்தது, விஜய் 17-17-17. இதை இங்கு தெளிவாகக் காணலாம்.

| ஏக்கருக்கு | தேவைப்படும் சத்துக்களின் அளவு (கிலோ) | | | விஜய் உரத்தின் அளவு |
|---|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் | |
| அடியுரம் | 15 | 15 | 15 | விஜய் 17-17-17 90 கிலோ |
| மேலுரம் | 15 | — | — | விஜய் யூரியா 35 கிலோ |

5 கிலோ யூரியாவுக்கு ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

நெல் பயிர் சாகுபடி பற்றிய புத்தகத்தைப் பெற, எங்களுக்கு எழுதுங்கள்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

MFL-1435

## சமச்சீர் உரமிட

## விஜய்



பள்ளியும், உள்ளன.

1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற சிறுவர்களுக்கு ஆண்டுக்குரூ.25 வீதம் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கென உதவித் தொகை இதுவரை 25 ஆயிரம் பேர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, 9ஆம் வகுப்பு முதல் பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் தொழில்நுட்ப உள்துறைப் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் அவர்கள் படிப்பு, தொழிற் பயிற்சிக்குத் தகுந்தவாறு மாதம் ரூ. 60முதல் ரூ. 170 வரை மத்திய அரசினரால் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1981 முதல் 1984 வரை 28,101 மாணவர்கள் உதவித் தொகை பெற்றுள்ளார்கள். இதற்கென ரூ. 31.29 இலட்சங்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான அரசு இல்லம் சென்னையில் குரோம்பேட்டையில் 25 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான உணவு, உறைவிட வசதிகளுடன், அவர்களுக்கென மருத்துவ வசதி மற்றும் சிறப்புக்கல்வியும் அளிக்கப்படுகிறது.

ஊன முற்றோரின் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கென அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் நிலையங்களில் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் முட்டுக்காடு என்னுமிடத்தில் (செங்கல்பட்டு) ரூ. 30 இலட்சம் செலவில் 1975 ஜூன் மாதம் துவக்கப்பட்டது. இங்கு உடல் ஊனமுற்றோர்க்கு உருக்குப் பொருட்களால் ஆன முச்சக்கர வண்டி, பெட்டிக் கடைகள் முதலியன செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 77 உடல் ஊனமுற்றோர் பயிற்சி பெற்றுள்ளனர். இதற்கென ரூ. 60.97 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

1981-83 ஆண்டுகளில் சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், பொருத்துபவர் துறையிலும், மதுரை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் மின் கம்பியாள் துறையிலும், காது கேளாத மாணவர் அடங்கிய குழு பயிற்சி பெற்றது. 2 ஆண்டுகளில் 25 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு:.**

ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிப்பதில் ஒரு பகுதியாக அவர்களுக்குத் தொலைபேசி நிலையம் அமைத்து சென்னைத் தொலைபேசி பொதுமேலாளர் மூலமாகவும், சென்னை மாநகராட்சி மூலமாகவும் அதற்குரிய இடத்தைப் பெற்று உதவி அளிக்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 20 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் (4 சதவிகிதம்) கடனுதவி பெற்று மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பெட்டிக் கடைகள் அமைக்க பெட்டிக் கடையின்மதிப்பினைப்பொறுத்து ரூ. 250—500 முதல் அரசு மானிமாக அளிக்கிறது.

1979-80-ஆம் ஆண்டில் அரசு 'சிறப்புத் தொழில் பழகுவோர் திட்டம்' என்ற புதியதொரு திட்டத்தை ஊனமுற்றோர்க்காகத் துவக்கியது. இதன் மூலம் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர் பல்வேறு நிறுவனங்களில் பயிற்சியாளராக அமர்த்தப்பட்டு, மாதம் ரூ. 150 உதவித் தொகையும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிந்த பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் ஊனமுற்றோர் நிரந்தர ஊழியர்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். 1981-84ஆம் ஆண்டுகளில் 941 ஊனமுற்றோர் பயன் அடைந்துள்ளனர். அரசால் ரூ. 11.46 இலட்சங்கள் இதற்கென செலவிடப்பட்டுள்ளன.

பார்வையற்ற மகளிர்க்காகச் சென்னையில் தங்கும் வசதியுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் 1978-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஆதரவற்ற ஏழையான 18-40 வயது வரைஉள்ளபார்வையற்ற பெண்களுக்குச் சாக்கட்டி செய்தல் மற்றும் நெசவுத்தொழிலில் ஆறுமாதக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியின் போது மாதம் ரூ. 50 உதவித் தொகையாக அளிக்கப்பட்டு, பயிற்சி முடித்த பின்னர் அந்நிறுவனத்திலேயே தினமும் அவர்கள் செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 127 பார்வையற்ற பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

வட்டார மறுவாழ்வு மையங்கள் சென்னை, தஞ்சை, மதுரை, கோவை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் உள்ளன. 1980ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வட்டார மறுவாழ்வு மையமும் மாதம் 100 ஊனமுற்றோர்க்கு உதவி புரிகிறது. இதுவரை ஐந்து வட்டார மையங்களில் 3,190 ஊனமுற்றோர் உதவி பெற்றுள்ளனர். ரூ. 32.97 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

பார்வையற்றோருக்கான பயிற்சி - நெசவுக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 82 பார்வையற்றோர், பூந்தமல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் பயிற்சி பெற்றுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் தேவைப்படும் விரிப்புகள், துண்டுகள் முதலியவற்றைச் செய்கின்றனர். இப்பயிற்சி 4 பிரிவுகளாக 6 மாதக் காலம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 100 அளிக்கப்படுகிறது.

**வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்கான சிறு தொழில் பிரிவுகள் அமைக்கும் பொருட்டு வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்குச் சமமான ஆனால் ஒரு நபருக்கு ரூ. 1,000க்கு மேற்படாமல் அரசு மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 11,231 ஊனமுற்றோர் பயனடைந்தனர்.**



**ஊனமுற்றோர்க்கு அவர்களது ஊனத்தின் தன்மையைப் பொறுத்து காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன.**

**ஏழை உடல் ஊனமுற்றோர்க்கு இலவசமாக முச்சக்கர வண்டிகள், மாத வருமானம் ரூ. 500-க்கு மேற்படாமல் இருக்கும் பெற்றோர்களுடைய காது கேளாத குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1980-81 முதல் 1983-84 வரை 1017 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

உடலின் கீழ்ப் பகுதி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இலவசமாகச் சக்கர நாற்காலிகள். ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கெனத் தனியார் நிறுவனங்களுக்கு மானியத் தொகை ஆகியவைகளும் சமூகநலத் துறையால் வழங்கப்படுகின்றன.





# ஓங்கி வரும் கதர் கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்**

**திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி**

கதர் கிராமத் தொழில்கள் குறைந்த மூலதனத்தில் வேலை வாய்ப்பினைக் கிராமப் புறங்களில் அதிக அளவில் ஏற்படுத்தித் தருவதனால், கதர் கிராமத் தொழில்களின் மூலம் தமிழகத்தில் நிலவி வரும் வேலையின்மைப் பிரச்சினைக்கு முடிவு காண முடிந்தது. அதனாலேயே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கதர் கிராமத் தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

கதர் கிராமத் தொழில்கள் பெருத்து ஓங்க ஏதுவாக இருக்கும் பொருட்டு அரசு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை 1978-ல் மாற்றி அமைத்தது. அதன்படி அரசுத்துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்களுக்குத் தேவையான பண்டகப் பொருட்களைக் கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்தோ அல்லது அதனிடமிருந்து நிதியுதவி பெற்ற நிறுவனத்திடமிருந்தோ தான் கொள்முதல் செய்ய வேண்டும் என ஆணையிட்டுள்ளது.

**நூற்பு**

அரசு அளித்து வரும் ஊக்கத்தினால் கடந்த 4 ஆண்டுகளில் 190 கிராமிய நூற்புக்கூடங்கள் புதியதாகத் துவக்கப்பட்டன. தற்போது 518 கிராமிய நூற்புக் கூடங்கள் செயல்படுகின்றன. இக்கூடம் ஒவ்வொன்றிலும் முப்பது பெண்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. இந்நிலையம் ஒன்று அமைக்க, ஏறத்தாழ ரூபாய் ஒரு இலட்சம் செலவாகும். இவர்களுக்கான கூலி 1-4-'84-ல் திருத்தி அமைக்கப் பெற்றது. இதனால் ஒவ்வொரு நூற்பாளரும் நாளொன்றுக்கு ரூ. 5.75 முதல் ரூ. 7 வரை ஊதியமாகப் பெறுவர்.

இடர்ப்பாடின்றி நூற்பாளர்கள் நூற்க ஏதுவாக இருக்கும் பொருட்டும், அதன் மூலம், நூலின் தரத்தையும் துணியின் தரத்தையும் உயர்த்த ஏதுவாக இருக்கும் பொருட்டும் பஞ்சுடைத்துப் பட்டை போடும் கருவிகளை நிறுவிட அரசு நிதி உதவி அளித்துள்ளது.

**கதர் உற்பத்தி**

1979-80-ல் ரூபாய் 409.71 லட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1983-84ஆம் ஆண்டில் ரூ. 805 இலட்சமாக உயர்ந்துள்ளது.

வாரியத்தின்கீழ் உற்பத்தியாகும் பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு. 1979-80-ல் ரூபாய் 109.78 இலட்சம் மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்யப்பட்டது; 1983-84-ல் ரூபாய் 270.86 இலட்சமாக உயர்ந்துள்ளது.

பாலியஸ்டர் வகைத் துணி உற்பத்தியையும் வாரியம் மேற்கொண்டுள்ளது. இதற்கான பட்டை போடும் அலகு ஒன்றினைச் சேலம் ஆட்டையாம்பட்டியில் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கதர் விற்பனை**

மாநில அரசு பெருந் தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியவர்களது பிறந்தநாள் விழாக்களையொட்டி ஆண்டுதோறும் 10 விழுக்காடு 30 நாட்களுக்கும், மற்றும் விழாக் காலங்களையொட்டி 5 விழுக்காடு 60 நாட்களுக்கும் கதர் விற்பனையில் தள்ளுபடி அளித்து வந்தது. விழாக்காலங்களுக்கு வழங்கும் தள்ளுபடியை 5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக 1983-84-ல் அரசு உயர்த்தியுள்ளது. மொத்தத்தில் 1983-84 முதல், 10 விழுக்காடு தள்ளுபடியை 90 நாட்களுக்கு இவ்வரசு அனுமதித்துள்ளது. அம்மாதிரியே பாலியஸ்டர் துணி வகைகளை விற்பனை செய்ய ஏதுவாக 10 விழுக்காடு 60 நாட்களுக்குத் தள்ளுபடி அளித்து வருகிறது.

கதர் விற்பனைக்கென 155 கதர் அங்காடிகள் தமிழகமெங்கும் இயங்கி வருகின்றன. 1979-80-ல் ரூபாய் 615.24 இலட்சமாக இருந்த கதர் விற்பனை, 1983-84-ல் ரூ. 1078.70 இலட்சமாக உயர்ந்துள்ளது.

**கிராமத் தொழில்கள்**

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் கிராமத் தொழில்கள் என வகைப் படுத்தப்பட்ட 26 தொழில்களில் கீழ்க்கண்ட 16 கிராமத் தொழில்களையும், கதர்த் தொழிலையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது—

பனைத்தொழில், கைக்குத்தலரிசி மற்றும் தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல்முறைப்படுத்துதல், தோல் தொழில், செக்கு எண்ணெய், மட்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்) சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்) தேனீ வளர்த்தல், தச்சு கருமார் தொழில், பழங்களைப்பதப் படுத்தலும் பாதுகாத்தலும், கையால் செய்யப்பட்ட காகிதம், வெல்லம் மற்றும் சுந்தசாரி சர்க்கரை,

சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு, நார்த் தொழில், பிரம்பு, மூங்கில், பாலிவஸ்திரா, லோக் வஸ்திரா.

தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின்வரும் தொழில்களையும் வாரியம் ஊக்குவித்து வளர்த்து வருகிறது:

ஊதுபத்தி, சிகைக்காய்த்தூள், பற்பொடி, நீலகிரித் தைலம்.

**கிராமத் தொழில் முன்னேற்ற விவரங்கள்**

கிராமத் தொழில்களை வாரியம் தனது 187 அலகுகள் மூலமும், 1287 தொழில் கூடங்கள் மூலமும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 41,476 கைவினைஞர்கள் தத்தம் தொழில்களைச் சிறப்புற ஏற்று நடத்திட ஏதுவாக இருக்கும் பொருட்டு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.



**பனைத் தொழில்கள்**

பனைப் பொருட்கள் கூடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைத்திடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இதுகாறும் 8 மாவட்டங்களில் பனைப் பொருள் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பனைமரம் ஏறுவோர் விபத்தில் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 5,000 நிதி உதவி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.




பனஞ்சினியைப் பயன்படுத்தி ''பாம்கோலா'' ''பாம்டா'' பானங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. டெல்லியில் இவைகளை விற்பனை செய்வதற்காக ''ஒக்லா'' தொழிற்பேட்டையில் ஒரு அலகினை வாரியம் துவக்கியுள்ளது. பனைப் பொருட்களில் குறிப்பாக, பனந்தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பதநீரைப் பாலிதின் பைகளில் நிரப்பித் தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.

**சோப்புத் தொழில்**

வீணாகப்போகும் உண்ணா எண்ணெய் வகைகளிலிருந்து சலவை சோப்பு மற்றும் குளியலுக்கு உகந்த '' குறிஞ்சி '' சோப்பு, 'சந்தனம்' 'மல்லிகை' மணங்களுடன் ஆயுர்வேத முறையிலும் தயாரிக்கப்படுகிறது.

**கிராமிய எண்ணெய்**

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. அவற்றை எண்ணெய் பிழிய ஏதுவாக வாரியம் இதுவரை 3178 மின்விசைச் செக்குகளைக் கைவினைஞர்களுக்கு விநியோகம் செய்துள்ளது. நடப்பாண்டில் மேற்கொண்டு 300 மின்விசைச் செக்குகள் புகுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தோல் தொழில்**

காலணி தயாரிக்கும் கைவினைஞர்கள் நலனுக்காக 'பங்கு'கள் அமைத்துக் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு கைவினைஞருக்கும் ஒரு 'பங்கு', ஒரு தையல் இயந்திரம் ரூ. 7,000 மதிப்பில் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் 500 பேர்களுக்குப் 'பங்குகள்' விநியோகிக்கப்பட்டன. மேற்கொண்டு 500 பங்குகள் விநியோகிக்கப்பட உள்ளன.

**கைக் காகிதம்**

கைமுறைக் காகிதத்தில் வீணாகப்போகும் குப்பை, கூளங்களைப் பயன்படுத்தி, பயனுள்ள காகிதம் தயாரிக்கப்படுகிறது. வாரியம் இதுகாறும் 10 கைமுறைக் காகித அலகுகளைத் துவக்கியுள்ளது. மேலும் 23 அலகுகள் துவக்கப்படும்.

**தச்சுத் தொழில்**

தச்சுத் தொழிலை ஊக்குவிக்கத் திருவொற்றியூரில் ஒரு மர அறுவை ஆலையை நிறுவிட அரசு நிதி உதவி அளித்துள்ளது.

**கைக்குத்தலரிசி**

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன், அவர்களில் சிலரை, ரொட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறது. இம்மாற்றுத் திட்டத்தை ஆதரிக்கும் வண்ணம் தமிழக அரசு அனைத்து மருத்துவமனைகளுக்கும், வாரிய மையங்களில் தயாரிக்கும் ரொட்டியையே வாங்க வேண்டும் என ஆணையிட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்**

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறப்பு மேம்பாட்டுத் திட்டம், கிளஸ்டர் வளர்ச்சித் திட்டம்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மேம்பாடடையச் செய்யவும் அவர்களின் நிலையை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தவும், தமிழக அரசு மிகப்பெரிய அளவில் செயல்படுகிறது. இப்பெரு முயற்சியில் கதர் கிராமத் தொழில்களின் மூலம் ஒரு பெரும் பணியினை ஏற்று நடத்திட வாரியம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

**தமிழ்நாடு மாநிலம் ரூபாய் 24·45 கோடி கதர் உற்பத்தி செய்து, அனைத்து இந்தியாவிலேயே உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்து, இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.**

**கிராமத் தொழில்கள் உற்பத்தியில் ரூ. 91.65 கோடி மதிப்புள்ளவற்றை உற்பத்தி செய்து அனைத்து இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கின்றது.**

**அனைத்து இந்தியாவில் 34.34 இலட்சம் மக்களுக்குக் கதர் கிராமத் தொழில்களின் மூலம் வேலை வாய்ப்பளிக்கப்பட்டதில், தமிழகத்தில் மட்டும் 5.82 இலட்சம் மக்கள் இத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.**

இவ்வாறாகத் தமிழகத்தில் கதர் கிராமத் தொழில்கள் ஒவ்வொரு பிரிவிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளன.

தந்தி : கன்னியாமில்க் தொலைபேசி: 3356

# கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

## (வரையறுக்கப்பட்டது) எண். 2946,

## நாகர்கோவில்-629 003.

| | | | |
|---|---|---|---|
| பதிவு நாள் | | - 25-1-1949 | |
| உறுப்பினர்கள் மற்றும் பங்குத் தொகை | | - 31-3-1983 | |
| கூட்டுறவு நிறுவனம் | - 121 | | - ரூ 97,620-00 |
| தனி நபர் | - 205 | | - ரூ 209-00 |
| அரசு | - 1 | | - ரூ 3,50,000-00 |
| பால் உற்பத்தி (தின சராசரி) 1983-84 | | - 11,229.000 | (லிட்டர்களில்) |
| பால் விற்பனை ,, | | - 11,229.000 | ,, |
| பால் உற்பத்தி ஏப்ரல் 1984 (தின சராசரி) | | - 11,464.000 | ,, |
| பால் விற்பனை ,, | | - 11,333.000 | ,, |
| நிகர இலாபம் | 1981-82 | - ரூ. 25,971.023 | |
| | 1981-82 | - ரூ. 58,537.48 | |
| | 1983-84 | ரூ. 3,30, 862.07 (தோராயமாக) | |

நகரின் முக்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள எங்களது கன்னியா மில்க் பாரின் வாயிலாக ஒன்றியத் தயாரிப்புகளாகிய நறுமணப்பால், பால்பேடா, பாலித்தின் பைகளில் அடைக்கப்பட்ட பதனிடப்பட்ட பசுவின் பால் மற்றும் சுடுபால், காபி, ரோஸ்மில்க், நெய் ஆகியவைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

சு. இராமநாத பிள்ளை, பி.காம்.,
(நிர்வாக இயக்குநர்.)

எல். கே. திரிபாதி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
பெருந்தலைவர்





# நிறைந்து வரும் நீர்ப் பாசன வளம்

மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

## திரு. யா. சை. மு. யூசுப்

நம் தமிழ்நாடு ஊற்றும் மழையும் வாய்ந்த மலைகளையும் ஓடும் ஆறுகளையும் ஓரளவிற்குப் பெற்றிருப்பினும், இன்றைய நிலையில் தமிழ்நாடு நீர்வளம் குன்றிய மாநிலம் என்றே கூற வேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நீர்ப் பாசனத் திட்டங்கள் குறைந்த செலவில், அதாவது ஒரு ஏக்கருக்குப் புதிதாக நீர்ப்பாசன வசதியளிக்க ரூ. 900க்குள் செலவாயிற்று. ஆனால் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் இச்செலவு தொகை அதிகமாகி, இப்பொழுது ஒரு ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க ரூ. 15,000 ஆக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம், விலைவாசி உயர்வு மட்டுமன்று குறைந்த செலவில் மிகுந்த பயனளிக்கத் தக்க திட்டங்கள் படிப்படியாக ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில், அதிக செலவில் குறைந்த பயன் தரக்கூடிய திட்டங்க்ள்தான் எஞ்சியுள்ளன. இருப்பினும், பாசனப் பரப்பை மென்மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும், குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களது இன்னல்களை நீக்க, குறைந்த அளவு பாசன வசதியாவது அளிக்க வேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பு 130 லட்சம் எக்டேர் ஆகும். இதில் நீர்த்தேக்கத் திட்டங்கள் மூலம் 9.3 லட்சம் எக்டேர் பரப்பளவும், சுமார் 39,200 ஏரி குளங்கள் மூலம் 9.1 லட்சம் எக்டேர் பரப்பளவும், தனியார் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஊற்றுக் கால்வாய்கள் மூலம் சுமார் 10 இலட்சம் எக்டேர் பரப்பளவும் பாசன வசதியைப் பெறுகின்றன. ஆக 28.4 இலட்சம் எக்டேர் மொத்த பாசனப் பரப்பில் நாடு விடுதலையடைவதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட 23 பழைய பாசன அமைப்புகள் மூலம் 7.9 இலட்சம் எக்டேர் பரப்பு பாசன வசதி பெற்று வருகின்றது.

நாடு விடுதலையடைந்ததும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மூக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் பல நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதுவரை 5 ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து தற்சமயம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் (1980-85) கடைசிக் கட்டத்தில் உள்ளோம். முதல் ஐந்தாண்டுத் திட்டங்களில் (1979-80) முடிய 38 நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் 26 நீர்த்தேக்கத் திட்டங்கள் அடங்கும்.

இத்திட்டங்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பரவி யிருக்கின்றன. இவற்றால் சுமார் 3 இலட்சம் எக்டேர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

6வது ஐந்தாண்டுத்திட்ட காலம் (1980-85) நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் நான்காவதாண்டு முற்றுப் பெறும் தறுவாயிலுள்ளோம். இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசன திட்டங்கள் வாயிலாக 66,000 எக்டேர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்குக் கூடுதல் நீர்வளம் ஏற்படுத்த ரூ. 149.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் இதே திட்ட காலத்தில் ரூ. 12 கோடி முதலீட்டில் 12,000 எக்டேர் புதிய நிலங்களுக்குக் கூடுதல் பாசனவசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1980 ஜூன் திங்கள் முதல் 1983 மே திங்கள் வரையிலான கடந்த மூன்றாண்டுகளில் ஒரு பெரிய பாசனத் திட்டமான பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டத்தின் கடைசிப் பகுதியான கீழ்நீராறு அணையும் குடைவரையும் ஆயக்கட்டு விரிவாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியும் மற்றும் 5 நடுத்தரத் திட்டங்களும் முடிக்கப்பட்டு 30,460 எக்டேர் புதிய நிலத்திற்கு பாசன வசதியும் 2370 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதி பெறும் வகையில் நீர் வளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மூன்றாண்டுக் காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 69.23 கோடி செலவிடப்பட்டுள்ளது. சிறுபாசனத் திட்டத்தின் மூலம் இம்மூன்றாண்டுக் காலத்தில் 6196 எக்டேர் புதிய நிலங்கட்கு ரூ. 7.40 கோடி செலவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட 6வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகள் திட்டக் கால முடிவில் (1985ல்) உறுதியாகச் சாதிக்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நடப்பிலுள்ள ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதுவரை முடிவுற்ற நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பற்றிய விவரம் பின் வருமாறு:

வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்கள் பயனடையும் சாத்தனூர் வலது புறக்கால்வாய் திட்டம்.

தருமபுரி மாவட்டத்தில் தும்பலஹள்ளி மற்றும் பாம்பாறு நீர்த்தேக்கத் திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உப்பாறு நீர்த்தேக்கத்திட்டம்.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் வட்டம் ஆகிய இடங்களில் உள்ள மிகவும் வறண்ட பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு முந்தைய திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் ஆயக்கட்டான 1,01,250 எக்டேர் நிலப்பரப்போடு, மேலும் 56,660 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி விரிவுபடுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இநத ஆயக்கட்டை விரிவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதி முடிக்கப்பட்டு மீதி வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டத்தில் பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே 11.58 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் திட்டத்திற்குத் தமிழக அரசால் 1983ல் ஒப்புதலளிக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 381 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 1400 எக்டேர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பின்னர் 1977ல் உலக வங்கியின் உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரிய திட்டமான பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டமும், தஞ்சாவூர் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டமும் மற்றும் 22 நடுத்தரப் பாசனத் திட்டங்களும் தற்சமயம் செயலாக்கத்தில் உள்ளன.

தஞ்சாவூர் டெல்டாப் பாசனப் பகுதியை நவீனப்படுத்துவதற்காக 1980-81 முதல் அரசு பின்வரும் தொகைகளைச் செலவிட்டுள்ளது.

1980-81ல் ரூ. 219.45 இலட்சம், 1981-82ல் ரூ.109.61 இலட்சம், 1982-83ல் ரூ. 320.86 இலட்சம், 1983-84ல் (நிதி ஒதுக்கீடு) ரூ. 474.20 இலட்சம்; 1984-85 (நிதி ஒதுக்கீடு) ரூபாய் 490.00 இலட்சம்.

ரூ. 366.60 கோடி செலவில், காவிரி டெல்டாவை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக 26.3.1983 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிறுபாசனப் பிரிவில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம் வருமாறு:

சிறப்பு சிறுபாசனம் மற்றும் ஏரி தூர்வாரி புனரமைப்புத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம், வறட்சிப் பகுதி மீட்புப்பணிகள் திட்டம், கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்.

சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1983-84 வரை ரூ. 993 லட்சம் செலவிடப்பட்டது. 8762 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில் 108 திட்டங்கள் முடிக்கப்பட்டன.



ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1400 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ. 29.46 லட்சம் செலவில், 39 பணிகள் நிறைவேற்றப் பட்டன.

மலைப்பகுதி முன்னேற்றத் திட்டத்தின் கீழ், ரூ. 23 இலட்சம் செலவில் 45 பணிகள் முடிக்கப் பட்டன். இதனால் சுமார் 260 எக்டேர் நிலம் பயன்பெறும்.

வறட்சிப்பகுதி மீட்புப்பணிகள் திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்டத்தில், ரூ. 137.69 லட்சம் செலவில், 1092 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில் 14 திட்டங்கள் முடிக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 42.14 லட்சம் செலவில், 185 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில், 5 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடல் அரிப்புத் திட்டப்பணிகள் சென்னையிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் நடைபெற்று வருகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 32 பணிகளுக்கும், சென்னையில் 4 பணிகளுக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒப்புதல் அளித்தது. இவற்றில், கன்னியாகுமரியில் 8 பணிகளும், சென்னையில் 2 பணிகளும், நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் இந்தக் காலத்தில் ரூ. 258.55 இலட்சம் செலவிடப்பட்டது. 6.52 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள சிறு பாசன ஏற்பாடுகளை நவீனப் படுத்துவதற்கு மத்திய அரசின் மூலம், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றி கண்டுள்ளது. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் முறையால் தமிழகத்தில் 11 லட்சத்திற்கும் மேலான கிணறுகளின் மூலம் 70 லட்சம் ஏக்கர், அடி நீர் பெறப்படுகிறது.

1970ஆம் ஆண்டில் பொதுப் பணித்துறையில் நிலத்தடி நீர் ஆய்வுக்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது, இப்பிரிவின் நோக்கம் தமிழகம் முழுவதற்குமான நிலத்தடி நீர்வளத்தை அறிவியல் நோக்கில் ஆய்ந்து கணக்கிடுவதேயாகும்!

1978ம் ஆண்டு ஜூலைத்திங்கள் இறுதிவரை ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு நிலநீர் ஆய்வுப்பணி நடத்தப்பட்டது. 1978ஆம்ஆண்டு ஜூலைத்திங்கள் முதல் சிறு ஆற்றுப் படுகை வாரியாக கிராமாந்தர நிலநீர் ஆய்வுப்பணி தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கிராமாந்தர ஆய்வுப்பணிகள் மூலம் பல்வேறு களப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் 13 இடங்களில் சிற்றாற்றுப் படுகைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெய்யும் மழையளவு, நீர் ஆவியாகும் தன்மை, பூமியால் நீர் உறிஞ்சப்படும் அளவு மற்றும் மேற்பரப்பில் வழிந்தோடும் நீரின் அளவு இவைகளைக் கணக்கிடும் ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழகம் முழுவதற்குமான விண்வெளி புகைப்படங்களைக் கொண்டும், விண்வெளிக்கோள்களின் மூலம் கிடைக்கப்பெற்ற படங்களைக் கொண்டும், தமிழகத்தின் நிலவியல் தன்மை, நிலப்புறத் தோற்றங்கள், நில உபயோகங்கள், மற்றும் இதர நிலநீர்சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வரைபடங்களைக் கொண்டு நிலநீர் வளமுள்ள இடங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

மேலும் நீரியல் தன்மைகளை அறியும்பொருட்டு இறவை சோதனைகள் நடத்தப்படுகின்றன. இவையன்றி, தமிழகத்தில் சுமார் 1921 கிணறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகளின் நீர் மட்ட ஏற்ற இறக்கங்களை அறிந்து ஓர் இடத்தில் நிலநீர் மட்ட அளவு கணக்கிடப்படுகிறது.

பெருகி வரும் தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக மேற்பரப்பு நீரையும் நிலநீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம், கீழ்க்கண்ட முக்கிய ஆற்றுப்பாசனப் பகுதிகளில் செயலாற்றப்படுகிறது.

கீழ் பவானி பாசனப்பகுதி. கிருஷ்ணகிரி அணைக்கட்டு பாசனப் பகுதி.

மேற்குறித்த ஆய்வுப் பணிகள் மட்டுமின்றி 1981, 1983 ஆம் ஆண்டுகளில்தமிழகம் வறட்சியின்



பிடியில் சிக்கியபோது இத்துறை ஏரிப்படுகைகளில் ஆய்வு செய்து திறந்த வெளிக்கிணறுகள் வெட்டுவதற்காகப்பரிந்துரைவழங்கியது. மேலும் 1981ம் ஆண்டில் தோன்றிய வறட்சியைக் கட்டுப்படுத்துவதற்காக ரூ. 100 லட்சங்கள் செலவில் ஏரிப்படுகைகளில் திறந்தவெளிக்கிணறுகள் வெட்ட அரசு ஒப்புறுதி வழங்கியது. தொடர்ந்து 1983ம் ஆண்டுவறட்சிப் பணியின் கீழ் திறந்தவெளி கிணறுவெட்ட அரசு 300 லட்சங்கள் ஒதுக்கியது. 1981ஆம் ஆண்டு, வறட்சியின் போது 237 கிணறுகள் வெட்டப்பட்டன. 1983ஆம் ஆண்டு 555 கிணறுகள் வெட்டப்பட்டன.

தஞ்சாவூர் · காவிரி நதியின் கழிமுகப்பகுதியில் ரூ. 12லட்சம் செலவில் 36 குழாய்க்கிணறுகள் அமைத்து கோடைக் காலங்களிலும், காவிரி நீர் வழங்க முடியாத காலத்திலும் வேளாண்மைக்கு நீர்வழங்கும்பணியையும் இத்துறை புரிந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய தரை நீர் (Surface Water) வளம் பெரும்பகுதி பயன் படுத்தப்பட்டு விட்டது. பாசனம் மற்றும் வேறு பணிகளுக்கும், நிலநீரைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 1982 மார்ச் திங்களில் வறண்ட புஞ்சை நிலத்திற்குப்பாசன வசதி அளிக்கும் பொருட்டு, இவ்வரசு ரூ. 3 கோடி மூலதனத்துடன்,தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத்தை தோற்றுவித்தது. பாசன வசதி இல்லாத குறிப்பாக சிறிய நடுத்தர விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்து, அவற்றைச் சமுதாயக் கிணறுகள்ளாகப் பராமரித்து அவற்றின் மூலம் பாசன வசதி அளிப்பதுதான் இக்கழகத்தின் நோக்கம்.

தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகம், திட்டங்களை விவசாயிகளுக்காக நிறைவேற்றித் தருகிறது. இதற்குத் தேவையான நிதி உதவி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகளாலும் வழங்கப்படுகிறது.

# உயர்வு தரும்

# ஊரகத் தொழில்கள்

தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த சிறுதொழில் பிரிவுகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அவைகளைப் பொருளாதார ரீதியில் தனித்தியங்கச் செய்வதற்காகத் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 1965ஆம் ஆண்டுநிறுவப்பட்டது.

தற்போது இந்நிறுவனத்தில் உற்பத்தித் தொழில் பிரிவுகள் 56 உள்ளன. அவை பின் வரும் வகையைச் சாரும்.

கட்டுமானப் பட்டறைகள், தளவாட அறைகள் - இணைந்த பிரிவுகள், பொறியியல் தொழில் பட்டறைகள், கட்டுமானப் பணிகள் வார்ப்படத் தொழில் பிரிவுகள், தச்சுத்தொழில் பிரிவுகள், தோல் பொருள் தயாரிப்புப்பிரிவுகள், சிறப்பு வகையிலான பல் வகைத் தொழில் பிரிவுகள்

'டான்சி' நிறுவனத்தில் பெரும் பாலான பிரிவுகள் அரசுத்துறைகளிடமிருந்தும் மற்றும் இரயில். மின்வாரியங்கள், தபால் தந்தித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் கேட்கின்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

1965-66ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் தொழில் பிரிவுகளின் உற்பத்தி மதிப்பு ரூ. 389 இலட்சமே ஆகும். இந்த உற்பத்தியின் மதிப்பு 1983-84ஆம் ஆண்டில் ரூ. 2300 இலட்சமாக உயர்ந்தது.

இத்தொழில் பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்த சில முக்கிய விவரங்கள் வருமாறு:

மேட்டூரிலுள்ள டான்சி கட்டுமான மற்றும் முலாம் பூச்சுத் தொழிற்சாலை, மின் வாரியங்கள், தபால் தந்தித்துறை மற்றும் இரயில்வேக்கு தேவைப்படும் மின் கடத்தும் கோபுரங்களைத் தயாரித்து வழங்குகின்றன.

டான்சி கருவிகள் மற்றும் பொறியியல் பிரிவுகள் ஆழ்கிணறு நீரேற்றுக் குழாய்களை உற்பத்தி செய்து, அவைகளை யூனிசெப் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு வழங்குகின்றன. இக்குழாய்கள் வறட்சி காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கப் பெரிதும் உதவியுள்ளன.

இராணிப்பேட்டையில் உள்ள டான்சி இயந்திரக் கருவிகள் பிரிவு, பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் இயந்திரக்கருவிகள்நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், மின்விசை இரும்பு அறுவை இயந்திரங்கள் மற்றும் துளையிடும் இயந்திரங்களையும் தயாரித்து வருகிறது.



**மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்**

**திரு இரா. அருணாசலம்**

விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல்பதனிடும் தொழிற்சாலை ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தப்பட்டதோல்தயாரித்துவருகிறது. விண்ணமங்கலத்திலுள்ள உரோமப் பதனிடும் தொழிற்சாலை ஆட்டு உரோமங்களை ஏற்றுமதி செய்கிறது. அண்மையில் மாதவரத்தில் அமைக்கப்பட்ட டானசி தோல் ஆடை தயாரிக்கும் பிரிவு முழுதும் ஏற்றுமதிக்கெனத் தோல்ஆடைகளைத் தயாரித்து வருகின்றது.

டான்சி பொறியியல் தொழிற் பிரிவுகள், தொழிற்கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், கிடங்குகள் போன்றவற்றிற்குத் தேவையானகட்டுமானங்களை உற்பத்தி செய்து நிறுவி வருகின்றன. மேலும் தண்ணீர்த் தொட்டிகள், நடை பாலங்கள், தள்ளுவண்டிகள் மற்றும் சிறு பெட்டிக்கடைகளையும் இப்பிரிவுகள் உற்பத்தி செய்து வருகின்றன.

தச்சுத் தொழில் பிரிவுகள் முக்கியமாக அரசுத் துறை மற்றும்



அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட சிறப்பு வகை மரச் சாமான்களை உற்பத்தி செய்கின்றன.

வார்ப்படத் தொழில் பிரிவுகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு இரும்பு வார்ப்படக் குழாய்களை உற்பத்தி செய்து வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

இரும்புப்பொருட்கள் புனைவுப் பிரிவுகள், தீப்பிடிக்காத மற்றும் திருடர்களால் உடைக்க முடியாத எஃகு பாதுகாப்புப் பெட்டகங்களை உற்பத்தி செய்து வருகின்றன. மேலும் இப்பிரிவுகள், ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்குத்தேவைப்படும் 'பானல் போர்டுகள்' போன்ற உலோகத் தகடு வகைகளைத் தயாரித்து வழங்குகின்றன.

தூக்கிச் செல்லக்கூடிய அபிவிருத்தி செய்யப்பட்ட விசைச் செக்கு ஒன்றின் மாதிரியை டான்சி உருவாக்கி கைவினைஞர்களின் உபயோகத்திற்காக அவைகளைக் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்திற்கும் மற்றும் மாநிலக் கதர் கிராமத் தொழில் வாரியங்களுக்கும் வழங்கி வருகிறது.



**உதக மண்டலத்திலுள்ள டான்சியில் கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை, பெங்களூர் இந்துஸ்தான் இயந்திரத் தொழிற்சாலையின் ஒத்துழைப்போடு, மாதந்தோறும் சுமார் 23,000 கைக்கடிகாரங்கள் தயாரிக்கின்றது.**

**முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ், ரூ. 523 இலட்**





**சத்திற்கான சமையல் பாத்திரங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் டான்சி வழங்கியதில் பெருமிதம் கொள்கிறது.**

## தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

தமிழ்நாட்டில் தோல் தொழிலைப் பல வகைகளிலும் வளர்ச்சியுறச் செய்யும் நோக்குடன் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் ஜூலை 1982ல் அமைக்கப்பட்டது.

அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஊக்கமளித்தலும், குறிப்பாக சிறிய அளவில் தோல் பதனிடுவோர் மற்றும் காலணி, தோல் பொருட்களை உற்பத்தி செய்வோர்க்கு உதவுவதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இந்தநிறுவனம் 1983ஆம் ஆண்டு ஜுன் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இந்நிறுவனம் முதற் கட்டமாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையில் பொது வசதி மையங்களை அமைக்க உத்தேசித்துள்ளது. மேலும் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஆகியவற்றிற்கான பொது வசதி மையங்கள், மூலப்பொருட்களுக்கான வங்கி மற்றும் வடிவமைப்பு மையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சிறுதொழில் தோல் முனைவோர்களை மற்றும் கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் காலணி மற்றும் தோல் பொருட்களின் விற்பனைக்கு வகைசெய்து தரப்படும். இந்நிறுவனம் கைவினைஞர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நான்கு அல்லது ஐந்து சங்கங்களை நிறுவி, காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யவும், அவைகளுக்குச்சந்தை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்த இந்நிறுவனம் 1984-85ஆம் நிதியாண்டுக்கு ரூ. 350இலட்சம் மூலதனச் செலவில் **திட்டங்களைத் தீட்டியுள்ளது.**

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால், அவர்கள் மக்கள் தொண்டர்கள் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில்தான் நாங்கள் எங்கள் பணிகளைச் செய்து வருகிறோம். அரசியல் - சாதி - மதம் பார்த்து நாங்கள் எங்கள் பணியைச் செய்யவில்லை; மக்கள் தேவையறிந்தே செயல்படுகிறோம்.





# தமிழகத்தில் மீன் வளம்

**மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்**

**திரு. க. கலைமணி**

தமிழ்நாடு இந்தியாவின் தென் கோடியிலுள்ள ஒரு முதுமை வாய்ந்த கடல் மாநிலமாகும். இந்தியாவின் மொத்த கடற்கரையின் நீளமான 6536 கிலோ மீட்டரில் தமிழ்நாடு 1000 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டு நாட்டிலே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

வடக்கே செங்கை மாவட்டத்திலுள்ள திருமலை நகரிலிருந்து தெற்கே குமரி மாவட்டத்திலுள்ள நீரோடி வரை 402 கடல் மீனவர் கிராமங்களைக் கொண்டுள்ளது. இந்தக் கிராமங்களின் மொத்த மீனவர் மக்கட்தொகை சுமார் 3.37 இலட்சமாகும். இது தமிழகத்தின் மொத்த மக்கட்தொகையான 482.97 இலட்சத்தில் மிகக் குறைந்த ஒரு அங்கமாகும். இந்தியா எட்டுக் கடல் மாநிலங்களைக் கொண்டு திகழ்வதுபோல், நமது தமிழகமும் எட்டுக் கடல் மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் 3.69 இலட்சம் எக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் உள்ளன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நிறைவேற்றும் பல்வேறு வெற்றிகரமான முன்னேற்றத் திட்டங்களினால் 1980-81-ல் 2,16,000 டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி, கடந்த நான்கு ஆண்டுகளில் 2,40,000 டன்னாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் 1,60,000 டன்னாக இருந்த உள்நாட்டு மீன் உற்பத்தியும் 1,75,000 டன்னாக உயர்ந்துள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் கடல் மீன் உற்பத்தியை 3.30 இலட்சம் டன்னாகவும், உள்நாட்டு மீன் உற்பத்தியை 2.25 இலட்சம் டன்னாகவும் பெருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துறையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தினதன் காரணமாக, கடல் மீன் உற்பத்தி இன்று பன்மடங்கு பெருகியுள்ளது.

மொத்த கடல் மீன் உற்பத்தியில் 70 விழுக்காடு சாதாரண நாட்டுப் படகுகள் மூலம் கிடைக்கின்றது. ஆகவே இந்த நாட்டுப் படகுகளை வைத்து மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மீன்பிடி திறனை அதிகரிப்பதற்கு உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

கண்ணாடி இழைப்படகுகளை வழங்குதல், நாட்டுப் படகுகளுக்கு உட்புறம்-வெளிப்புறம் பொருத்தப்பட்ட இயந்திரங்களை வைத்து நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி 20 விழுக்காடு மானியத்துடனும் 80 விழுக்காடு கடன் உதவியுடனும் உட்புறம்-வெளிப்புறம் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள் வலைகளுடன் வாங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

அரசு தற்போது இந்த முறையைச் சிறிது மாற்றி தனி மீனவர்களுக்கு வழங்குவதைக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்குவதாகத் தீர்மானித்துள்ளது. அவ்வாறு வழங்கப்படும் இயந்திரப்படகுகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் பங்கு அடிப்படையில் வரிசைப்படி குறிப்பிடப்பட்ட காலம் வரை மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தினால் பெரும்பாலான மீனவர்கள் பயனடைகிறார்கள்.

கடல் கொந்தளிப்பு மற்றும் கடுமையான பருவநிலைக் காலங்களில் மீன்பிடி விசைப்படகுகள் தங்குவதற்குப் பொருத்தமான இடங்களில் மீன்பிடி துறைமுகங்களும் இறங்குதுறை வசதிகளும் மத்திய அரசின் உதவியுடன் பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 1982-83ஆம் ஆண்டு கோடியக்கரையில் தங்குதுறை வசதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் பெரிய மீன் பிடி துறைமுகம் ஒன்று முடியும் நிலையிலுள்ளது. இதில் 500 விசைப்படகுகளும், 50 பெரிய மீன்பிடி டிராலர்களும் தங்குவதற்கு வசதி உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் ரூபாய் 234 இலட்சம் செலவில் மீன்பிடி துறைமுகம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இதுபோன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாற்றில் ஒன்றும் ரூபாய் 67.32 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இராமநாதபுர மாவட்டத்தில் வாலிநோக்கம், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களில் தங்குதுறை வசதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப் பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆர்க்காட்டுத்துறை, திருமுல்லைவாசல், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏர்வாடி, பாம்பன், செங்கை மாவட்டத்திலுள்ள பழ

வேற்காடு, கோவளம், கடப்பாக்கம், எண்ணூர், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காயல்பட்டினம், வீரபாண்டியன் பட்டினம், மணப்பாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம், குளச்சல் ஆகிய இடங்கள், சிறிய இறங்குதுறை வசதிகள் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், மண்டபம் மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் மீன்பிடி துறைமுகம் மற்றும் தங்குதுறை வசதிகளில் 550 மீன்பிடி விசைப்படகுகள் தங்குவதற்கு வசதியுள்ளது.

பிடிக்கப்பட்ட மீனைப் பத்திரமாக இறக்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், மீன் அங்காடிகளுக்கு உடனே எடுத்துச் செல்ல வாகன வசதி போன்ற அடிப்படை வசதிகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாற்றில் ரூ. 28.00 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் மற்றும் தொண்டி ஆகிய இரண்டு இடங்களிலும் முறையே ரூ. 24.00 இலட்சம், ரூ. 5.60 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடல் பொருள் ஏற்றுமதி உற்பத்தி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெற்று பழவேற்காடு, கோட்டைப்பட்டினம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் மீன் இறங்கும் மேடைகள் கட்டப்பட்டுள்ளன. அக்கரைப்பேட்டை (தஞ்சை), தூத்துக்குடி தெற்கு ஆகிய இடங்களில் இதுபோன்ற மீன் இறங்கும் மேடைகள் அமைக்க 1982-83-ல் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.


வழிகாட்டி விளக்கு

கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெற்று தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர்ந்த மீன் கிடங்கு அங்குள்ள மீனவர்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

இரவு நேரங்களில் மீனவர்கள் தங்களுடைய கலன்களைப் பத்திரமாகக் கரைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக வழிகாட்டி விளக்குகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோரக் கிராமங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. நடப்பு காலத் திட்டத்தில் 40 கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ரூ. 11.10 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது.



உள்நாட்டு மீனவர்களை ஊக்குவித்து கூட்டின மீன்வளர்ப்பு மூலமும் நல்ல மேற்பார்வைத் திறனுடனும் மீன் உற்பத்தியைப் பெருக்க 12 முகமைகள் தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, பெரியார், தஞ்சாவூர் (இரண்டு பிரிவுகள்), திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களில் செய்யப்பட்டு வருகின்றன.

மீன்வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக இதுவரை சுமார் 2616 எக்டேர் உள்நாட்டு நீர்நிலைகள் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளால் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2538 மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் எக்டேர் ஒன்றுக்கு 250 கிலோவாக இருந்த சராசரி மீன் உற்பத்தி, சுமார் 750 கிலோவாக உயர்ந்துள்ளது. இந்த முகமைகள் உள்நாட்டு மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, மக்களுக்கு நியாய விலையில் மீன் கிடைக்கவும் வழிவகை செய்கின்றன.

கடலில் கிடைக்கும் இறால் ஒரு தங்கச் சுரங்கமாகும். இது நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியையும் கொடுக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாகக் கடலிலிருந்து கிடைக்கும் இறால் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. எனவே புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி இறால் உற்பத்தியை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன் ஆரம்பக் கட்டமாக சோதனை முறையில் கழிமுகப் பண்ணைகளில் இறால் வளர்ப்புப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஒரு எக்டேரில் அறுவடை ஒன்றிற்கு 500 கிலோ வரை இறால் உற்பத்தி செய்ய முடியும் என்ற உண்மை ஆராய்ச்சி மூலம் தெரிய வருகின்றது. ஆகவே, மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு 150 எக்டேர் பரப்பளவுக்குப் பழவேற்காடு, தொண்டியக்காடு, வாலிநோக்கம் ஆகிய மூன்று இடங்களில் இறால் மீன் பண்ணைகள் நிறுவுவதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதிலும், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றது.

கடுமையான பருவநிலை காரணமாக கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத காரணங்களில் உதவும் பொருட்டு, இத்திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி வருமானம் கிடைக்கும் காலமான ஒன்பது மாதங்களில் மாதம் ஒன்றிற்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களான மீனவர்கள் மட்டும் மாதம் ரூ. 10 வீதம் 9 மாதங்களுக்குச் செலுத்த வேண்டும். இந்த ரூ. 90 உடன் அரசு மானியமாக ரூ. 90-ம் சேர்த்து, வருமானம் இல்லாத மற்ற மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ. 60 வீதம் மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆபத்தையே வாழ்வாகக் கொண்டு இயங்கும் மீனவர்கள், சங்குக் குளிக்கும் தொழிலாளர்கள், தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது உயிர் இழந்து விட்டால், அவர்களது குடும்பங்களுக்கு ரூ. 5 ஆயிரம் தருகின்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வந்தது.

ஆனால் தலைவனை இழந்த குடும்பம் தகுதியோடு வாழ இந்த 5 ஆயிரம் ரூபாய் போதாது என்பதை உணர்ந்த அரசு, மீனவர்களுக்கு ரூ. 15,000 தருகின்ற வகையில் புதிதாக விபத்து மற்றும் காப்பீட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வரு




கிறது. இத்திட்டத்திற்கு மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 1-4-83-ல் ஒப்புதல் அளித்தது.

இப்புதிய திட்டத்தின்படி மீனவர்கள் கட்ட வேண்டிய ஆண்டுத் தொகையான ரூ. 12ல் ஆறு ரூபாயை மத்திய அரசும், மூன்று ரூபாயைத் தமிழக அரசும் மீதமுள்ள 3 ரூபாயை மீனவர்களும் செலுத்துவது என முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

மீனவர்கள்பால் பேரன்பு கொண்ட புரட்சித் தலைவரின் கட்டளையின் பேரில், இனி அந்த மூன்று ரூபாயைக்கூட மீனவர்கள் கட்டவேண்டியதில்லை. அவர்கள் சார்பாக அரசே கட்டுவது என்று தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் ஒருவர் மரணமடைந்தால் குடும்பத்திற்கு ரூ. 15 ஆயிரம் வழங்கப்படும். அவரது உடலில் ஏதாவது ஒரு பகுதியில் நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ. 7 ஆயிரத்து 500 வழங்கப்படும்.

ஆண்டுதோறும் கடலோரப் பகுதியிலுள்ள மீனவர்களின் குடிசைகள் புயல் காலங்களில் நாசமாகின்றன. இதை நிவர்த்தி செய்யும் நோக்கோடு தமிழக அரசு நிரந்தர வீடுகளைக் கடலோரப் பகுதியில் கட்டி, மீனவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து வருகின்றது. 9931 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்து, இவற்றில் 7535 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்களுக்கு இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசு இதற்கென்று ஆண்டுதோறும் ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்து வருகின்றது.

பெருமபாலான கடலோர மீனவ கிராமங்களுக்குச் சரியான சாலை வசதி இல்லை. இதை நிவர்த்தி செய்யும்எண்ணத்துடன் இந்த அரசு 1980-ஆம் ஆண்டு முதல், மீனவர் கிராமங்களையும் குடியிருப்புகளையும் மீன் விற்பனை நிலையங்களையும் இணைக்க, சாலைகள் அமைக்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றது. ரூ. 130 இலட்சம் செலவில் 52இணைப்புச் சாலைகள் போட அரசு ஒப்புதல் அளித்துப் பணிகள் பெருமளவில் முடிந்து விட்டன. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 62.5 இலட்சம் செலவில் 20 இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1984-85ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு மீனவர்களுக்கு மட்டுமின்றி மீனவ மகளிருக்கும் விரிவாக்கப் பணிகளைக்கொண்டு மேம்பாடு செய்யத் திட்டம் வகுத்துள்ளது. மீனவ மகளிரும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். தமிழ்நாடு மீன்துறைமீனவமகளிர் விரிவாக்க சேவைக்கென்று ஒரு பெண் உதவி இயக்குநரை நியமித்துள்ளது.

செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மீனவ கிராமம்தேர்ந்தெடுக்கப்பட்டுமீனவப் பெண்களின் நலனுக்காக மேற்படி பெண் உதவி இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றன.

இம்மாவட்டங்களில் முறையே திருச்சினாங்குப்பம், கரையூர் தெரு, தருவைகுளம் ஆகிய மீனவக் கிராமங்களில் மீனவ மகளிரிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தல், வலை பின்னுதலுக்குப் பயிற்சி அளித்தல், தையல் இயந்திரம் வினியோகம் செய்தல், கைத்தறிச் சேலைகள் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கென மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இது போன்று சென்னையில் 5 சங்கங்களும், செங்கை மாவட்டத்தில் 4 சங்கங்களும், தஞ்சை, தென்னார்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ஆக 12 கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.

வணிக ரீதியாக உள்ள மீன் வளத்திட்டங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, செயல்பட்டுவருகின்றன. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இரண்டு மெக்சிகன் இழுபடகுகளைக் கொண்டு முக்கியமாக இறால் பிடிக்கப்படுகின்றது. கழகம் தற்போது இறால் ஏற்றுமதி செய்வதிலும் முனைந்து செயல்படுகின்றது. பிப்ரவரி 1983-லிருந்து இதுவரை 75 டன் இறால் ஏற்றுமதி செய்துள்ளது. இதனுடைய மதிப்பு ரூ. 70. 45 இலட்சமாகும்.



அடுத்தபடியாக, பொதுமக்களுக்குத் தரமான மீன்களை நியாய விலையில் விற்பனை செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. தற்போது சென்னையில் 59 மீன் அங்காடிகளையும் மதுரை, கோவை, திருச்சி, பெரியார் மற்றும் வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் 54 மீன் அங்காடிகளையும் பொது மக்களுக்காக நடத்தி வருகின்றது.


தமிழுக்குத் தனிச்
சிறப்பு: சிறந்த
கவிஞர்க்குப்
பாவேந்தர் விருது.
சிறந்த எழுத்தாளருக்குத்
திரு.வி.க விருது.
கிருஷ்ணா நதி
சென்னை மாநகரின்
குடி நீர்ப் பிரச்சனையைத்
தீர்க்கக் கிருஷ்ணா
நதியிலிருந்து தண்ணீர்
கொண்டு வரும் திட்டம்.
ஏற்கெனவே
இருந்துவரும்
போக்குவரத்துக்
கழகங்களுடன்
புதிய போக்குவரத்துக்
கழகங்கள் தொடங்கப்
பட்டுள்ளன.
மருது பாண்டியர்



கல்விக்கு 1984-85ல்
ரூ. 402 கோடி
ஒதுக்கப்பட்டுள்ளது.
1983-84
முதல் 5 ஆண்டு
சட்டப் படிப்பு.
தஞ்சை, திருச்சி, கோவை
கொடைக்கானல்
இடங்களில் ஆகிய
பல்கலைக்
கழகங்கள்
உருவாகியுள்ளன.
காரைக்குடியில்
விரைவில்
பல்கலைக் கழகம்
தொடங்கப்பட உள்ளது.
திருச்சி
கோவை
காரைக்குடி
அரசு
ரூ 10
ஆயிரத்துக்கு மேல்
அரசு ஊழியர்
மாதம் ரூ. 20 மட்டும்
செலுத்தி, ஓய்வு
பெறும்போது
ரூ. 10 ஆயிரத்துக்குமேல் பெறும்
திட்டம் 1984 எப்ரல்
திங்களில் அறிமுகம்
செய்யப்பட்டுள்ளது.
2 வயது முதல்
14 வயது வரை உள்ள
65 லட்சம் குழந்தைகளுக்கு
சத்துணவு வழங்கப்படுகிறது.


நலிந்த பிரிவினருக்குக் கடன் உதவி செய்வதற்காக அரசு 15-7-83 ல் ஏற்படுத்தியுள்ள நிதி நிறுவனங்கள் துறையின்மூலம் சுமார் 2லட்சம்பேர் பயனடைந்துள்ளனர்.
காய்கறிக் கடை
சூடான தோசை கிடைக்கும்
பூவோ.. பூவு!
1983 டிசம்பர் வரை நிலமற்ற ஏழைகளுக்கு 9,023 ஏக்கர்நிலம் வழங்கப்பட்டுள்ளது. 1,49,413 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.
நிலப் பட்டா
வீட்டு மனை பட்டா
ஏறக்குறைய 2 லட்சம் முதியவர்களுக்கு மாதம் ரூ. 35 உதவித் தொகை வழங்கப் படுகிறது. சத்துணவும் வாரத்திற்கு அரை கிலோ அரிசியும் அளிக்கப்படுகிறது.
அரிசி




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.